# கைத்தடி

மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

■ தடி-2, அடி-4 ■ ஜூலை 2018 ■ தனிச்சுற்றுக்கு மட்டும் ■ நன்கொடை ரூ.20




## அது என்ன பாடம்?

## தகுதியில்லாதவர்கள் நடத்தும் தகுதித் தேர்வு!

# திருவள்ளுவர் பொத்தக இல்லம்

படிக்க ❋ பாதுகாக்க ❋ பரிசளிக்க

## தகடூர் நகரின் தனிச்சிறப்பான பொத்தக அங்காடி

- தலைசிறந்த பதிப்பகங்களின் தமிழ் மற்றும் ஆங்கில பொத்தகங்கள் அனைத்தும் கிடைக்கும்
- பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு தேவையான Reference பொத்தகங்கள் அனைத்தும் கிடைக்கும்
- தன்னம்பிக்கை, வாழ்க்கை வரலாறு, வணிகம், மருத்துவம், இலக்கியம், கவிதை, ஆன்மிகம், ஜோதிடம், கதை, கட்டுரை, வரலாறு, நாவல்கள், பொதுஅறிவு, அகராதி, காப்பியங்கள் ஆகிய தலைப்புகளின் பொத்தகங்கள் கிடைக்கும்
- பொத்தகங்களை வாட்ஸ்அப் வழியாகவும் ஆர்டர் செய்யலாம் வாட்ஸ் ஆப் எண் 93602 24172

## உயரிய நோக்கங்கள் கொண்ட புத்தகங்கள் ஒரே இடத்தில்

**திருவள்ளுவர் பொத்தக இல்லம்**

51/25A, Dr.L.S.N. வணிக வளாகம்,

ஆறுமுகம் ஆசாரி தெரு, தருமபுரி – 636 701

93602 24172

thiruvalluvarbooks@hotmail.com



– தனுவசீ –

## வாசகர் பார்வையில்

களச் சூழலுக்கு ஏற்ப பக்குவமாகவும் நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்டுள்ள கைத்தடி மாத இதழ், சமூக நீதியை உரக்கச் சொல்லும் இதழாகத் திகழ்வது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

– மெகிரா கிஷோர்

தற்காலச் சூழலுக்கு ஏற்ப சமீபத்திய நிகழ்வுகளை பதிவிடுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது மற்றும் தலித் பிரச்சினைகளை வெளியிட மறுக்குகின்ற பத்திரிகைகளை போன்று இல்லாமல், தாமாகவே முன்வந்து எழுதுவதும். பெரியாரின் கொள்கையைப் பின்பற்றி செயல்படுவதும் மேலும் குறிப்பிடத்தக்க விசயம்.

– மகிழ்ச்சி ஆ.ராம்குமார்

புதிய புதிய எழுத்தாளர்களை உருவாக்கும் அற்புதமான இதழ். காலத்திற்கு ஏற்ற கருத்துக்களை பல்வேறு வடிவங்களில் கொடுக்கும் பகுத்தறிவு இதழ். தந்தை பெரியாரின் கைத்தடியைப் பெயராகக் கொண்ட இதழ் அதன் கடமையை மிகச் சரியாக செய்கிறது என்று கருதுகிறேன் !

வாழ்த்துகள்!

– உங்களில் ஒருவன்

## மாணவர்களுக்கு...

பெரியோர்களே! தோழர்களே!

நான் அடிக்கடி மாணவர்களுக்குச் சொல்லுவேன், “மாணவர்களே! நீங்கள் படிப்பை ஒழுங்காகக் கவனித்து படியுங்கள்; உங்கள் பெற்றோர்கள் கடன் வாங்கி, எப்படியாவது நீங்கள் படித்து முன்னுக்கு வர வேண்டும் என்கிற ஆசையால் செலவழித்து, உங்களைப் படிக்கவைக்கிறார்கள்; மற்ற மேல்சாதிக்காரர்களைப் போல பார்ப்பனர்களைப் போல உங்களுக்கு யாதொரு விதமான வசதியும் இல்லை; நீங்களாகவே தான் படித்து முன்னுக்கு வர வேண்டும்; அப்படி இருக்கும்போது நீங்கள் படிப்பைத் தவிர வெளி விஷயங்களில் கலந்து கொள்ளாதீர்கள், அவைகளில் எப்போது வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம். முதலில் உங்கள் படிப்பில் முழுக் கவனம் செலுத்தி நன்றாகப் படியுங்கள் என்றெல்லாம் சொல்லுவேன்.

எந்தக் காரியத்திற்கும், அனேகமான நான் மாணவர்களையே அழைக்கமாட்டேன். அவர்களைக் கூப்பிடுவதென்றாலே மிகவும் யோசிப்பேன். ஏனென்றால், அவர்கள் எவ்வளவோ கஷ்டங்களையும் எதிர்ப்பையும் தாண்டிப் படிக்க வேண்டியவர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நாமும் புகுந்து அவர்களைக் கெடுப்பது என்றால் என்ன நியாயம் என்று கருதித்தான், மாணவர்களை வெளி விஷயங்களில் கலந்து கொள்ள வேண்டாமென்று கூறுவேன்.

ஆனால், இன்று அவர்களின் படிப்புக்கே ஆபத்து வந்துவிட்டது என்கிறபோது அவர்களின் படிப்பையே ஒழித்துக்கட்ட வேண்டுமென்று ஒரு இராஜ்யத்துக்கு முதல் மந்திரியும், கல்வி மந்திரியும், வாத்தியார்களும் முயல்கிறார்கள் என்கிறபோது என்ன செய்வது? இந்த அநியாயத்தை, அக்கிரமத்தை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சி செய்து தானே ஆகவேண்டும்?

சாதாரணமாக, மாணவர்களைக் கிளர்ச்சிக்கு அல்லது மற்ற காரியங்களுக்குத் தூண்டுவதே தவறு. அவர்கள் உலக அனுபவம் இல்லாதவர்கள்; எதையும் எளிதில் நம்பிவிடுவார்கள்; இளம் உள்ளத்தில் வேகத்தில் எதுவும் செய்துவிடுவார்கள். அவர்களை இந்த முறையில் பழக்கி அவர்களைச் சிலர் கேடு அடையச் செய்யக்கூடாது. அது பஞ்சுக்குப் பக்கத்தில் ‘பெட்ரோல்’ வைத்து நெருப்புப் பற்றவைப்பது போல ஆகும். மாணவர்களை மாணவர்களுடைய காரியத்தின் அளவுக்கு மட்டும் பயன்படுத்திக் கொண்டு அதிலும் அளவுக்கு மீறிப் போகாமல் கட்டோடு இருக்கச் செய்துகொண்டு, மற்றபடி அவர்கள் கலந்து கொள்ளாதிருக்க விட்டுவிட வேண்டும்; இப்படித் தான் செய்யவேண்டும்.

– (சென்னையில், 5–12–1952ல் சொற்பொழிவு
‘விடுதலை’ 11–12–1952)

# கைத்தடி

மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**மு.சி.அறிவழகன்**

உதவி ஆசிரியர்:
**கா. தமிழரசன்**

ஆசிரியர் குழு:
**புலவர் நாகை பாலு** த.மு.எ.ச.
**முனைவர் கு. முருகேசன்**
**முனைவர் ச.அருண்பிரகாஷ்**

புகைப்படக் கலைஞர்:
**தனுஷவன், ஜோதி வெங்கடாஜலபதி**

ஓவியர்கள்:
**தனுவசி சி.தர்மராஜ், ஓவியர் சிகரன்,**

மெய்ப்புத் திருத்தம்:
**மே.கா.கிட்டு**

இதழ் வடிவமைப்பு:
**டிசைன்ஷாப்,** 76677 55673

களப்பணிக் குழு:
**அ.செ.செல்வம், சி.வீரவேல், கண்மணி, தே.சுரேஷ், அரவிந்த், கவிதாரமேஷ்.**

சட்ட ஆலோசகர்கள்:
**ஆர்.சையத் அன்வர் பாசா,** வழக்கறிஞர்
**ஜெ. தம்பிபிரபாகரன்,** வழக்கறிஞர்

ஆசிரியர் குழு – அலுவலக முகவரி

கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

**மதி பப்ளிகேசன்**
தருமபுரி – 635 205
அலைபேசி: 73733 33078
மின்னஞ்சல்: kaithadimonthly@gmail.com



பேட்டிகள், சிறப்புக் கட்டுரைகளின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கைத்தடி மாத இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல.


## இந்த இதழில்...


| | |
|---|---|
| சா(தீ) | 5 |
| அது என்ன பாடம்? | 6 |
| பெரியார் கண்ட சுயமரியாதை இயக்கம் | 8 |
| பிரசவமும் கவலையும் | 10 |
| தகுதியில்லாதவர்கள் நடத்தும் தகுதித் தேர்வு! | 12 |
| சாதியை அழிப்போம் மனிதத்தை மீட்போம்! | 15 |
| தமிழர் விளையாட்டுகள் - நீச்சல் | 16 |
| ஜனநாயகத்திற்குள்ளே! | 18 |
| மந்திரமா? தந்திரமா? | 19 |
| இந்த உலகம் யாருக்கானது? | 20 |
| பெண் என்றால் மானுடம் | 23 |
| வழக்கறிஞர் அ.அருள்மொழி – நேர்காணல் | 24 |
| எச்சில் தொட்டி | 28 |
| அன்றும் இன்றும் பாலியல் வன்கொடுமைகள் | 30 |
| தள்ளுவண்டி | 32 |
| காணாமல் போன காடும் கரையும்!–கவிதை | 34 |


## கைத்தடி சந்தா விபரம்

தனி இதழ் ₹ 20

| | |
|---|---|
| ஓராண்டு சந்தா | ₹ 250 |
| இரண்டு ஆண்டு சந்தா | ₹ 470 |
| நான்கு ஆண்டு சந்தா | ₹ 950 |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 1200 |

A/C NO: 34939017347
IFSC CODE : SBIN0000832
NAME : ARIVAZHAGAN.C
PHONE NO : 7373333078
State Bank of India, Dharmapuri

**கௌசல்யா சங்கர்**



# சா(தீ)



அவர் வழக்குரைஞருக்கு படித்துக் கொண்டிருப்பவர். தோழர் ஒருவர் நன்றாகப் படி இந்த வழக்கை உற்றுக் கவனி என்றார். அதற்கு அவள் நான் வழக்கறிஞர் ஆக வேண்டும் என்பது சண்முகநாதன் அண்ணனின் கனவு என்றார். கனவு நனவாக அவர் உழைப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இங்கே பட்டியலின மக்கள் கல்வி அறிவில் உயர்ந்தவர்கள். அதுமட்டுமல்ல ஒவ்வொரு வீட்டிலும் அரசாங்க ஊழியர்கள் இருக்கிறார்கள். ஆனால் பிற்பட்ட சுமன் குடும்பமோ கல்வி அறிவில்லாதவர்கள். இம்மக்களின் வளர்ச்சியை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தாழ்த்தப்பட்டவன் வருவாய் ஆய்வாளர் வேலை வரைக்கும் செய்கிறார்களே. நம்மை எப்படி மதிப்பார்கள். நம்மால் அவர்களை அதிகாரம் செய்ய இயலாதே. அவர்கள் கால் மேல் கால் போட்டு உட்காருவதும் கூட இவனுக்குக் குத்துகிறது.

செல்வி என்ற ஒரு அக்காவிடம் பேசிக்கொண்டிருந்தோம். நாளிதழ்களில் இருதரப்பினர் மோதல் என்று குறிப்பிடுகிறீர்கள் நாங்கள் எங்கு அவர்களை வெட்டிச் சாய்த்தோம்... அவர்கள்தானே எங்களை வாழைமரம் போல் வெட்டிப்போட்டுச் சென்றார்கள். முதல் மரியாதை தரவில்லை என்கிறார்கள். அதுவல்ல எங்கள் பிரச்சனை. சாதிதான் அனைத்திற்கும் காரணம். நாங்கள் முன்னேறி விடக்கூடாது என்ற எண்ணம்தான் என்றார்.

இறுதியாகச் சந்திரசேகர் வீட்டிற்குச் சென்றோம். இரண்டு குழந்தைகள். பெண் குழந்தைக்கு பேச இயலாது. நான்கு மணி நேரம் அங்கு இருந்தாலும் அவர்களோடு நான் கரைந்திருந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர்களின் நிலைமை இன்னும் கொடூரமானது. என்று தணியும் இந்தச் சா(தீ)யப் படுகொலைகள் என்றுதான் மனம் தவிக்கிறது. எல்லாவற்றையும் விட நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுள்ளது.

சாதிய அமைப்புகள் படுகொலைகள் செய்த பிற்பட்டவர்களுக்காகக் களம் இறங்கியுள்ளது. என் வழக்கிற்கு நிதி திரட்டியது போலவே இதற்கும் சில முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். அதில் முதலாவதாக பட்டியலின மக்களைச் சமூக விரோத சக்திகளாகக் காட்ட முயற்சிக்கிறார்கள். அதற்கு ஒரு சான்றையாவது அவர்களால் காட்ட முடியுமா? அப்படிச் செய்தவர்கள் மீது காவல்துறையில் இதுவரை இவர்கள் முறையிட்டதில்லை. சட்டப்படியான எந்த நடவடிக்கைக்கும் போகவில்லை. இன்று சொல்கிறார்கள் பள்ளர்கள் எங்களை மிரட்டுகிறார்கள். தொடர்ந்து வம்பிழுக்கிறார்கள் என்று. எல்லாம் இருக்கட்டும் எதற்கென்றாலும் ஊர் புகுந்து கண்ணில்பட்டவர்களை எல்லாம் வெட்டிச் சாய்க்க உங்களுக்கு யார் அதிகாரம் தந்தது. சட்டம் அந்த அதிகாரத்தை உங்களுக்குத் தரவில்லை. ஆனால் உங்கள் சாதிக்கு இந்தச் சாதியச் சமூகம் பள்ளர்களை வெட்டிக் கொல்ல அதிகாரம் தந்திருக்கிறது. அந்த அதிகாரத்தை ஒட்ட நறுக்க வேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்விதான் முதன்மையானது.

அவர்களும் தமிழர்கள் இவர்களும் தமிழர்கள். தூத்துக்குடி, காவிரிக்காகத் தமிழர்கள் ஒற்றுமையோடு போராடும் போது இப்படி ஒன்று நடந்துவிட்டது என்று வருத்தப்படுகிறோம். உண்மையில் அந்த வருத்தம் உண்மையானால் இந்த நிகழ்வில் அந்தச் சாதி வெறியர்களைத் தண்டிக்க நாம் உறுதி ஏற்க வேண்டும். அப்படிப்பட்டச் சாதி வெறியர்கள் தமிழர் ஒற்றுமைக்குள் ஒளிந்துகொள்ள இடமளிக்க விட்டுவிடக் கூடாது. காவிரிக்காக, தூத்துக்குடிக்கான போராட்டத்தில் நிற்கிற நாம் இந்தப் போராட்டத்திலும் பட்டியலின மக்களோடு இணைந்து நிற்க வேண்டும். சாதி ஒழிப்பு இலக்கில்லாதத் தமிழர்கள் ஒற்றுமை என்பது மீண்டும் நம்மைப் பார்ப்பனீயத்திற்கே அடிமையாக்கும்.

மெய்யான தமிழர் ஒற்றுமையைக் கட்டி எழுப்புவோம். அதற்கு இந்தச் சாதி வெறியர்களை சமரசமின்றி எதிர்த்து நிற்போம். தமிழன் என்றால் அந்தச் சொல்லுக்குரிய இலக்கணத்தில் சாதிக்கு இடமே இல்லை. சாதிக்கு எதிரான, சுரண்டலுக்கு எதிரான, இயற்கைச் சூறையாடலுக்கு எதிரான அணிதிரட்சிக்குத்தான் தமிழர்கள் என்ற அடையாளம் பொருந்தும். அந்த வகையில் சாதி ஒழிப்பில் ஊன்றி நின்றால்தான் நாம் தமிழர்கள் என்பதற்கு பொருளிருக்கும். அப்படி ஒரு தமிழ்த் தேசியத்தை வென்றெடுப்போம். ●



▪ ஜூலை 1 - (1852) இந்தியாவில் அரை அணா தபால் தலைகள் கராச்சியில் வெளியிடப்பட்டன.



# அது என்ன பாடம்?

யாழினிக்கு திக்குத் தெரியாத கான்கிரீட் காட்டில் தள்ளி விட்டது போல் இருந்தது. தன் கிராமத்தில், சரியா இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை பார்க்கக் கூடிய ஒரே ஒரு பேருந்து போல் இல்லாமல், இங்கே கோயம்பேட்டில் கடல்போல் குவிந்து, எறும்பு போல் அங்கும் இங்கும் ஊர்வதைப் பார்க்க வியப்பாய் இருக்கிறது. தேனீர்க் கடையில் ஆண்கள் பெண்கள் இருவருமே சமமாகத் தேனீர் அருந்திக் கொண்டு அமர்ந்திருக்கிறார்கள். தேனீர்க் கடையிலோ எல்லோரும் ஒரே வகையான கோப்பையையே பயன்படுத்துவதும் வியப்பாய் இருக்கிறது.

யாழினி தனியாக வந்திருக்கிறார். அவர் என்ன செய்வார்? அவர் தந்தைக்கு உடல் நோவு ஏற்பட்டு, அரசாங்க மருத்துவமனையில் திடீரென அனுமதிக்கப்படாமல் இருந்திருந்தால், இந்த கான்கிரீட் காட்டுக்குள் தந்தையுடன் வந்திருப்பார். தந்தையும் தாயும் கிராமத்துக்கு அருகில் உள்ள அரசாங்க மருத்துவமனையில். யாழினியோ தமிழ் நாட்டு தலை நகரில் தனியாய். ஆனாலும் உறுதியாய். நேற்று இரவு அரியலூரில் பேருந்து ஏறும் முன்னர் அம்மா கடன் வாங்கிக் கொடுத்த பணம் பத்திரமாக இருக்கிறதா? என்று தன் கைப்பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார். பணமா முக்கியம்? அதைக் காட்டிலும் முக்கியமான தன் கல்விச் சான்றிதழ்கள் இருக்கிறதா? என்று பையைத் திறந்து சரி பார்த்துக் கொண்டார். அனைத்தும் பாதுகாப்பாகவே இருக்கிறது.

எல்லோருக்கும் எடுப்பது போல் யாழினிக்கும் தாகமும், பசியும் எடுக்கிறது. குடும்பச் சூழல் காரணமாக தாகத்தையும், பசியையும் கட்டுக்குள் வைத்திருக்கும் வித்தையை அறிந்தவர் யாழினி. ஆனாலும் இன்று அந்த வித்தைக்கு வேலை இல்லை. அதான், அம்மா கடன் வாங்கிக் கொடுத்த பணம் இருக்கிறதே! கண் முன்னே தேனீர் விடுதியும், உணவு விடுதியும் இருக்கிறதே! சும்மா விடலாமா? காலாற நடந்து உணவு விடுதிக்குள் சென்று, எல்லோரும் குடிக்கும் அதே கோப்பையில் தேனீர் குடித்து, கண்களால் கண்டிராத, காதால் மட்டுமே கேட்டறிந்த பூரி மசாலாவை ஆசையுடன் கேட்டு வாங்கி, ரசித்து ருசித்து உண்டாள். சாப்பிடட்டுமே! நம் பிள்ளைதானே! வயிறார சாப்பிடட்டுமே! கடந்த இரண்டு ஆண்டாக வீட்டு வேலை, தெரு வேலை, தோட்ட வேலை, வயல் வேலை எல்லாம் செய்தும்; மாதா மாதம் பெண்ணுக்கே உரிய இயற்கை உடல் நோவுமாய் இருந்தும்; நடந்தே பள்ளிக்கூடம் சென்றும்; நேரம் வாய்க்கும் போதெல்லாம் தன் பள்ளிப் புத்தகத்தை மட்டுமே படித்து, படித்து, படித்து, படித்து நல்ல மதிப்பெண் பெற்றிருக்கிறார். அவர் ரசித்து, ருசித்து சாப்பிடட்டுமே! நம் பிள்ளைதானே!!

யாழினி எடுத்த மதிப்பெண்ணுக்கு நிச்சயம் அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கும். எந்த அரசு மருத்துவக் கல்லூரி என்று இன்று தெரிந்து விடும் என்று நம்புகிறார். யாழினி ஆட்டோப் பிடித்து, பேரம் பேசத் தெரியாமல் கேட்டப் பணத்தை கொடுத்து மருத்துவ கவுன்சிலிங் நடக்கும் இடத்தைச் சேர்கிறார். எங்கும் அலை அலையாய் மாணவர் தலை. ஒவ்வொரு மாணவர் தலையுடன் அவர் பெற்றோர் தலையும் தட்டுப்படுகிறது. தனித்த தலை யாழினி தலையே. சற்றே ஆறுதலாய், ஓர் அரச மரத்தடியில் உள்ள பலகையில், தண்ணீர் தாகம் எடுத்தாலும், தாகத்தை

அடக்கிக் கொண்டே அமரச் செல்கிறார். பலகையில் தூசி இருக்கிறதே என்று துளியும் கவலையில்லை. பலகையில் உள்ள தூசியோடு தான் அணிந்திருந்த உடையோ போட்டி போட்டுக்கொண்டு இருந்ததால், தூசியைப் பற்றி கவலையே கிஞ்சிற்றும் இல்லை. பலகையில் அமர்கிறார். தான் மருத்துவர் ஆகப் போகும் கனவை எண்ணி எண்ணி ஆனந்தத்தில் திளைக்கிறார்.

அப்போது, மருத்துவ கவுன்சிலிங் நடக்கும் வளாகத்திற்குள் பளபளப்பான, பொலிவான, ஒரு வெளிநாட்டு மகிழுந்து மெல்ல மெல்ல மாணவர் கடலில் ஊர்ந்து வருகிறது. உள்ளே யார்? எத்தனை பேர்? என்று வெளியில் தெரியாத வகையில் கண்ணாடி மூடப்பட்டும், மறைக்கப்பட்டும் இருக்கிறது. அந்த மகிழுந்து ஊர்ந்து யாழினி அமர்ந்திருக்கும் அரச மரத்தடிக்கு அருகில் வந்து நிற்கிறது. மகிழுந்தில் இருந்து நால்வர் இறங்குகின்றனர். அனைவரும் புத்தாடை அணிந்துள்ளனர். ஒரு பெண், அவர் தாய், தந்தை மற்றும் தம்பி. அவர்கள் இறங்கிய பின் மகிழுந்து மீண்டும் தன் ஊர்தலைத் தொடர்ந்தது. நால்வரும் யாழினி அமர்ந்திருக்கும் பலகைக்கு அருகில் உள்ள பலகையில், கையோடு கொண்டு வந்த துணியை விரித்து அமர்கின்றனர். அமர்ந்த பின்னர், நால்வரும் அளவளாவுகின்றனர். இல்லத்தில் இருந்து கொண்டு வந்த பழச்சாற்றை பகிர்ந்து அருந்துகின்றனர்.

அந்தப் பையன் தன் அக்காவை ஸ்ரீலஸ்ரீ-யை பகடி செய்கிறார். "இனிமே நீ டியூஷன், கோச்சிங் போகனுமா? இல்ல இன்னையோட எல்லாத்துக்கும் முழுக்கா?"

அந்தப் பெண் ஸ்ரீலஸ்ரீ-யோ, "ஆமாடா! இனிமே இந்த தொல்லையெல்லாம் இல்ல. எல்லாம் ஒரு வழியா ஒழிஞ்சது. நிம்மதியா தூங்கி எந்திரிச்சு காலேஜ் மட்டும் போனா போதும். இனிமேயும் என்ன காலையில தூங்கவிடாம பண்ணின, டாக்டராகி, உனக்கு தூக்க ஊசி போட்டு உட்றுவேன்" என்று சிரித்தாள். அனைவரும் கல கலவென சிரித்தனர்.

இவற்றையெல்லாம் கேட்க வேண்டுமே என்று கேட்காமல், காதில் விழுந்ததால் கேட்டதால், யாழினியும் புன்முறுவல் புரிந்தாள். சிறிது நேரத்தில், ஸ்ரீலஸ்ரீயின் தாய் தந்தையர் ஏதோ வாங்கச் செல்கின்றனர். ஸ்ரீலஸ்ரீ-யும் அவர் தம்பியும் ஆங்கிலத்தில் உரையாடத் தொடங்கினர். இதுவரையில் விரும்பாமல் காதில் விழுந்தது புரிந்தது. இப்போது, யாழினிக்கு விரும்பி கேட்க முனைந்தாலும் அவர்கள் பேசுவது ஏதுமே புரியவில்லை.

தமிழ்வழிக் கல்வியில் படித்த யாழினிக்கு சற்றேனும் சொல்லத் தெரிந்த ஆங்கில வார்த்தை 'குட் மார்னிங்'. இதைத் தாண்டி யாராவது பேசினால், யாழினி கணக்கில் அவர்கள் எல்லாம் 'பெரிய இடத்துப் பிள்ளைகள்'. பலகையில் உட்கார்ந்திருக்கும் யாழினிக்கு ஒரு சந்தேகம். மருத்துவ கலந்தாய்வு எங்கே? எந்த இடத்தில்? எப்படி நடக்கும்? என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று.

**யாழினி, "நான் கணக்குப் பாடத்தில் 200, இயற்பியலில் 200, வேதியியலில் 199, உயிரியலில் 194. 'நீட்'-னா? அது என்ன பாடம்? எங்க பள்ளிக் கூடத்தில 'நீட்' பாடம் சொல்லித் தரலியே!"**



சந்தேகத்தைக் கேட்டே விடுவது என்று பக்கத்து பலகையில் அமர்ந்திருந்த ஸ்ரீலஸ்ரீ-யிடம் சென்று, "மருத்துவ கலந்தாய்வு நடக்குற அலுவலகம் எங்க இருக்கு?" என்கிறார். இதைக் கேட்ட உடன், ஸ்ரீலஸ்ரீ-யும் அவர் தம்பியும் தங்கள் பேச்சை நிப்பாட்டி விட்டு, யாழினியையே வியப்பாய் பார்த்தார்கள். யாழினிக்கோ கூச்சமாய் போய்விட்டது. சரியாதான் கேட்டோமா? கேக்கக் கூடாதது ஏதும் கேட்டுட்டோமா? என்று.

ஸ்ரீலஸ்ரீ-யின் தம்பி,"வாட்?" என்றார்.

அப்போதுதான், யாழினிக்கு பொறி தட்டியது, நாம கேட்டதுல ஏதோ கோளாறு போலன்னு. தயங்கி தயங்கி, தடுமாறிய ஆங்கிலத்தில், "கவுன்சலிங் ஆபிஸ்?" என்று சொல்லிகிட்டே கையை சைகையாலே மேலும் கீழும் ஆட்டி 'எங்கே?' என்று வினவினார்.

ஸ்ரீலஸ்ரீ-யின் தம்பிக்கு இப்போது சிரிப்பு வந்துவிட்டது.

ஸ்ரீலஸ்ரீ யாழினியின் கேள்வியைப் புரிந்து கொண்டு, "இந்த ரோடு வழியா நேரா போனா கடைசி பில்டிங்ல நடக்கும்." என்றார்.

யாழினி, "நன்றி! உங்களுக்கும் இன்னிக்குத்தான் கவுன்சலிங்கா?"

ஸ்ரீலஸ்ரீ, "இல்லை. நான் சும்மா பாத்திட்டு போகதான் வந்தேன். எனக்கு அப்பா *Private College*-ல் *Apply* பன்னியிருக்காங்க. அதில கெடச்சிடும். நீ ஏன் தனியா இருக்க? உங்க வீட்ல எல்லாம் எங்க?"

யாழினி, "இல்லை. எங்கப்பாவ அவசரமா ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கோம். அதான் யாராலயும் வர முடியல."

ஸ்ரீலஸ்ரீ, "ஓ! நீ +2ல எவ்ளோ மார்க்?" என ஆர்வமாய் கேட்டாள்.

யாழினி, "1176 மார்க். நீங்க?"

ஸ்ரீலஸ்ரீ, "750 Mark. NEET-ல 150 Mark எடுத்திருக்கேன். நீ NEET-ல எவ்ளோ?"

யாழினி, "நான் கணக்குப் பாடத்தில் 200, இயற்பியலில் 200, வேதியியலில் 199, உயிரியலில் 194. 'நீட்'-னா? அது என்ன பாடம்? எங்க பள்ளிக் கூடத்தில 'நீட்' பாடம் சொல்லித் தரலியே!"

ஸ்ரீலஸ்ரீ மயான அமைதியுடன் வெட்கி நாணுகிறார்,

" ... ... ... ... ... . . ... ... ... ... ... . . ... ... ... ... ... . . ! ...............................................!"

'நீட்' என்றால், கணக்கு பாடம் போல அதுவும் ஒரு பாடம் என்று எண்ணுகிறாரே யாழினி. இதைக் கண்டு சிரிக்கவா முடியும்?


நீட் தேர்வே எழுதாமல் மருத்துவ கவுன்சலிங்குக்கு வந்து இருக்கிறாரே யாழினி, என்று யாழினியின் அறியாமையைக் கண்டு அழவா முடியும்?

தனக்கு கிடைத்த வாய்ப்பில், கடுமையாக உழைத்து மிகச் சிறந்த மதிப்பெண் எடுத்து இருக்கிறாரே யாழினி, என்று மனம் நெகிழ்ந்து பாராட்டவா முடியும்?

'நீட்' - அது என்ன பாடம்? சொல்லித்தருது? ●



▪ ஜூலை 2 - (1972) இந்தியா-பாகிஸ்தான் இடையே சிம்லா ஒப்பந்தம் கையெழுத்தானது.
(1958) மயில்சாமி அண்ணாதுரை - (வான்வெளி ஆராய்ச்சியாளர்) பிறந்த தினம்



# பெரியார் கண்ட சுயமரியாதை இயக்கம்

## நோக்கம்

உலக வரலாற்றில் தனது வாழ்நாளிலேயே தனது கொள்கைகளை வெற்றி பெற்றிட சுயமரியாதை இயக்கத்தின் பங்கு பணிகளை மக்களிடம் பெரும் அளவில் கொண்டு சேர்த்த பெருமைக்குரிய மாமனிதர் தந்தை பெரியார் ஆவார். *1925*-இல் சுயமரியாதை இயக்கம் தோற்றுவித்து அவற்றின் செயல்பாடுகளில் சிலவற்றினைக் காண்போம்.

## ஜோதிடம்

“நீ திடமானால் சோதிடம் எதற்கு?” என்றார் பெரிய பூமி தன்னை தானே சுற்றி, சூரியனைச் சுற்றி வருவது விஞ்ஞானம். கோபர் நிக்கஸ் கூற்றுப்படி பூமி சுற்றுகிறது சூரியன் நிலையானது. இதே வானியல் சோதிடத்தில் பூமியை நிலையாகக் கொண்டு சோதிடமாக கட்டம் போட்டு கிரகங்கள் பூமியைச் சுற்றி வருவதாக உள்ளது. இது சூரியன் உள்பட முற்றிலும் முரணானதாகும் மூடநம்பிக்கைகளே.

மனித மூளையை விடப் பன்மடங்கு சிறிய மூளையுடைய சிட்டுக் குருவி, கிளி, ஏவி கொண்டு சோதிடம் பார்ப்பது எந்த வகையில் அறிவியலாகும். மூடநம்பிக்கையாலும் சோதிடப் புரட்டுகளாலும் சீரழிந்த மக்களை விழிப்புற செய்தவர் பெரியார் ஒருவர் தானே.

தான் கண்ட சுயமரியாதை இயக்கத்தின் மூலம் பட்டிதொட்டி எங்கும், இரவு பகல் பாராது சுற்றிச் சுழன்று பிரச்சாரம் செய்தவர் பெரியார் என்னும் சிந்தனையாளரே தான்.

## கடவுள்

எண்ணிலாக் கடவுளர்களை உருவாக்கி பிரம்மா, சிவன், விஷ்ணு என்பவர்களே முதன்மையாக மனிதனைக் காப்பதாகவும் கூறி பார்ப்பனர்கள் தங்களின் வாழ்வாதாரத்தினைப் பெருக்கிடவும், சோம்பேறிகளாய் வாழ்ந்திட வழி செய்து கொண்டனர். கடவுள் என்றால் அப்படியே ஒத்துக் கொள்ள வேண்டும். ஏன்? எப்படி? எங்கே? என்று கேட்கக் கூடாது என்று கூறிவிட்டனர்.

கடவுளின் பெயரால் அறிவை பாழ்படுத்தும் செயல்களான தேர், காவடி, மண் சோறு, பூமியில் புரளுதல், சாமி ஆடுதல், உயிர்பலி, நரபலி, உடன்கட்டை ஏறுதல், தீக்குடம் ஏறுதல், மயிர்க் காணிக்கை, சோதிட நம்பிக்கை, வாஸ்து சாத்திரம், சடங்கு, சம்பிரதாயம், சகுனம், சாமியார் மோசடி, பாபா லீலைகள், பேய், பில்லி சூன்யம் போன்றவற்றைப் பெரியார் தனது தொடர் பிரச்சாரத்தின் மூலம் ஒழித்துக் காட்டினார்.

பிள்ளைகள் நான்கையும் கொடுப்பதாய்க் கூறும் மனிதர்களைப் பார்த்து, மனைவியை உள்ளே படுக்கவிட்டுவிட்டு, நீ என்ன திண்ணையிலா படுத்துத் தூங்கினாய் என்று கேட்டார் பெரியார். நமது பிள்ளைகளை கெடுத்துக் கடவுள் ஏன் பத்து ஏக்கர் நிலமும், வீடும், வாசலும் ஏன் தரவில்லை என்று கேட்டு சுயமரியாதை இயக்கத்தின் தொடர் பரப்புரையில் வெற்றியைக் கண்டார் பெரியார்.

இரா. முல்லைக்கோ, பெங்களூர்.

## புராண இதிகாசங்கள்

அதி நவீனத் திரைப்படங்கள் போன்று இராமாயணம் மகாபாரதம் ஆகியவற்றை உருவாக்கி கதாநாயகர்களான இராமன், கிருஷ்ணன் ஆகியோர்களை உருவாக்கி ஓவியமாய் வரைந்து, நாகரீகமான பட்டாடைகள், துணிமணிகளைக் கொண்டும் தங்க நகையை உடம்பு முழுவதும் அணிவித்து மனிதர்களைப் போல் உருவாக்கி, உயர்ந்தவர்களாகப் பலகைகளில் பலவித ஆயுதங்களுடன் காட்சிப்படுத்தி, இது தான் கடவுளின் அவதாரம், இவர் ஏழுமலையான், முருகன், விநாயகர், இராமர், கிருஷ்ணர் என்று கதையளந்தனர் ஆரிய பார்ப்பனர்கள்.

இதனால் சுய லாபம் அடைந்தனர் பார்ப்பனர்கள்.

புராணங்களாலும், இதிகாசங்களாலும் கற்பிக்கப்பட்ட கடவுளைப் பார்ப்பனர்களுக்கு நிகரான வாதிக்கின்றனர்.

*“தெய்வா தீனம் ஜகத் சர்வம்*
*மந்த்ரா தினந்து தெய்வம்;*
*தன் மந்திரம் ப்ராமாண தினம்*
*ப்ராமாண மமதேவதாஹா”*

**இதன் பொருள்:** “அகில உலகமும் ஆண்டவனுக்குள் அடக்கம், ஆண்டவன் மந்திரங்களுக்குள் அடக்கம், மந்திரங்கள் அனைத்தும் பிரமாணர்களிடம் அடக்கம். எனவே, பிராமணர்களே நமது கடவுள்.

இதனை ஒரு பித்தாலாட்டம், அயோக்கியர்களின் சூதுத்தனம். இது அப்பட்டமான மோசடி கவலை என்று பெரியார் ஆதாரங்களுடன் கூறி, இராமன் படத்தினை தீயிட்டுக் கொளுத்தியும், பிள்ளையார் சிலைகளை வீதியில் போட்டு உடைத்தார். அவரது செயல் அற்புதமான மெய்விளக்கமாகும். கடவுள், மதம், சாதி இதிகாசங்கள் இல்லை என்பதனைப் பறை சாற்றினார்.

பெரியாரின் போற்றுதலுக்குரிய சுயமரியாதை இயக்கத்தினர் பட்டி தொட்டியெங்கும் பரப்பி சுழன்று பணி முடிக்கின்றனர்.

நம் உரிமைகளை பெற்றுத் தந்திட பெரியார் பட்ட கொடுமைகள் கொஞ்சமா? நஞ்சமா? சொல்லடி, கல்லடி, அழுகிய முட்டையடி, மலத்தையும் வீசினார்கள். ஏன் கால் செருப்பால் அடித்தனர். மறு செருப்பையும் கேட்டு வாங்கினார். கிளர்ச்சி போராட்டங்கள் என எடுக்கப்பட்ட பெரியாருக்கு 30 முறை சிறை தண்டனை கிடைத்தது யாருக்காக? நமக்காகத் தான் என்பதையும் நினைவில் கொள்வீர்.

## சாதி



சாதி என்ற சொல் வடமொழியில் வழக்கத்தில் இருந்து வந்தது. சாதி, மதம் இயற்கை இல்லை, மாறாக கால தேச செய்திகளால் தோன்றியவையே, சாதி மதம் புரட்டு அயோக்கியர்களின் சுய நலத்திற்காக கற்பிக்கப்பட்டது. ஆரிய பார்ப்பனர்கள் இந்தியாவிற்குள் நுழைந்து சுற்றுச்சார்புடன் போராடி, பாதுகாப்பாய் அமைத்துக் கொண்டது தான் சாதி. சங்க காலத்திற்குப் பிறகு வேதம், மனுதர்மம் போன்ற சாஸ்திரங்கள் நம் மொழியில் இல்லை. இந்த வர்ணம், சாதி, பிராமணன், சத்திரியன், சூத்திரன், வருணாஸ்ரமம், இந்து போன்றவை தமிழ்ச் சொற்களே அல்ல.

வேத சாஸ்திரத்தில் மனுதர்மசாஸ்திரத்தில் வர்ணாஸ்ரமதர்மம் முக்கியமாக சாதி வித்தியாசங்கள் உருவாயின. “புருஷசூக்தப்” பகுதியில் படைப்புக் கடவுள் பிரம்மா நான்கு பிரிவுகளாகச் சாதியை படைத்தவர் என எழுதி வைத்துள்ளனர். முகத்திலிருந்து பிராமணர்களையும், தோளில் சத்திரர்களையும், தொடையில் வைசியர்களையும், காலில் சூத்திரனையும் படைத்தாராம். பிறப்பில் பேதத்தைக் கூறியவர்கள், சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே எனக் காரணம் இந்து மதமும், புராணக் குப்பைக் கதைகளும் தான்.

ஏற்றத் தாழ்வுகளை பிறப்பிலேயே போதிக்கின்ற கடவுளையும், மதத்தையும் சாகடித்த பெருமை உண்டு. அவரால் தோற்றுவிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தினர் இன்றைய பரப்புரை செய்கின்ற பணியை செய்து வருவதை உலகார் அறிவர்.

## விஞ்ஞானம்

குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்று அறிவியல் அறிஞர் டார்வினரின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையை மதம் ஏற்காமல் ஆதம் ஏவாள் கவிதையையேக் கூறி மதம் வளர்த்தது. பின்னர் விஞ்ஞானம் வளர வளர அத்தவற்றினை மதமே திருத்திக் கொண்டது. சூரியன் சந்திரன் கிரகணங்கள் நேர் கோட்டில் சந்திப்பது இயற்பியல் உண்மை. ஆனால் பாம்பு சந்திரனை விழுங்குவதாகக் கூறும் கற்பனைவாதக் கதைகளை பேராசிரியர்களே நம்புவது, மூடநம்பிக்கையல்லவா?

கொளுத்தும் வெயிலைத் தணிக்க குளிர்சாதனப் பெட்டி, மின்விசிறிகள், இருளை விரட்டிட மின்விளக்கு, கண்டம் விட்டு கண்டம் கடந்து சென்றிட வான் ஊர்தி, கடலில் நெடுந்தூரம் பயணிக்க கப்பல், உணவு சமைத்திட மின் இயக்க சாதனங்கள், நோயின் கொடுமைக்கு மருந்து மாத்திரைகள் போன்ற கண்டுபிடிப்புகள் அனைத்தும் அறிவியல் கூறுகளே என்பதை மறுத்திட இயலுமா? இதில் கடவுளின் பங்களிப்பு துளிக் கூட இல்லை என்று உரக்கக் கூறலாம். இது எப்படி நிகழ்கின்றதென்று கேட்டவர் தான் அறிவாசான் பெரியார் அவர்களை,

பெரியாரின் வழிகாட்டலால் உருவாகிய பகுத்தறிவு நாதத்தினை முழுமூச்சாய் இயங்கும் சுயமரியாதை

இயக்கம், இயக்கப் பணிகளால் இன்று வரை செம்மாந்த நடைபோடும் வாழ்வே அழகு தான்.

### கல்வி

கல்வி என்பது ஒரு கருவியே ஆகும். மிகப் பெரிய உத்தியோகத்திற்குச் செல்லவும், அதன் வழியே பணம் சம்பாதிக்கவும், ஒரு வழியாக உள்ளது. நான்கு பிறப்பாரில் கடைசியாக பிரம்மனின் காலில் பிறந்தவன் சூத்திரன். இவன் அனைத்து சாதிகளுக்கும் கீழ்ப்பட்ட அடிமை. அவர்களுக்கு பணிவிடை செய்வதே சூத்திரனுக்கு பாக்கியம் சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியை மட்டும் கொடுக்காதே என்கிறது மனுதர்மம். அதோடு மட்டுமல்ல படிக்க முற்பட்டால் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று என்ற கொடுமையில் வாழ்ந்த வெகு ஜன மக்களின் மனதினை உளப்பூர்வமாய் அறிந்த பெரியார் அனைவரும் கல்வி பயிற்றுவிக்க பலவழிகளில் அரசிடம் போராடினார்.

குலக் கல்வி எனும் பெயரால் முதலமைச்சராயிருந்த இராஜாஜியின் திட்டத்தை தவிடு பொடியாகக் கொள்ளைப் புற வழியாக ஓடி ஒளிந்திட தந்தை பெரியாரும் அவரது உணர்ச்சியும் எழுச்சியும் ஒரு சேர பெற்ற சுயமரியாதை இயக்கமும் தோழர்களும் உழைத்ததின் பயனே அனைவருக்கும் உயர்கல்வி உயர் பதவிகள் வரை முயன்று முன்னேற்றம் அடைந்தனர் எனக் கூறலாம்.

பெரியாரின் அறிவாற்றலும், அனுபவ முதிர்வாலும் கிளர்த்தெழுந்த சுயமரியாதை இயக்கத்தின் சீரியப் பணியால் கீழ்த்தட்டு மற்றும் அடிநிலை மக்களும் பெரும் பயன் அடைந்தனர் என்றே பெருமை கொள்ளலாம்.

### முடிவுரை

மேற்சொன்ன மாந்தர்களின் அத்தனை வாழ்வியல் சிக்கல்களும் கடவுள் தான் மூலக் காரணம் என்பதை உணர முடிகிறது. இத்தனை கடவுளும் அதனை உருவாக்கி கொடுத்து சோம்பேறிகளால் வாழ்கின்ற பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை ஒழித்தாலொழிய உண்மையான சமத்துவம் காண வாய்ப்பேயில்லை.

மனிதனுக்குள் இருக்கும் பகுத்தறிவு பேராற்றல் வாய்ந்ததாகும். அப்பகுத்தறிவினைப் பயன்படுத்தினால் கடவுள் கற்பனை மற்றும் மூடநம்பிக்கையிலிருந்து முழுமையான புரட்சி மிகுந்த விடுதலை கிடைக்கும். இதுவே பெரியாரின் நெறியாகும்.

நம் உரிமைகளை பெற்றுத் தந்திட பெரியார் பட்ட கொடுமைகள் கொஞ்சமா? நஞ்சமா? சொல்லடி, கல்லடி, அழுகிய முட்டையடி, மலத்தையும் வீசினார்கள். ஏன் கால் செருப்பால் அடித்தனர். மறுசெருப்பையும் கேட்டு வாங்கினார். கிளர்ச்சி போராட்டங்கள் என எடுக்கப்பட்ட பெரியாருக்கு 30 முறை சிறை தண்டனை கிடைத்தது யாருக்காக? நமக்காகத் தான் என்பதையும் நினைவில் கொள்வீர்.

எனவே கடவுள் தொடர்பான குருட்டு நடவடிக்கைகளும், மக்களுக்கு இருந்த மயக்கமும் குறைந்துவிட்டால் கடவுள் நம்பிக்கை என்ற உணர்ச்சி தானே குறையும். பின் ஒழுக்கமும் சமத்துவமும் இன்பமும் நிலைபெறுவதற்கு அறிவு வழிபட்ட பிரச்சாரமும் விழிப்புணர்வும் ஏற்படுத்த அரசும் ஆட்சியாளர்களும் முன்வர வேண்டும். ●

# பிரசவமும் கவலையும்



என்னுடைய தோழியின் கணவர் ஒரு நாள் திடீரென தொலைபேசியில் அழைத்திருந்தார். கொஞ்சம் பதட்டமாகவே இருந்தது அவரது குரல். காரணம், பிரசவம் நடந்த சில நாட்களாகவே, மிகவும் சோர்வாக அவள் இருந்ததாகவும், இது அவளது வழக்கமான மனநிலைக்கு மாறானது என்று சொன்னார். சரி, சில வாரத்தில் சரி ஆகிவிடும் என்று நினைத்த அவர், அவளை மகிழ்வித்து, நிஜ "அவளை" மீட்டெடுக்க பலவகையில் முயற்சி செய்தாலும், நிலைமை 4 மாதத்திற்கு அப்படியே தான் இருந்திருக்கிறது. ஆக, இந்த மனநிலை, மனம் சார்ந்த நோயின் வெளிப்பாடா அல்லது தாயான பிறகு வந்திருக்கும் புதிய பொறுப்புகளால் ஏற்பட்ட மன அழுத்தத்தின் வெளிப்பாடா என்ற கேள்வி தான் அவர் கடைசியில் என்னிடம் கேட்டது.

நம் சமூகத்தில் நிகழும் இந்த நிஜமான நிகழ்வு நம்மில் பலருக்கும் தெரிவதே இல்லை, அதற்கான முக்கியமான காரணம், இவ்வகை மனச் சோர்வினை பொதுவாக யாரும் கண்டு கொள்வதில்லை, அம் மனச் சோர்வினை அனுபவிப்பவரையும் சேர்த்து. இப்படி நிகழ்ந்தால், மருத்துவ உதவியினை நாடவேண்டும் என்று நமக்குச் சொல்லியும் கொடுக்கப்படுவதில்லை அல்லவா.

நம் சமூகத்தில், புதிதாகப் பிள்ளையைப் பெற்றெடுத்தப் பெண் மனச் சோர்வுடன் அல்லாடும் பொழுது, சுற்றி இருக்கும் கூட்டம், அவளை என்ன சொல்கிறது? பிள்ளையை வளர்க்க லாயக்கற்றவள் என்று சொல்கிறது. பிள்ளைப் பேறு ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்வு என்ற போதும், பிரசவத்திற்குப் பிறகு பல பெண்களுக்கு பிரசவத்திற்குப் பின்னான மனச்சோர்வினுக்கான அறிகுறிகள் தென்படும். அவ்வறிகுறிகள் ஒன்று மென்மையாகத் தென்பட ஆரம்பித்து தானாகவே மறைந்துவிடும் அல்லது தீவிரமான மனச்சோர்வினுக்கு இட்டுச்செல்லும். குணப்படுத்தப்படாத பிரசவத்திற்குப் பின்னான மனச்சோர்வானது தாயுக்கும் சேய்க்கும் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

Post Partum என்பது பிரசவம் நடந்து முதல் 12 மாதங்களைக் குறிக்கும் காலம். இக்காலத்தில் ஏற்படும் மனச்சோர்வே Post Partum Depression என்று சொல்லப்படுகின்றது. Post Partum Depression இல் 54% பிரசவம் நடந்து 1 மாதத்தில் ஏற்படும், 40% 2 முதல் 4 மாதத்திற்குள்ளும், 6% 5 முதல் 12 மாதத்திற்குள்ளும் ஏற்படும்.

இந்தியாவைப் பொறுத்தவரை இவ்வகை மனச்சோர்வு குறித்து தெளிவான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அறுதியிட்டு எண்ணிக்கைகள் வெளியிடப்படவில்லை என்ற போதிலும் ஒரு ஆய்வின் படி, 22% பேருக்கு இவ்வகை மனச்சோர்வு ஏற்படுகின்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது.



பிரசவத்திற்குப் பின்னான மனச் சோர்வு ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருக்கிறது. அவை,

1. இளம் வயதில் கர்ப்பம் தரித்தல்
2. ஒற்றைத் தாயாய் இருத்தல்
3. பல பிள்ளைப் பேறு
4. பிரசவத்திற்குப் பின்னான மனச்சோர்வு அல்லது மனநலக் குறைபாடு போன்றவை குடும்பத்தில் ஒருவருக்கு இருத்தல்
5. துணைவரின் வழி வன்முறையினை எதிர்கொள்ளுதல்
6. அவசியமற்ற அல்லது திட்டமிடப்படாத கர்ப்பம்
7. கர்ப்பம் குறித்து எதிர்மறை எண்ணங்கள் வைத்திருத்தல்
8. பிள்ளைப் பேறு குறித்து பயம்
9. உடற்பருமன், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் அல்லது பிரசவத்தின் பொழுது நோய்த்தொற்று ஏற்படுதல் வழி
10. தன் உடல் குறித்து எதிர்மறை எண்ணங்கள், அதிருப்தி
11. மாதவிலக்கிற்கு முன் தோன்றும் நோய்க்குறிகள் என்ற Pre Menstrual Syndrome
12. பிள்ளைப்பேறு சார்ந்த பதட்டம்
13. பிள்ளைப்பேறு சார்ந்த தூக்கத் தொந்தரவுகள்
14. பால் புகட்டுவதில் சிரமம்
15. குழந்தை வளர்ப்பு குறித்து மன அழுத்தம்



இதனைத் தவிர்த்து

1. மரபணு சார்ந்த காரணங்கள்
2. பிரசவத்திற்குப் பின்னான ஹார்மோன் அளவில் மாற்றங்கள் இம்மனச்சோர்வு ஏற்படுகையில் உண்டாகும் வெளிப்பாடுகள்

1. மனநிலையில் சோர்வு
2. சுவாரசியம் இழப்பு
3. பசி மற்றும் உடல் எடையில் மாறுதல் (அதிகரிப்பு மற்றும் இழப்பு)
4. தூக்கம் சம்பந்தமான தொந்தரவுகள் (தூக்கம் வருவதில் சிரமம், நள்ளிரவில் திடீரென விழித்தல், வழக்கத்திற்கு மாறாகத் தூக்கத்தில் இருந்து சீக்கிரமாய் எழுதல் அல்லது காலை நேரத்தில் தூக்கக்கலக்கம்)
5. எளிதாய் சோர்ந்து போதல் (உடல் அளவில்)
6. ஒழுங்காய் சிந்திக்க இயலாமை, கவனிக்க இயலாமை, உற்று நோக்க இயலாமை, திட்டமிட இயலாமை, செய்திகளை உள்வாங்க இயலாமை, நினைவில் நிறுத்த இயலாமை, சரளமாய் பேச இயலாமை
7. எதற்கும் லாயக்கற்றதாய் உணர்தல்
8. தற்கொலை உணர்வுகள்
9. அளவிற்கு அதிகமான குற்றவுணர்வு

## சிகிச்சை

1. ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு, நோய் கண்டறியப்படுவது மிக அவசியம். சிகிச்சை அளிக்கப்படாத பிரசவத்திற்குப் பின்னான மனச் சோர்வு கடும் எதிர்மறை விளைவுகளுக்கு இட்டுச்செல்வதற்கான வாய்ப்புகள் உண்டு.
2. தேர்ந்த மன நல ஆலோசகர்களிடம் ஆலோசனை பெறுவதும் மருத்துவச் சிகிச்சையும் சிகிச்சையின் ஒரு பகுதி.
3. தாய்ப்பால் அருந்தும் பிள்ளைகளுக்கு சிகிச்சையில் அளிக்கப்படும் மருந்துகளினால் எந்த விளைவும் ஏற்படாது இருக்க தாய்ப் பால் புகட்டும் தாய்மார்களுக்கு தகுந்த மருத்துவச் சிகிச்சை வழங்கப்படும். தேர்ந்த மருத்துவ உதவி தேவைப்படுவதற்கான காரணமாக இதனைச் சொல்லலாம்.



▪ ஜூலை 7 – கூட்டுறவு தினம்
– (1896) – முதல் அசையும் திரைப்படம் பிரான்சில் வெளியீடு



# தகுதியில்லாதவர்கள் நடத்தும் தகுதித் தேர்வு!

பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று குரல் உயர்த்துபவர்கள் உண்டு. அப்படி குரல் கொடுப்பவர்கள் NEET தேர்வை ஆதரிப்பவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதுதான் முரண்பாடு. நீட் தேர்வை ஆதரிப்பவர்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு எதிரானவர்கள். எப்படி? கட்டுரையைப் படியுங்கள்.

நீட் (NEET) என்று சொல்லப்படும் NATIONAL ELIGIBILITY CUM ENTRANCE TEST என்பது தமிழர்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் மற்றொரு வட இந்திய வஞ்சகம். இன்னும் சொல்லப்போனால், இந்தத் தேர்வுமுறை, ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான தாக்குதல்.

1984இல் எம்ஜிஆர் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு அளவில், எம்.பி.பி.எஸ். மருத்துவப் படிப்புக்கு நுழைவுத்தேர்வு கொண்டுவரப்பட்டபோதே உடனடியாக, திராவிடர் கழகம் போராட்டங்களில் இறங்கியது. அந்த நுழைவுத் தேர்வை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் ஆதரித்தது. என்றாலும் இருபத்தொரு ஆண்டுகள் கடும் எதிர்ப்புகளுக்கிடையேயும் நடைமுறையில் இருந்த நுழைவுத்தேர்வு 2005ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் ரத்து செய்யப்பட்டது. ஆனால் சில சமூகநீதி விரோத சக்திகள் வழக்கு மன்றத்தில் அதற்குத் தடை வாங்கினர். 2006ஆம் ஆண்டில் அனந்த கிருஷ்ணன் தலைமையில் குழு அமைத்து அவர்களின் பரிந்துரையின்படி சட்டம் இயற்றப்பட்டு குடியரசுத்தலைவரின் ஒப்புதலும் பெறப்பட்டதாலும், நுழைவுத்தேர்வு கிராமப்புற மாணவர்கள் மருத்துவராவதை எந்தெந்த வகையில் தடை செய்கிறது என்பதையும் தமிழ்நாடு அரசு, உயர்நீதி மன்றத்தில் தெளிவாக எடுத்துச் சொன்னதால் சென்னை உயர்நீதிமன்றம் தமிழ்நாடு அரசின் சட்டத்திற்கு அனுமதி வழங்கியது.

இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடி நுழைவுத் தேர்விலிருந்து விடுதலை பெற்ற மகிழ்ச்சியை நீட்டிக்க விரும்பவில்லை இந்திய அரசு. ஓடிக்கொண்டிருக்கும் சக்கரத்திற்குள் கம்பியை 'நீட்'டி வண்டியைக் கவிழ்த்துவிட்டது.

2016ஆம் ஆண்டு மட்டும் தமிழ்நாட்டுக்கு விதிவிலக்கு கொடுத்துவிட்டு சென்ற 2017ஆம் ஆண்டு முதல், எம்.பி.பி.எஸ். கனவிலிருக்கும் மாணவர்களின் கண்களில் 'நீட்'டுக் கத்தியை விட்டு ஆட்டிக்கொண்டிருக்கிறது.

சென்ற ஆண்டு தன் கனவு, கருவிலேயே சிதைக்கப்பட்ட அதிர்ச்சியில் தன் உயிரை மாய்த்துக் கொண்டாள் அருமை மகள் அனிதா. இந்த ஆண்டு, பிரதீபா, சுபஸ்ரீ என இரண்டு அருமைச் செல்வங்கள் 'நீட்'டுக் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்கள்.

நீட் என்று உச்சரிக்கப்படும் ஆங்கிலச் சொல்லுக்கு (NEAT) தெளிவாகவும் சரியாகவும் என்று பொருள்! ஆனால் இந்திய அரசு நடத்தும் நீட்(NEET) எல்லாவகையான முறைகேடு தில்லுமுல்லுகளையும் செய்கிறது.

2017ஆம் ஆண்டு, நடத்தப்பட்ட நீட் தேர்வில், கேள்வித்தாள்களில் தில்லுமுல்லு செய்தனர். இந்தி, குஜராத்தி மொழிகளில் எளிமையான கேள்விகளைக் கேட்டனர். மற்ற மாநில மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் கேட்கப்பட்ட கேள்விகள் கடினமாக இருந்தது.

2018ஆம் ஆண்டில் 'நீட் தேர்வை ரத்து செய்'

என்று சொல்லும் மக்களை ‘நீட் தேர்வு மையத்தை தமிழ்நாட்டிலேயே அமை’ என்று சொல்ல வைத்துவிட்டார்கள் தமிழ் மக்கள் விரோத இந்திய அரசினர்.

தேர்வுக்கு ஒன்றரை நாள் மட்டுமே இருக்கும்போது தேர்வு மையங்களை தொலைதூர மாநிலங்களில் ஒதுக்கீடு செய்து அறிவித்தனர். பழிவாங்குதல் என்றால் என்ன என்று இந்திய அரசு செய்து காட்டியது. தமிழ்நாட்டு மக்கள் பழி வாங்கப்பட்டனர். இரண்டு மாணவர்களின் தந்தைகள் பலிவாங்கப்பட்டனர்.

நாகர்கோவிலைச் சேர்ந்த ஒரு மாணவி கூறும்போது, “எர்ணாகுளம் அல் அமீன் கல்வி நிறுவனத்தில் எனக்கு சென்டர் போட்டிருக்கிறார்கள். நீட் தேர்வு விண்ணப்பம் தொடங்கிய நான்காவது நாள் நான் விண்ணப்பித்துவிட்டேன். எனக்கு எர்ணாகுளத்தில் சென்டர் போட்டிருக்கிறார்கள். நான் விண்ணப்பித்த சில நாள்களுக்குப் பிறகு விண்ணப்பித்தவர்களுக்கு திருநெல்வேலி சென்டரில் தேர்வு மையம் கிடைத்திருக்கிறது. ஒரே குழப்பமாக உள்ளது” என்றார்.

இந்தநிலையில் ‘நீட்’ தேர்வு தமிழ்வழி வினாத்தாளில் குளறுபடி நடந்து இருப்பது தெரியவந்தது. 49 கேள்விகளில் 68 வார்த்தை பிழைகள் இடம் பெற்றுள்ளதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

180 கேள்விகள். தலா 4 மதிப்பெண்கள் என 720 மதிப்பெண்களுக்கு ‘நீட்’ தேர்வு நடைபெற்றது. பிழையான பதிலளித்தால் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும். இவர்கள் பிழையான கேள்வித்தாளை தயாரித்தார்களே இவர்களுக்கு பணித் தகுதி குறைக்கப்படுமா?

**தமிழ்நாட்டில் சுமார் ஒரு லட்சத்து இருபதாயிரம் பேர் எழுதிய தேர்வில் சுமார் 2425 பேர் மட்டுமே அரசுக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். படிக்க முடியும். ஆனால் இதற்காக நீட் பயிற்சி மையங்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு? மன வேதனை எவ்வளவு? இவ்வளவும் செய்து வட இந்தியர்கள் செய்யும் தில்லு முல்லுகளால் ஏற்படும் பாதிப்புகள் எவ்வளவு?**

ஒரு வினாத்தாளைக் கூட பிழையில்லாமல் தயாரிக்கத் தகுதியில்லாதவன் தகுதித்தேர்வு நடத்துகிறான். +2 வில் தகுதியான மதிப்பெண்கள் எடுத்த நம் மாணவக் கண்மணிகள் தற்கொலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

இந்தியர்களின் முட்டாள்தனத்துக்கெல்லாம் இந்துத்துவவாதிகள் அறிவியல் முலாம் பூசுவார்கள். அண்மையில் ‘ராமாயண காலத்திலேயே, இப்போது உள்ள அனைத்து தொழில்நுட்பங்களும் இருந்ததாகவும், சீதையே சோதனைக் குழாய்மூலம் பிறந்தவர்தான்’ எனவும் உத்தரப்பிரதேச துணை முதல்வர் பேசியுள்ளார். புஷ்பக விமானம் இந்துக்களின் கண்டுபிடிப்பு என்று மார்தட்டிக் கொள்வார்கள். உலகின் முதல் அறுவைச் சிகிச்சை மருத்துவர் சுஸ்ருதர் என்று பெருமை பீத்திக் கொள்வார்கள்.



நாம் கேட்கிறோம், சீதையை டெஸ்ட் டியூபில் பிறப்பித்த மருத்துவர் யார்? அவர் எந்தக் கல்லூரியில், எந்த ஆண்டு NEET தேர்வில் தகுதிபெற்று டாக்டரானார்? அதே கேள்வி அறுவைச் சிகிச்சையின் தந்தை சுஸ்ருதரைப் பார்த்தும் எழுகிறது.

மருத்துவம் படிக்க நினைக்கும் மாணவர்களுக்கு மன அழுத்தத்தையும் பெற்றோர்களுக்கு நெஞ்சுவலியையும் உண்டாக்குவதோடு கடனாளியாக ஆக்குவதுதான் நீட் தேர்வு செய்திருக்கும் சாதனை.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை ஒட்டுமொத்த ஊரையே நோயாளியாக்கிக் கொல்கிறது என்று சொல்லி போராடிய மக்கள் ஊருக்கு ஒருவரைக் கொல்லும் நீட் தேர்வு என்னும் நச்சுப்பாம்பைக் கொல்ல இன்னும் ஆயுதம் எடுக்காமல் இருப்பது அநியாயம்.

நீட் தேர்வு கூடாது என்று, தி.க., திமுக, பாமக, விசிக, த.வா.க.போன்ற சமூக நீதியில் அக்கறையுள்ள அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் பரப்புரை செய்து போராட்டம் நடத்தினாலும் மாணவர்களின், பெற்றோர்களின் தூக்கம் கலையவில்லை. அறிவுக்கண் திறக்கவில்லை.அதனால்தான் இந்திய அரசு தமிழர்களை இளிச்ச வாயர்களாக நினைக்கிறது. மாநிலக் கல்வி உரிமையை நிலைநாட்ட நீட் தேர்வை முற்றிலும் எதிர்த்த ஜெயலலிதாவின் வழியில் நடப்பதாகச் சொல்லும் தமிழ்நாடு அரசோ, நீட் பயிற்சி மையங்களை ஊருக்கு ஊர் உருவாக்கி மாநில சுயாட்சி என்பதை மறந்து, மானங்கெட்ட சுயநல ஆட்சி என்று ஆகிவிட்டது.

மாடு பிடித்து கலாச்சாரத்தைக் காப்பாற்றிய மாணவர்களுக்கு, மருத்துவப் படிப்பு பிடிக்கவில்லை போலிருக்கிறது. NEETக்கு எதிராக வாயே திறக்க மாட்டேன்கிறார்கள். நம் மக்கள் மாடு மேய்க்கத்தான் லாயக்கு போலிருக்கு!

எல்.கே.ஜி.க்கு என்ட்ரன்ஸ் வைத்தவனையும் கியூவில் நின்றவனையும் செருப்பால் அடித்திருந்தால் வந்திருக்காது NEET.

இரண்டு ஆண்டுகள் பள்ளிக்கே போகாமல் நீட் பயிற்சி மையத்திலேயே இருந்த கல்பனா குமாரி என்ற பீகார் பார்ப்பன மாணவி நீட் தேர்வில் இந்தியாவிலேயே முதலிடம்! இதுதான் பித்தலாட்டத் தகுதித் தேர்வின் லட்சணம்! “உட்கார முடியாத ஒருவன் உன் நாற்காலியை ஒளித்து வைத்திருப்பான், கைப்பற்று” என்று வைரமுத்து எழுதியது நினைவுக்கு வருகிறது.

பள்ளிப் படிப்பில் +2 வில் அதிக மதிப்பெண் எடுக்காவிட்டாலும், நல்ல பயிற்சி மய்யத்தில் அதிகப் பணம் கட்டி சேர்ந்து நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றுவிட்டால் டாக்டர் ஆகிவிடலாம் என்று நினைக்கும்



■ ஜூலை 8 – (1898) பி.எஸ்.குமாரசாமி ராஜா – (முன்னாள் தமிழக முதல்வர்.) பிறந்த தினம்
– (1839) ராக்கஃபெல்லர் – (அமெரிக்க தொழில் அதிபர்.) பிறந்த தினம்

மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஒரு கேள்வி! ஒருவேளை நீட் தேர்வில் மதிப்பெண் குறைந்துபோனால், மருத்துவப் படிப்பு கிடைக்காது என்ற நிலையில் +2 வில் 800 முதல் 900 மதிப்பெண்களே எடுத்திருக்கும் நிலையில் பி.இ. அல்லது B.Sc வேளாண்மை போன்ற படிப்புகளுக்கும் இடம் கிடைக்காதே? அல்லது மீண்டும் அதிகப் பணம் கட்டிதானே டாக்டர் படிப்பு படிக்க வேண்டும்? அல்லது ஏதேனும் ஒரு பட்டப் படிப்பைப் படிக்க வேண்டும்? எத்தனை பணச் செலவு? குடும்பம் மொத்தமும் மருத்துவ சீட் கிடைக்கும் வரை மன அழுத்தத்தில் இருக்க வேண்டும். இடம் கிடைக்காவிட்டால் இறுக்கம் இரு மடங்காகும். கடன் கழுத்தை நெறிக்கும். நீட் பயிற்சி மையங்கள் என்னும் கொள்ளைக்காரர்கள் பெருகிப் பணம் பிடுங்குவார்கள் என்பதைத் தவிர வேறு என்ன பயன்?

தமிழ்நாடு அரசு கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். இடங்கள் மொத்தம் 2850. இதில் 15 % அகில இந்திய ஒதுக்கீட்டுக்குப் போய் விடும் மீதி 2425 இடங்கள். இந்த 15% இடங்களைப் பெரும்பாலும் தமிழ்நாட்டைச் சாராதவர்கள் ஆக்கிரமித்துக் கொள்வார்கள். தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் 1500 இடங்கள். நாற்பது ஐம்பது லட்சங்கள் கொடுத்து சேர்ந்து, மேலும் ஆண்டுதோறும் பதினைந்து லட்சங்கள் பணம் கட்டி படிப்பவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை என்பதால் அதை விட்டுவிடுவோம்.

தமிழ்நாட்டில் சுமார் ஒரு லட்சத்து இருபதாயிரம் பேர் எழுதிய தேர்வில் சுமார் 2425 பேர் மட்டுமே அரசுக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். படிக்க முடியும். ஆனால் இதற்காக நீட் பயிற்சி மையங்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு? மன வேதனை எவ்வளவு? இவ்வளவும் செய்து வட இந்தியர்கள் செய்யும் தில்லு முல்லுகளால் ஏற்படும் பாதிப்புகள் எவ்வளவு?

முன்பே சொன்னதுபோல் எல்கேஜியிலேயே என்ட்ரன்ஸ் என்பதைப் பெருமையாகச் சொல்லும் மனநிலைக்கு மக்களைப் பழக்கி விட்டதால் இவ்வளவு மன உளைச்சலை ஏற்படுத்தினாலும் நீட்டை எதிர்க்க மக்கள் முழு அளவில் முன்வரவில்லை.

தமிழ்நாட்டு மருத்துவக் கல்வி நிறுவனங்களில் அகில இந்திய ஒதுக்கீடு 15% விழுக்காடு என்பதை சாதாரணமாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். கூடாரத்துக்குள் மூக்கை நீட்டிய ஒட்டகம் முழுதாக உள்ளே நுழைந்து கூடாரத்துக்கு சொந்தக்காரர்களை வெளியே அனுப்பிவிடும் என்பதை மறந்துவிடக்கூடாது. ஏற்கனேவே மருத்துவ முதுநிலைப் படிப்புகளில் அகில இந்திய ஒதுக்கீடு 25% என்று இருந்ததை உச்சநீதிமன்றம் 50% என்று உத்தரவிட்டு இரண்டில் ஒரு பங்கு இடங்களை தேசியத்திடம் இழந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல சூப்பர் ஸ்பெஷாலிடி படிப்புகள் எனப்படும் சிறப்பு உயர் படிப்புகளில் மாநில ஒதுக்கீடு என்பதை முற்றிலும் ஒழித்து 100% அகில இந்திய ஒதுக்கீடு என்று ஆக்கி விட்டது. இதேபோல் எம்.பி.பி.எஸ். மற்றும் பி.டி. எஸ். இடங்களையும் இழக்கும் வாய்ப்பு அதிகம். குதிரை போன பின் லாயத்தைப் பூட்டி பயனில்லை மக்களே!

மேலும் 'பெர்சண்டைல்' என்ற முறை மிகவும் நகைச்சுவையான 'தகுதி' உடையது. அதாவது தேர்வு



எழுதிய அனைவரையும் வரிசைப்படி நிறுத்தினால் நிற்பவர்களில் சரிபாதியான இடத்தில் நிற்பவர் வரை தகுதியானவர்களே! அதாவது முதலிடத்தில் நிற்பவர் 97% மதிப்பெண் என்றால், சரிபாதியான இடத்தில் நிற்பவர் 16% எடுத்திருந்தாலும் அவரும் எம்.பி.பி.எஸ். படிக்கத் தகுதியானவரே. 2018ஆம் ஆண்டு நடந்த தேர்வில் 691 மதிப்பெண் எடுத்தவரும் 119 மதிப்பெண் எடுத்தவரும் டாக்டர் படிப்பு படிக்கலாம். (இந்த 691-119 மதிப்பெண் (50 வது பெர்சன்டைல்) எடுத்தவர்களை திறந்த போட்டியினர் என்று குறிப்பிடாமல் பிறர் (others) என்று குறிப்பிட்டிருப்பது ஒரு கூடுதல் மோசடி) பிறகு என்ன மயிருக்கு இந்தத் தகுதித் தேர்வு என்று கேட்கத் தோன்றுகிறதா இல்லையா?

மேலும் ஒரு மோசடி என்னவென்றால் 2018ஆம் ஆண்டு நீட் தேர்வுக்கு தமிழ்நாட்டிலிருந்து 107288 பேர் எழுதுவதாக CBSE தன் இணைய தளத்தில் குறிப்பிட்டிருந்தது. தேர்வு முடிவு வந்தபோது தேர்வெழுத பதிவு செய்தவர்கள் 120000 பேர் எனவும், தேர்வெழுதியவர்கள் 114602 பேர் என்றும் அதில் தகுதி மதிப்பெண் பெற்றவர்கள் 45336 பேர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேர்வுக்குப் பதிவு செய்ய குறிப்பிட்ட நாள்தான் கடைசி நாள் என்று அறிவிக்கப்பட்டு, அந்த நாளுக்குள் பதிவு செய்தவர்களைத்தான் தேர்வுக்கு அனுமதி பெற்றவர்களாகப் பட்டியலிடுவார்கள் அப்படியிருக்க, தேர்வுக்கு முன் பட்டியலில் உள்ளவர்களைக் காட்டிலும் தேர்வு முடிவுகள் பட்டியலில் உள்ளவர்களின் எண்ணிக்கை எப்படி கூடுதலாக இருக்க முடியும்? மிகப்பெரிய மோசடி நடந்துள்ளது. இதுபற்றிய கேள்விகளுக்குப் பொறுப்பில் உள்ளவர்கள் கள்ள மவுனம் காக்கிறார்கள். மாணவர்களும் பெற்றோர்களும் எவனாவது போராடி வாங்கித்தந்தால் அனுபவிக்கலாம் என்றிருக்கிறார்கள்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னரே வட இந்தியர்களின் ஆதிக்கம் தமிழ்நாட்டின்மீது தலைவிரித்தாடியது. அவர்கள் எடுப்பதே முடிவு. அவர்கள் சொல்வதே சட்டம் என்றானது. அதனால்தான் தந்தை பெரியார் “தமிழ்நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பவர்களாக வடநாட்டாரும் ஆரியபுத்திரர்களும் இருப்பதை ஒழிக்க வேண்டும்.” என்று ‘குடிஅரசு’ 30.10.1938 இதழில் எழுதினார்.

தமிழன் தன்னை இந்தியன் என்று நினைத்து ஏமாந்தது போதும். உணர்விருந்தால் உரிமையைப் பெறலாம். வீதியில் இறங்கிப் போராடினால்தான் வீட்டுக்குள் நிம்மதியாக உறங்கலாம். ●

சந்தியா, திருச்சி

# சாதியை அழிப்போம் மனிதத்தை மீட்போம்!

சாதிகள் இல்லையடி பாப்பா என்று கூறிய பாரதியாரையும் பெரியாரையும் மதிப்பெண் வினாக்களுக்காக மட்டுமே பயன்படுத்திக் கொள்கின்ற சமூகம் இது. பிறந்த குழந்தையின் பெயர் முடிவு செய்யப்படும் முன்பே சாதி அதனோடு ஒன்றிக் கொள்கிறது. இவை அனைத்திற்கும் காரணம் சமூகக் கட்டமைப்பு தான். மனித இனம் என்ற அறிவியல் ரீதியான கூட்டம் சாதிய தோற்றத்திற்கு பின்னால் தனக்குள் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்திக் கொண்டன.

இதனை உடைத்தெறிய முடியாத அளவு இது இறைவனுடன் பின்னிப் பிணையப்பட்டுள்ளது. எனவே சாதி இறைவனால் வரையறுக்கப்பட்டது என்பது மரபாக மாறியது. சாதிக்கும் அதன் வளர்ச்சிக்கும் ஏதிராக எத்தனை போராட்டங்கள் வந்தாலும் அவை அனைத்தும் மறைக்கப் படுகின்றன. சாதிக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டியது இளைய சமுதாயத்தினரின் கடமை. ஆனால் சாதி சங்கங்கள் அவர்களைத் தன்வயப்படுத்தி வைத்துள்ளன. சுய சாதி பெருமையைக் கேட்டு கேட்டு தான் அவர்கள் வளர்கின்றனர்.



இருப்பதன் காரணம் சாதியப் பிரிவினைக்கு எதிரான வலுவான எதிர்ப்புகள் புத்தகத்தில் இடம் பெறாமையே. இரண்டாயிரம் ஆண்டுகளாக பொருளாதார ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின்தங்கிய மக்களை சிறிதேனும் உயர்நிலைக்கு கொண்டு செல்லும் கருவியே இட ஒதுக்கீடு. பட்டியல் இனத்தவரின் சிறிய வளர்ச்சியைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் தான் பிரிவினை வாதங்களை முன்னெடுக்கின்றனர். நகரங்களிலே சாதி படர்ந்துள்ள வேளையில் கிராமப் புறங்களின் நிலை மோசமானது. தனித்தனியே அமைந்த தெருக்கள், தீண்டாமை போன்றவை நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. பள்ளியில் மாணவர்களுக்கிடையே நிகழும் பேதங்களைத் தீர்த்து வைக்க வேண்டியவர் ஆசிரியர் தான். ஆனால் அவரே பிரிவினையோடும் பாகுபாட்டோடும் நடந்து கொள்வது தான் இன்றைய பள்ளிகளின் நிலைமை. இதற்கானத் தீர்வு மாணவர்களிடையே உள்ள வாசிப்பு தான்.ஒரு பொறி நெருப்பாக இருந்தாலும் பிறரிடம் பரவத் தொடங்கினால்



பெரியார் போன்ற பெரியவர்கள் வாழ்ந்த மண்ணில் எத்தனையோ சாதியக் கலவரங்கள் இன்று நிகழ்கின்றன. எல்லா மனிதர்களும் ஒன்று தான் என்ற எண்ணத்தைக் கொள்வதே மாண்பு. நவீனத்துவத்தைக் கடந்தும் சமூகத்தின் மீது ஆழமான தாக்கத்தைக் கொண்டுள்ளது சாதி. ஒரு மாணவன் சக தோழனாக பழகியும் கூட "நீ என்ன சாதி?" என கேட்பதில் உள்ளது சாதியின் தாக்கம். பின்னர் அவன் தன்னை விட தாழ்வானவனாக இருக்கும் பட்சத்தில் அவனை முற்றிலுமாக ஒதுக்கி விடுவர். தேவையான அனைத்து தகுதிகளையும் கொண்டு அந்த மாணவன் உயர்நிலையை அடைந்தாலும் கூட அவன் இட ஒதுக்கீட்டில் வந்தவன் என எளிதில் கூறி விடுகின்றனர். ஒரு நாடே சாதி ரீதியில் ஊர் இந்தியா மற்றும் சேரி இந்தியா என பிரிக்கப் பட்டுள்ள போது மாணவர்கள் சுய சாதி பெருமையைப் பேசுவதில் ஆச்சரியம் என்ன உள்ளது? மதத்தைப் புறக்கணிக்க இடம் தரும் சட்டங்கள் சாதியைப் புறக்கணிக்க இடம் தருவதில்லை. கல்வி கற்றால் சாதி ஒழியும் என்பது மூட நம்பிக்கையே. அப்படியானால் இன்று வாழும் முக்கால் வாசி பேர் சாதியைப் புறக்கணித்திருக்க வேண்டும் அல்லவா? இது நடைபெறாமல் அது இந்த சமூகத்திற்கே ஆபத்தானது. சாதியின் பரவலைத் தகர்ப்பதாக உள்ளன கலப்புத் திருமணங்கள்.

ஆனால் இரத்த உறவுகளையே கூட கொல்லத் துணிகின்றன கவுரவ கொலைகள். இத்தகைய நிலையிலும் சிலர் "இப்பல்லாம் யாரு சார் சாதி பாக்குறாங்க?" என கேட்பது அறியாமையின் உச்சம். நாம் சாதியை விட்டாலும் சாதி நம்மை விடுவதில்லை என்பது தான் உண்மை. எனவே, பட்டியல் இனத்தினர் தனது அடையாளங்களை மறைக்கவே பல இன்னல் படுகின்றனர். சாதி எதிர்ப்பை எவர் முன்னெடுத்தாலும் அவர் தலித்தாக தான் இருக்க முடியும் என்ற எண்ணமே சாபக்கேடானது. சாதிக்கும் மதத்திற்குமான உறவாடல்களை பெரியார் எடுத்துக் கூறிய போது அவர் மத விரோதியாக சித்தரிக்கப் பட்டார். ஆனால் இன்று சாதியையும் மதத்தையும் மட்டுமே வைத்து தான் பெரும்பாலான அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. மாணவர்கள் சாதிக்குள் அடங்காமல் சாதிக்க வேண்டியவர்கள். சாதியை அழிப்போம். மனிதத்தை மீட்போம். மானுட சாதியின் மனங்களை மாற்றுவழிப் பாதையை நோக்கி பயணிக்கச் செய்வோம். சமத்துவத்தைப் படைப்போம். புதிய உலகை உருவாக்குவோம். ●



# நீச்சல்

ஜூன் மாதம் என்றாலே குழந்தைகள் எல்லாம் கோடை விடுமுறைக்குப்பின் பள்ளிக்குத் திரும்பும் காலம் இது. ஒரு மாத கோடை விடுமுறையில் நகர மற்றும் மாநகரங்களில் இருந்து சில குழந்தைகள் கிராமத்திற்கும், கிராமத்தில் உள்ள சில குழந்தைகள் நகரத்திற்கும் தங்கள் தாத்தா, பாட்டியுடன் விடுமுறையைக் கழிக்கச் சென்றிருக்கலாம். இந்தக் கடுமையான வெய்யிலில் கிராமத்தில் உள்ள குழந்தைகள் சிலர் ஊரில் உள்ள கிணற்றில் குதித்து மணிக்கணக்கில் நீச்சல் அடித்து கோடை வெப்பத்தின் கொடுமையிலிருந்து தங்களை தற்காத்துக்கொண்டதை நகரத்திலிருந்து சென்ற குழந்தைகள் ஏக்கத்தோடு கண்டிருக்கலாம். நீச்சல் தெரியாத குழந்தைகள் விவசாயத்திற்கு நீர் இறைக்கும்போது தொட்டிகளில் குதித்து விளையாடி, தாங்கள் கிணற்றில் குதிக்க முடியாத ஏக்கத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கலாம். மேலும் சில குழந்தைகள் நகரத்திலேயே இருந்து தங்களின் திறமைகளை வளர்த்துக்கொள்ள ஏதாவது விளையாட்டுப் பயிற்சி, கையெழுத்துப்பயிற்சி, நீச்சல் பயிற்சி என கோடைகால சிறப்பு வகுப்புகளுக்குச் சென்றிருக்கலாம். பொதுவாகவே குழந்தைகளுக்கு இந்த பூமியில் உள்ள அனைத்துமே புதிதுதான். குழந்தைகளுக்கு இயல்பாகவே புதிய பொருளோடு விளையாடுவதில் ஆர்வம் அதிகம் அதுவும் குறிப்பாக நீர்நிலைகளில் விளையாடுவது என்பது அவர்களுக்கு மேலும் கூடுதல் மகிழ்ச்சி.

தற்பொழுது குழந்தைகளுக்குத் தற்காப்பு என்ற பெயரில் குங்பூ, கராத்தே போன்ற அயல்நாடுகளில் தோன்றிய தற்காப்புக் கலைகளை நமக்குத் தெரியாவிட்டாலும் பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்பி பயிற்று விக்கிறோம், ஆனால் நமது நாட்டில் நிகழும் நீர், நெருப்பு, புயல் போன்ற இயற்கையின் பேரழிவிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள நமது குழந்தைகளுக்கு போதுமான பயிற்சியே அளிப்பதில்லை என்பதுதான் கசப்பான உண்மை. எனவே இதையும் பள்ளிப்படிப்பின் ஒரு அங்கமாக்க வேண்டும். தமிழர்கள் நீர்நிலைகளுக்கு ஏரி, குளம், தெப்பக்குளம், ஆறு, ஓடை, ஊருணி, தடாகம்,கிணறு, பொய்கை என பல பெயர்களில் பராமரித்துள்ளார்கள் என தமிழ்ப் பண்பாட்டு ஆய்வாளர் தொ.பரமசிவம் குறிப்பிடுகிறார். அப்படி நீர் நிலைகளை நிர்வகித்த தமிழனுக்கு வெகு நாட்களுக்கு முன்பே நீச்சல் தெரிந்திருக்க வேண்டும். நீச்சல் ஒருவருக்கு தற்காப்புக்காக மட்டுமன்றி விளையாட்டாகவும், நல்ல உடற்பயிற்சியாகவும் விளங்குகிறது.

நீரில் எந்தவித உபகரணங்களும் இல்லாமல் தமது கை,கால்களை அசைத்து நீரில் மிதந்து, நகருவதையே நீச்சல் என்கிறோம். நமக்கு புத்துணர்ச்சியளித்து நம்மை சுறுசுறுப்பாக வைத்துக்கொள்வதில் நீச்சலுக்கு நிகர் நீச்சலேதான். நீச்சல் விளையாட்டு அல்லது உடற்பயிற்சி முதன் முதலில் எந்த நாட்டில் தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியாவிட்டாலும், ஒவ்வோர் மனிதனும் முதன் முதலில் தன் தாயின் கருவிலேயே கற்றுக்கொள்ளும் விளையாட்டு என்றால் அது நீச்சலாகத்தான் இருக்க முடியும். அதனால்தான் சின்னக் குழந்தைகள் எப்பொழுதும் தரையில் நீந்துவது போலவே கையையும் காலையும் அசைக்கின்றன. தாயின் பனிக்குடத்தில் குழந்தை கையையும் காலையும் அசைத்ததைத்தான் வெளியில் வந்த பிறகு குளம் அல்லது கிணற்று நீரில் அசைப்பதை நீச்சல் என்கிறோம். மனிதனின் மரணத்திற்குப் பின் அவனை எரித்த சாம்பல் கூட ஆற்று நீரில் நீந்தியே கடலில் கலக்கின்றன.

தமிழர்கள் நிலத்தில் விளையாடுவது போலவே நீரிலும் விளையாடி மகிழ்ந்தனர் என பட்டினப்பாலை மற்றும் பரிபாடல் கூறுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். மூச்சடக்கி முத்தெடுக்கும் வித்தை தெரிந்தவர்களுக்கு நீந்துவது என்ன சுமையா? சங்ககாலத் தமிழர்கள் கடல் நீரில் விளையாடிய பின் அவர்கள் ஆற்று நீரில் விளையாடி உடம்பிலுள்ள உப்புப் படிவைத் தூய்மை செய்துகொண்டனர் என்றும் அலவன் ஆட்டல், ஓரை, தைந்நீராடல், நீச்சல்,நடனம்,பண்ணை,புணை,புனலாடல்,மூழ்கல்,வண்டற்பாவை என பல விளையாட்டுக்களைச் சங்ககாலத் தமிழர்கள் நீர் நிலைகளான ஆற்றங்கரையிலும், கடற்கரையிலும் விளையாடியுள்ளனர் என்று தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. சிந்து சமவெளி நாகரிகக் குறிப்புகளும் இதையே வழிமொழிகின்றன. அதன் நீட்சியாகவே இன்றும் பலநாடுகளில் நீரில் நீந்துவது மட்டுமன்றி நீரில் பாய்தல், நீச்சல், ஒருங்கிசைந்த நீச்சல் நீர்ப் பந்தாட்டம் என பல வகையான விளையாட்டுகளும் விளையாடப்படுகின்றன. ஒலிம்பிக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சுவிட்சர்லாந்திலுள்ள லோசான் நகரைத் தலைமையகமாகக் கொண்ட பன்னாட்டு நீச்சல் கூட்டமைப்பு, இந்த விளையாட்டுகளை முன்னின்று நடத்துகின்றன.

நீச்சலை எந்த புத்தகத்தைப் படித்தும் கற்றுக்கொள்ள முடியாது. புத்தகத்தில் வேண்டுமானால் தண்ணீரில் குதித்து கையையும் கால்களையும் அசைத்து முன்னோக்கி நகரவும் என்று படிக்கலாம் அதனால் அவருக்கு நீச்சல் தெரியும் என்று பொருள் அல்ல. தண்ணீரில் ஒருவர் எவ்வாறு கை கால்களை அசைத்து செயல்படுகிறார்களோ அதுதான் அவர்களுக்கு நீச்சல் கற்றுக்கொள்ள உதவும். உலகத்தை உலகத்தில் இருந்துதான் கற்கமுடியும் அதேபோலத்தான் நீச்சலையும் நீரில் இருந்துதான் கற்கமுடியும்.

ஆற்று நீர் கடலில் கலந்தபின் அதில் ஆற்று நீரையும் கடல் நீரையும் பிரிக்க முடியாதோ அது போலவே உலகில் எங்கெங்கெல்லாம் நீர் இருக்கிறதோ அங்கெல்லாம் நீச்சலும் இருந்திருக்கிறது எனவே நீரையும் நீச்சலையும் ஒருபோதும் பிரிக்க முடியாது. உலகில் நீச்சல் முதன் முதலில் எங்கே தோன்றியது என்பதுதான் யாருக்கும் தெரியாதே தவிர, உலகின் எல்லா நாடுகளிலும் நீச்சல் விளையாட்டு இருந்திருக்கிறது. உலக நாகரிகத்தின் தொட்டில் என்றும் உலகத்திற்கே பகுத்தறிவையும் சிந்தனையைச் சொல்லிக்கொடுத்தவர்கள் என்ற பெருமைக்குச் சொந்தக்காரர்களான கிரேக்கர்களும் அதே நாகரிகத்தைப் பின்பற்றிய ரோமானியர்களும் பிறக்கும்போதே நீச்சலோடுதான் பிறந்தார்கள் என்கின்றனர் வரலாற்று ஆசிரியர்கள். 'நீச்சல் தெரியாதவன் கல்லாத மூடனைப் போன்றவன்' என்று இயற்கையோடு இணைந்து வாழ்ந்த கிரேக்கத் தத்துவஞானி பிளாட்டோ கூறுவதிலிருந்து

கு.முருகேசன்

அவர்கள் நீச்சலை எப்படி மதித்தார்கள் என்பது தெரிகிறது. அதேபோல உலக அழகியான கிளியோபாட்ராவின் மனதையே கொள்ளைகொண்ட ரோமாபுரி சாம்ராஜ்யத்தின் பேரரசனாகத் திகழ்ந்த ஜூலியஸ் சீசரும் சிறந்த நீச்சல் வீரர் என்று சரித்திரம் சொல்கிறது. மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே என ரோமானியர்களும் சிறந்த நீச்சல் வீரர்களாக விளங்கியுள்ளனர். கிரேக்கர்களும் ரோமானியர்களும் போர் வீரர்களாகவே தங்கள் வாழ்க்கையினைத் தொடங்கியவர்கள் என்பதால், பல நேரங்களில் கடற் போர் வீரர்கள் நீந்தியே கரையைச் சேரவேண்டும் எனவே, அந்நாட்டுப் போர் வீரர்கள் அனைவரும், நீச்சலில் வல்லவர்களாக இருக்க வேண்டியது கட்டாயம். எனவே அந்நாட்டு இளைஞர்களை, பனி நிறைந்த காலைப் பொழுதில் நிர்வாணமாக ஆற்றில் நீந்தவிட்டு அவர்களின் உடலையும் மனதையும் பலப்படுத்தினார்கள் என்பதை அவர்களின் வரலாற்றுக்குறிப்புக்கள் நமக்கு உணர்த்துகின்றன. சிறந்த போர்வீரர்களை உருவாக்குவதில்நீச்சல் விளையாட்டும் பெரும்பங்கு வகிக்கிறது.

நீச்சல் ஒரு சிறந்த உடற்பயிற்சியாகும். தரையில் எத்தனைப் பயிற்சிகள் செய்தாலும் அது நீச்சலில் கிடைக்கும் எல்லாப் பயன்களையும் முழுமையாக கொடுக்கமுடிவதில்லை. இன்னும் சிலர் இன்று யோகாவை முன்னிலைப்படுத்தி தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சி நடத்தி அதை பெரிய வியாபாரமாக மாற்றியிருக்கிறார்கள். அப்படி யோகா செய்யும் யோகா ஆசிரியர்களே மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சைக்கு வெளிநாடு செல்வதாக செய்தித்தாள்களில் செய்திகள் வருகின்றன. யோகாவில் கிடைக்கும் ஒழுங்கான மூச்சுப்பயிற்சி, உணவுக் கட்டுப்பாட்டால் பெறக்கூடிய உடல் எடையைப் பராமரித்தல், நடைப்பயிற்சியால் கிடைக்கும் இதயம் மற்றும் நுரையீரல் நலம் என அனைத்து நன்மைகளும் ஒரே பயிற்சியால் கிடைக்கும் என்றால் அது நீச்சல் பயிற்சி மட்டுமே.

ஒழுங்கான சந்தத்துடன் கூடிய சீரான சுவாசத்தோடு செய்யப்படும் நீச்சல் உடற்பயிற்சியின்போது உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி பெறுகிறது அதனால் நீந்துபவரின் மனமும் உடலும் ஆரோக்கியம் பெறுகின்றன. ஒழுங்கான




நீச்சல் பயிற்சியின் மூலம் நாம் பின்வரும் நன்மைகளை அடையலாம்.



- நீச்சல் அடிப்பது செரிமான சக்தியைத் தூண்டி, அஜீரணக் கோளாறைப் போக்கி, பசியைத் தூண்டச் செய்கிறது. மலச்சிக்கலை நீக்கி ஆழ்ந்த உறக்கத்தை வரவழைக்கிறது.
- கை, கால் குடைச்சல் மற்றும் மூட்டு வலிகளில் இருந்து நிவாரணம் கிடைக்கும்.தரையில் ஓடும்போது ஏற்படும் மூட்டுத் தேய்மானம் நீச்சலில் இல்லை.
- இதயம் வலுப்பெறுவதால் இரத்த ஓட்டமும், நுரையீரல் நன்கு விரிவடைந்து காணப்படுவதால்மூச்சோட்டமும் சீராகிறது.
- ஒரு மணி நேர நீச்சல் பயிற்சி மூலம் சுமார் 800 கலோரிகள் எரிக்கப்படுவதால் உடல் எடையை குறைக்கவும் நல்ல தன்னம்பிக்கையையும் மன ஒருமைப்பாட்டையும் தருகிறது.
- கர்ப்பிணிகள் முறையாக நீச்சல் பயிற்சி மேற்கொள்வதன் மூலம் சுகப்பிரசவம் பெறமுடியும்.
- கழுத்தளவு தண்ணீரில் இருந்து செய்கிற பயிற்சிதான் சிறந்த இசைக் கலைஞர்களை உருவாக்குகின்றன.
- எலும்பு முறிந்தவர்கள் கட்டுகட்டி எலும்பு கூடியபின் கை கால்களின் சீரான இயக்கத்திற்கு நீச்சல் பயிற்சி பெரிதும் உதவுகின்றன.
- நீச்சல் சிறந்த முதலுதவி மற்றும் தற்காப்புக்கலையாக விளங்குவதோடு உடல் அழகையும் ஆரோக்கியத்தையும் பராமரிக்க உதவுகிறது.
- தரையில் உடற்பயிற்சி போது ஒரு குறிப்பிட்ட உடற்பகுதி அல்லது தசை மட்டுமே ஒரு நேரத்தில் பயிற்சிக்கப்படுகிறது. நீச்சலில் முழு உடலும் ஒரே நேரத்தில் ஈடுபடுவதால் முழு உடலின் நெகிழ்வுத்தன்மையும் அதிகரிக்கின்றது.
- இடுப்பு வலி, கழுத்து வலி, தோள்பட்டை வலி நீங்குவதுடன், முதுகெலும்பின் முடிச்சுகள் பலம் பெறுகின்றன.
- ஒழுங்கான நீச்சல் பயிற்சி ஆயுளை அதிகரிக்கும்.

நீச்சலில் பல வகைகள் உண்டு, ஒவ்வொன்றும் ஒரு வகையில் பயன்படுகிறது. மார்பு நீச்சல் அல்லது தவளை நீச்சல் தோள்பட்டை, கழுத்து, கால்களுக்கு நல்ல பயிற்சியைக் கொடுக்கிறது.

விரைவு நீச்சல், இடுப்பு எலும்பு, இடுப்பு தசைகள் மற்றும் முதுகெலும்பையும் உறுதியாக்குகிறது.

பின் நீச்சல் கெண்டைக்கால் தசைகள் மற்றும் இடுப்புப் பகுதி தசைகளை வலுப்படுத்துகிறது.

வண்ணத்துப்பூச்சி நீச்சல் வயிற்றுப் பகுதி தசைகள் மற்றும் முதுகுப் பக்கமுள்ள தசைகளை நன்கு வலுப்படுத்துகின்றன.

பெற்றோர்கள் குழந்தைகளின் மூளையைப் பலப்படுத்த நினைக்கும் அளவிற்கு அவர்களின் உடலைப் பலப்படுத்த நினைப்பதில்லை. எனவே பிள்ளைகளுக்குக் கல்வியோடு நீச்சலையும் கற்றுக்கொடுப்போம் வாழ்க்கையில் எதிர்நீச்சல் அடிக்கவும் கற்றுக்கொடுப்போம். அதன் மூலம் ஆரோக்கியமான எதிர்காலத் தலைமுறையை உருவாக்குவோம்.

**– இன்னும் விளையாடலாம்**



▪ ஜூலை 12 – (1920) – கப்பல் போக்குவரத்தை துரிதப்படுத்தும் முயற்சியாக பனாமா கால்வாய் திறக்கப்பட்டது.

ஜனநாயகம், மக்களாட்சி போன்ற தற்கால நவீன அரசியல் சொல்லாடல்கள் கொண்டு ஆட்சிகள் நடைபெற்றாலும் கூட ஒவ்வொரு ஆட்சியும் காலத்தினாலும் மக்களாலும் விமர்சனம் செய்யப்படுவது என்பது இயல்பாகவே உள்ளது. சில சமயங்களில் ஜனநாயகத்தைக் கூட பூர்ஷ்வா ஜனநாயகம், முதலாளித்துவ ஜனநாயகம் என்றெல்லாம் விமர்சனம் செய்வதை கண்டிருக்கிறோம். அந்த வகையில் ஜனநாயகம் என்பது காலம்காலமாக ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டுள்ள மக்களே ஜனநாயகத்தை புறந்தள்ளுபவர்களைக் காட்டிலும் கூடுதலாக விமர்சனம் செய்கிறார்கள். காரணம் அது மக்களின் முழுமையாக விருப்பத்திற்கு மாறானதாக கையாளப்படுகிறது.

இந்த கருத்தியலை தந்தை பெரியார் அவர்கள் 19.03.1968இல் விடுதலை நாளேட்டில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

“சரியாகவோ தப்பாகவோ இந்தியாவில் ஜனநாயக ஆட்சி வந்துவிட்டது. ஆனால் கட்சி ஆட்சிகள் அதை சிரிப்பாய் சிரிக்க வைக்கின்றன? இதைப்பார்த்து மற்ற நாட்டார் என்ன நினைப்பார்? ஜனநாயக வாதிகள் வெட்கப்பட வேண்டாமா”?

ஆக ஜனநாயகத்தின் தோற்றம் ஏற்பட்டகாலம் முதலே அது மக்களின் விருப்பத்தை புறந்தள்ளி மக்களின் விருப்பத்திற்கு மாறானதாகவும் மிகச்சிலருக்கு லாபகரமானதாகவும் கையாளப்படுவதைக் காணமுடிகிறது.

ஜனநாயக ஆட்சியின் சிறப்பம்சங்களாக உள்ள சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை மக்களுக்கு முழுமையாக கிடைக்காத நிலையிலேயே தான் மக்கள் ஜனநாயகத்தின் சிறப்பம்சங்களைப் பெறுவதற்காக தங்கள் குரலை உயர்த்துகின்றனர். தத்துவ மேதையான அரிஸ்டாட்டில் ஜனநாயகம் பற்றிக் குறிப்பிடுகையில் “வழிதவறி இருந்த அதிகாரம் சிறப்பான வடிவத்தை பெறுவதே ஜனநாயகம்” என குறிப்பிடுகிறார். ஆனால் ஜனநாயகமே தடம்மாறி வழிதவறுவதே விமர்சனத்திற்கான காரணியாக உள்ளது.

மன்னராட்சி எனப்படும் பெரும்பான்மையான மனுநூல் ஆட்சியாளர்களும் அவர்களின் கொடுங்கோன்மையிலிருந்தும் தங்களை விடுவித்துக்கொண்ட மக்கள் காலனியாதிக்க ஆட்சியில் சிக்கித்தவித்து பின்னர் அதிலிருந்து மீண்டு மக்களாட்சி எனும் ஜனநாயக ஆட்சிப்பாதையிலே தங்களை நிலைப்படுத்திக்கொண்டார். நவீன நாகரீக ஆட்சிமுறை தளமாக ஜனநாயக ஆட்சி அதன் கடமைகளை மக்களுக்குச் சரிவர ஆற்றாத போதும், ஜனநாயகமே மக்களை ஒடுக்குகிறபோதும் மக்கள் பின்னோக்கிய பாசிச ஆட்சிமுறைகளுக்கும் தற்போதைய ஜனநாயக ஆட்சிமுறைக்கும் இடையிலான வேறுபாடுகள் ஏதும் பெரியதாக இல்லை என்கிற முடிவை நோக்கி நகர்கின்றனர். மக்களால் மக்களுக்காக மக்களே நடத்துகிற ஆட்சியான ஜனநாயக மக்களாட்சி நம் நாட்டில் மறைமுக ஜனநாயகமாக விளங்குகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஒன்றுகூடி ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். குறைவான மக்கள் தொகை கொண்டிருந்த கிரேக்கத்தில் நேரடி மக்களாட்சி நடைபெறுகையில் மக்களே நேரடியாக ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கவும், அகற்றவும், கேள்வி கேட்கவும் முடிந்தது. ஆனால் மறைமுக மக்களாட்சி ஜனநாயகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் கேள்விகளுக்கும், விமர்சனங்களுக்கும் அப்பாற்பட்ட நபராக விளங்குவதையும், அவர்கள் மக்களுக்கு விரோதமாகச் செயலாற்றும் போது பிரதிநிதியை கூட அகற்றுவதற்கான நடைமுறைகள் இல்லாமல்



# ஜனநாயகத்திற்குள்ளே!



இருக்கும் அமைப்பு முறைகளால் ஜனநாயகம் விழுங்கப்படுவதை மக்கள் உணர்கின்றனர்.

இந்திய ஜனநாயகத்தை நிறுவிய முக்கியமான தலைவர்களான காந்தி, நேரு, அம்பேத்கர் இடையிலேயும்கூட ஜனநாயகம் பற்றிய ஒத்தகருத்து இருந்ததில்லை. கிராமங்களின் பழமைவாத சூழலையும் அங்கே நிலைகொண்டிருந்த வர்ண பாகுபாடுகளையும், ஒடுக்குமுறைகளையும் மாற்றுவதற்கான செயல்திட்டத்தை விரும்பாத காந்தியார் கிராமங்களின் நிலையை பழைய நிலையிலேயே தொடர்ந்து இருந்து வருவதையே ஜனநாயகமாகக் கருதினார். இந்த கருத்தை காந்தியின் அரசியல் வாரிசாகவும், மேலைநாட்டு நாகரீகத்தை உள்வாங்கிய நேருகூட ஆதரிக்கவில்லை. அதே நேரத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் காந்தியாரின் கிராமங்கள் பற்றிய கண்ணோட்டத்திற்கு நேரெதிரான சிந்தனையைக் கொண்டிருந்தார். நவீன சாதனங்களும் நகர நாகரீக மாற்றங்கள் தான் கிராமங்களைப் பாகுபாடுகளிலிருந்து விடுதலையடையச் செய்யும் எனவே ஜனநாயக அரசு வேண்டுமெனில் சமூகம் ஜனநாயகமாக்கப்படவேண்டும் என்ற உறுதியான கருத்தை முன்வைத்தார்.

சமூகத்தில் ஜனநாயகம் முழுமையாக பரவாததினால்தான் ஜனநாயகத்தின் கூறுகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவைகள் பெயரளவிற்கு எழுத்துக்களில் மட்டுமே இடம்பெற்றுவிட்டது. கருத்து சுதந்திரமும், தங்களின் உணவு, உடை, இருப்பிட சுதந்திரமும் கூட ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் போதுதான் சுதந்திரம் என்ற ஒன்று இருக்கிறதா என்ற வினா எழும் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் சமூக நீதி கொள்கைகள் புறந்தள்ளப்பட்டு வலியோர் மட்டுமே கல்வியும், வேலைவாய்ப்பும் பெறமுடியும் என்ற நிலையிலேயே சமத்துவம் பற்றிய வினா எழும். இன்றளவும் மாறாத ஆண்டான் அடிமை நிலை, பிறப்பினால் ஏற்றத்தாழ்வு பாகுபாடு போன்ற பழமைவாதம் பரவிக்கிடக்கும் சூழலில் தான் சகோதரத்துவம் பற்றிய கேள்வி எழும் இந்த மூன்று கேள்விகளும் ஒன்றிணைந்தே ஜனநாயகத்தை சந்தேகிக்கச் செய்துவிடுகிறது.

ஜனநாயகத்தின் சிறப்புகள் ஜனநாயகத்தின் முக்கிய அம்சங்களில்தான் ஒளிந்திருக்கிறது. அவை மக்களுக்கு பூரணமாகக் கிடைக்காத காலம்வரை ஜனநாயகம் என்பது வெற்றுக் கூச்சலாகவும் சொல்லாடலாகவும் மக்களின் சிந்தனையில் நிலைகொண்டிருக்கும்.

“சுதந்திரம் கொடுத்ததாகப் பெயரளவில் இருக்கிறது. ஆனால் அரசியலில் நடைபெறுவது எல்லாம் பித்தலாட்டமும் அயோக்கியத்தனமுமாகத்தான் இருக்கிறது. ஜெயித்தவன் அவனவன் ஜாதிக்கு நலத்தையும், சௌகரியத்தையும் செய்து கொள்கிறான் என்றால் இது ஜனநாயகமா? பித்தலாட்ட நாயகம், அயோக்கிய நாயகம், ஜாதி நாயகம் என்பதுதான் பொருந்தும்.”

**(விடுதலை 15.10.1954)**



# மந்திரமா? தந்திரமா?



## மடக்கிய கைவிரல்களை விரித்தாலும் கத்தி விழாமல் ஒட்டிக் கொள்ளும்

**தேவையான பொருட்கள்:** 6 அங்குல நீளமுள்ள ஒரு கத்தி

**மேஜிக் செய்யும் முறை:** மந்திரம் போடும் வித்தைக்காரர் போல் நம் நடவடிக்கைகள் இருக்க வேண்டும். இதோ என்கையில் ஒரு கத்தி உள்ளது அதைக் கையில் பிடிக்காமலே ஒட்டிக்கொள்ள செய்கிறேன். இதை மந்திரத்தில் செய்து காண்பிக்கிறேன். என்பதாகச் சொல்லிக்கொண்டே கைவிரல்களை நீட்டி மடக்கி காண்பித்துக் கொண்டு இடது கையில் கத்தியை பிடித்துக் கொண்டு வலது கையை இடதுகை மணிக்கட்டுப் பகுதியில் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

வேகமாக மந்திரிப்பது போல் ஆரவாரம் செய்து கொண்டே இடது கை விரல்களை ஒவ்வொன்றாக விரித்துக் கொண்டே வரவும். அய்ந்து விரல்களையும் விரித்த பின்பும் கத்தி கையில் அப்படியே ஒட்டிக்கொள்ளும்.

இதைப் பார்ப்பதற்கு ஆச்சரியமாக இருக்கும்.

**மேஜிக் இரகசியம்**

1. மேஜிக் செய்யும் போது இடது கை உள்ளங்கை நமது பக்கம் இருக்க வேண்டும்.
2. வலது கையால் இடது கையை பிடிப்பது போல் ஆட்காட்டி விரலை வலது உள்ளங்கையில் உள்ள கத்தியை அழுத்திப் பிடித்துக் கொள்ள வேண்டும்.
3. கத்தி எடை குறைவான தகட்டால் இருக்க வேண்டும்.
4. இதையே இரண்டு கைகளையும் விரித்துக்கொண்டும் செய்யலாம்.
5. கவனம். இது மற்றவர்களுக்குத் தெரியாதவாறு செய்வதோடு பலமுறை பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ●





■ ஜூலை 13 – (1994) தீபிகா குமாரி – (இந்திய வில்வித்தை வீராங்கனை.) பிறந்த தினம்

இந்த உலகில் (பூமியில்) பெரும்பான்மையாக வாழும் உழைக்கும் மக்களின் நிலை என்ன? உழைக்கும் மக்களுக்கு அதற்கான அங்கீகாரம் கிடைக்கிறதா? உழைப்பாளிகளுக்கு உரிய ஊதியம் கிடைக்கிறதா? உழைப்பாளிகள் மதிக்கப்படுகிறார்களா? இந்த உலகம் இன்று நாம் காணும் நவீனத்துவம், நாம் அனைவரும் நமது உள்ளங்கையில் உலகத்தை வைத்துள்ளதற்குக் காரணம். உழைப்பு, உழைப்பாளிகள். அந்த உழைப்பாளிகளின் நிலை என்ன? சொல்லிக்கொள்ளும் படியான நிலை உள்ளதா? இரவு, பகல் பாராமல் காலமெல்லாம் உழைக்கும் மக்கள் உழைத்துக்கொண்டே இருக்கிறார்கள். ஆனாலும்கூட இவர்களின் வாழ்க்கையில் எந்த மாற்றமும் நிகழ்வதேயில்லை. ஆனால் என்றாவது ஒருநாளில் நம் வாழ்க்கையிலும் மாற்றம் வரும். நாமும் ஏற்றம் பெறுவோம் என்ற நம்பிக்கையில் உழைத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

இந்த அப்பாவி மக்கள் தங்களுக்கு வேலை கொடுக்கும் ஒவ்வொரு முதலாளிகளும், நல்லவர்கள், தங்களுக்கு வாழ்வு அளிப்பவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள்தான் இவர்களின் வாழ்க்கையை அழித்துக் கொண்டிருப்பவர்கள் என்கின்ற உண்மை இந்த மக்களுக்கு புரிவதே இல்லை. (சிறு, குறுதொழில் செய்யும் நமது மக்களில் ஒருவரான முதலாளிகள் அல்ல) வேலை கொடுப்பவர்கள் பெரிய மனிதர்கள், இவர்கள் எல்லோரும் கொடுத்தே பழக்கப்பட்டவர்கள், கடவுளுக்கு நிகரானவர்கள், நல்லவர்களாகத்தான் இருப்பார்கள் என்பது இந்த அப்பாவி மக்களின் நம்பிக்கை. இதுபோன்ற முதலாளிகள் மட்டுமல்ல, இவர்கள் நம்பும் கடவுளும், மோசடி கும்பல்களின், சுரண்டல்வாதிகளின் கைக்கூலி போலத்தான் என்பதும், இதுபோன்ற கும்பல்களால் அவர்களின் நலன்களுக்காக அவர்களால் படைக்கப் பட்டதுதான் இந்த கடவுள் என்பதும் இந்த மக்களுக்கு புரிவதேயில்லை.

இந்த நாட்டில் உள்ள சட்டத்தை பின்பற்றாதவர்களை, மீறுபவர்களைக் கண்டுபிடிக்க காவல்துறையும், தண்டிக்க



# இந்த உலகம் யாருக்கானது?

கா.தமிழரசன்

நீதித்துறையும், சட்டத்தின் பெயரால் நடைபெறும் ஆட்சியும், ஆட்சியாளர்களும், இருக்கின்றபோது நம்போன்ற உழைக்கும், அப்பாவி பொதுமக்கள் எவரேனும் பாதிக்கப்பட்டால், இவைகளும், இவர்களும் நம்மை, நம்போன்ற மக்களைக் காப்பாற்றுவார்கள் என்கின்ற பெரும் நம்பிக்கையில் இந்த மக்கள் உள்ளார்கள். ஆனால் இவர்களின் இந்த ஏழ்மை, வறுமை என்றென்றும் வேலைகொடுக்கும் முத(லாளி)லைகளையும், ஆட்சியாளர்களையும் நம்பிக் கையேந்தும் நிலை மாறாமல், இவை ஆண்டாண்டு காலமாய் தொடர்வதற்கு இவர்கள் யாரை பெரும் நம்பிக்கையோடு, நம்பிக் காத்திருக்கிறார்களோ அந்த உத்தமர்கள்தான் காரணம் என்பதை உணராதவர்கள் இந்த பாவப்பட்ட அப்பாவி மக்கள். இந்த மக்களின் “வறுமை,” மற்றவைகளைப்பற்றிச் சிந்திக்க விடாமல் செய்து விடுகிறது. காரணம், இருக்க இடம் இல்லாவிட்டாலும் உடுத்தக் கந்தலும், உயிர்வாழ உணவென்று கஞ்சியாவது வேண்டுமல்லவா? அதற்காகவாவது உழைக்க வேண்டும், அதற்கொரு வேலை வேண்டும் அந்த வேலையை கொடுப்பவர்களை கடவுளாக நினைக்கும் பரந்த உள்ளம் படைத்த சோற்றுக்கே வழியில்லாத இந்த அப்பாவி மக்கள். இவர்கள் எங்கே மற்றதைப்பற்றி யோசிக்க? இதுபோன்ற நிலையே காலமெல்லாம் நீடிக்க வேண்டுமென்பதும், இதை இன்று வரை நீடிக்க வைத்திருப்பதும்தான் இந்த மோசடிக் கும்பல், சுரண்டல் வாதிகளான, அடுத்தவன் உழைப்பில் வயிறு வளர்க்கும் இந்த யோக்கியர்களின் வெற்றி.

மக்களின் உழைப்பைச் சுரண்டும் சுயநலவாதிகளும், அவர்களுக்கு உதவி செய்வது அல்லது அந்தச் சுரண்டலுக்கு, சுரண்டல்வாதிகளுக்கு துணைபோவது. இது ஆட்சியில், அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகளின் நிலை. இதற்கிடையில் வாழும் பெரும்பான்மை உழைக்கும் மக்கள் பொதுவாக நமது மக்களின் அறியாமை, ஆற்றாமை, போன்றவைகளால் அவர்கள் அடிமையாய், அடியாளாய் ஒற்றுமையின்றி தனித்தனியாய் பிரிந்து அனாதைகளாய் உள்ள நிலையை உணர வேண்டும் இந்த நிலை ஏன் வந்தது? யார் காரணம்? இந்த நிலை மாறுமா? என்றென்றும் இதே நிலை தொடருமா? தொடரும் எனில் ஏன்? எதனால்? யாரால்? இந்த நிலை மாறுவதற்கு என்ன செய்யவேண்டும் யார் செய்வது? என்பதுபோன்ற சிந்தனையற்று உள்ள பெரும்பான்மையான மக்கள் அவர்களின் உண்மை நிலையை உணர்ந்துவிட்டால், போராட வீதிக்கு வந்துவிடுவார்கள்.

அதற்காக அறிவார்ந்தவர்கள், மக்களின் நலனில் உண்மையான அக்கறையுள்ள சமூக ஆர்வலர்கள், போராளிகள், நல்லமைப்புகள் போராடுகின்றன. இனி, அதை இன்னும் வேகப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் நெருக்கடியில் இன்றையச் சூழ்நிலை உள்ளது. பொதுவாகவே அடுத்தவர்களின் நலனிலும் சிறிய அளவிற்காவது அக்கறை கொள்ளும் சிந்தனையுள்ள மனிதர்கள் என்கின்ற நிலையிலிருந்து, இந்த மக்களை மானுடப்பற்று முற்றிலும் இல்லாத மனிதர்களாய், செயற்கைத்தனம் கொண்ட, வாழ்க்கையில் தவறியும், அறம் அற்று வாழும் வாழ்க்கை முறையை கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கின்றன இன்றைய முதலாளிகளின், வியாபாரிகளின் உலகம்.



மக்கள் தங்களுக்குத் தெரிந்த, அல்லது கிடைத்ததை வைத்துக்கொண்டு தன் விருப்பப்படி, ஆசைப்படி ஏதோ ஒரு வாழ்க்கை முறையில் யாருக்கும் தொந்தரவு கொடுக்காமல் உலகில் ஏதோ ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களை, அந்த இடத்தை விட்டு அந்த வாழ்க்கையை விட்டு துரத்துகிறது இந்த வியாபாரிகளின் கூட்டம். மக்கள் வாழும், வாழ்க்கைக்கு ஆதாரமான நிலம், கடல், ஆறு, காடு, மலைகள் என இவைகளில் உள்ள இயற்கை வளங்களைக் கொள்ளையடிக்க வளர்ச்சி என்கின்ற பெயரில் அவர்கள் வாழ நம் வாழ்க்கையை அழிக்கின்ற வேலையை உலகம் முழுக்க செய்து கொண்டிருக்கிறது இந்த வியாபாரக் கும்பல்கள்.

இதில், நம்மை பெரிதும் வருத்தம் அடையும் செயல் இதுபோன்ற செயல்களிலிருந்து நம்மைக் காக்கவேண்டிய, ஆட்சி அதிகாரத்தில் ஆட்சியாளர்களாய் உள்ள அரசியல்வாதிகளே அதற்குத் துணைபோவது மட்டுமின்றி, அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுபவர்களாய் உள்ளது, அவர்கள் அடிக்கும் கொள்ளைக்கு, சுரண்டலுக்கு உறுதுணையாய் நின்று எதிர்க்கும், மக்களை கொன்றுக் குவிக்கவும் தயாராக உள்ளார்கள் என்றால் இந்த அரசும், அதிகாரத்தில் உள்ளவர்களும் மக்களுக்கானவர்களா இல்லை, இல்லவே இல்லை.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் உலகில் உள்ள இயற்கை வளங்களைக் கொள்ளையடிக்க விரும்புகிறவர்கள், அது எந்த நாட்டில் எந்த மூலையில் இருந்தாலும் சரி, அதை எடுக்கும்போது, அதாவது கொள்ளையடிக்க நினைக்கும்போது (திருட நினைக்கும்போது,) எந்தவிதமானதொரு எதிர்ப்பும், தடையும் இருக்கக்கூடாதென்று நினைக்கிறார்கள். அதற்கேற்றவாறுதான் ஆட்சியாளர்கள் திட்டங்களையும், சட்டங்களையும் தீட்டுகிறார்கள். அதையும் மீறி மக்கள் கேள்வி கேட்கும்போது அல்லது எதிர்க்கும்போது இவர்களால் அந்த மக்களை சகித்துக்கொள்ள முடியாமல், பொறுத்துக்கொள்ள முடியாமல், வளர்ச்சிக்கு எதிரானவர்கள், சமூக விரோதிகள், தேசவிரோதிகள், தீவிரவாதிகள் என அப்பாவி மக்களைப் பற்றி வசைப்பாடுகிறார்கள்.

பொதுவாக இதுபோன்ற கொள்ளைக் கும்பல்களின் ஆதரவானவர்கள், கட்சியில் சில பதவியில் உள்ள எடுப்புகள் சிலபேர் செய்யும் அழிச்சாட்டியத்தைப் பார்த்தால் நாமே பொறுமையின் எல்லைக்கே சென்றுவிடுவோம் அவ்வளவு தரம் தாழ்ந்து இருக்கும் அந்த உத்தமர்களின், தேசாபிமானிகளின் செயல்பாடுகள். இந்த திருட்டுக் கூட்டத்தார்களின் எண்ணமே மக்கள் என்று எவருமே இருக்கக்கூடாது. மீறி இருந்தாலும், இவர்கள் செய்யும் செயலுக்கு எந்தவிதமானதொரு எதிர்ப்பும் தெரிவிக்கக்கூடாது. இல்லையேல் அந்த மக்கள் அனைவரும் கைகட்டி, வாய்பொத்தி அமைதியாக, அடிமையாக இருக்க வேண்டும். அதாவது மக்கள் அனைவரும் இவர்களின் காலுக்கு அடியில் மிதிபடும்



■ **ஜூலை 15** – (1947) – இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இந்திய விடுதலைச் சட்டம் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரால் நிறைவேற்றப்பட்டது.

புழுக்களைப்போல இருக்க வேண்டுமென்பது இவர்களின் பெருங்கனவு. இங்கே நாம் கவனிக்க வேண்டியது நமது ஆட்சியாளர்களைப் பற்றித்தான். காரணம், இவர்கள் யாருக்கானவர்கள்? உண்மையிலேயே மக்களுக்காகத்தான் இவர்கள் செயல்படுகிறார்களா? இவர்களின் எந்தச் செயலும் நமக்கு அந்த நம்பிக்கையை அளிக்க மறுக்கிறது.

இன்றையச் சூழலில் இங்கே அரசாங்கம் என்பதெல்லாம் மக்களுக்கானதாக இல்லை. இதை அந்த அரசாங்கத்தை உருவாக்கும் தகுதி, சக்திப் படைத்த சாதாரண வாக்காளர்களான பொதுமக்கள் உணராவிட்டால் நம்மை காக்க எவராலும் முடியாது. காரணம் வானளாவிய அதிகாரத்தை ஆட்சியாளர்களின் கையில் கொடுத்துவிட்டு, நாம் அவர்களிடம் பிச்சை கேட்பதுபோல் கையேந்தி நிற்கின்றோம். அவர்கள் தான்தோன்றித்தனமாக நினைத்ததை, மக்களுக்கு எதிரானவற்றை நிறைவேற்ற இந்த மக்களையே எதிரிகள் போல கொன்றுக் குவித்துவிட்டு நினைத்ததை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் எதிர்ப்பது, எதிர்க்க வேண்டியது தனிப்பட்ட எந்த முத(லை)லாளிகளையும் அல்ல. காரணம், நமது ஆட்சியாளர்களின் அனுமதியில்லாமல் இவர்களால் எதையும் செய்ய முடியாது. அதற்குத்தான் நமது ஆட்சியாளர்கள் முதலாளிகளின் நிறுவனத்தில் முக்கிய தொழிலாளிகளைப்போல் நமது ஆட்சியாளர்களே அப்பணியை திறம்படச் செய்கிறார்கள், செய்து முடித்துவிடுகிறார்கள்.

ஆகவே நாம் விழிப்போடு இருக்கவேண்டியது எந்த அவதாரம் எடுத்து வந்தாலும் நல்லாட்சி தருகிறோம், வேலைவாய்ப்பை ஏற்படுத்துகிறோம், மணலைக் கயிறாகத் திரிக்கிறோம், வானவில்லை வில்லாகச் செய்வோம், வளர்ச்சி, முன்னேற்றம் என்றெல்லாம் சொல்லி அவர்கள் செய்யும் தகிடுதத்தங்களை இனியும் நம்பி ஏமாந்தால் நம் கதி அதோகதிதான். நாம் இவர்களின் கோரமுகத்தை இனியும் கவனிக்கத் தவறினால் நம்மை நாமே படுகுழியில் புதைத்துக் கொள்ள ஏற்பாடு செய்து கொண்டதைப்போல் ஆகும். நமது ஒரு “ஓட்டில்” என்ன பெரிய மாற்றம் வந்துவிடப்போகிறது என்று, ஒற்றுமையற்ற இந்த மக்கள் நினைத்து வாக்களி(த்த)ப்பதின் விளைவுதான்! நம்மோட இந்த நிலைக்குக் காரணம் என்பதை உணர்ந்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

ஒற்றுமையாய் இருக்க வேண்டும். தங்களின் உரிமை என்ன? அதிகாரம் என்ன? என்பதை மக்கள் அனைவரும் உணர்ந்துவிட்டால்! அன்றே ஒழியும் அடிமைமுறை அது அவ்வளவு எளிதில் நடந்துவிடாது நடக்கவும் விடமாட்டார்கள், இங்கே உள்ள அடுத்தவனின் உழைப்பில் வயிறு வளர்க்கும் கூட்டத்தார். ஆனாலும் மக்கள் அனைவரும், அனைத்திலும் ஒன்றிணைந்து, ஒன்றாகப் போராடினால் அனைத்தும் மக்களுக்கானதாக மாறும். அதற்கு மக்கள் அனைவரும் அனைத்திலும் வேற்றுமை களைந்து ஒன்றிணைவோம்! இந்த பூமி நமக்கானது. நம்மைச் சுற்றியுள்ள அனைத்து உயிர்களுக்கானது. இது நமது மண், இங்கே உள்ள காடு, மலை, கடல், ஆறுகள் இயற்கை வளங்கள் என அனைத்தும் நம்முடையது. இவைகளை யாருக்காகவும், எதற்காகவும் எந்தச் சூழ்நிலையிலும் இழக்க மாட்டோம், என்கின்ற மன உறுதியோடுப் போராடுவோம் வெற்றி பெறும்வரை. மக்களின் ஒற்றுமையே தன்னிகரில்லாத பலம். அதை நாம் பெற்றுவிட்டால் இந்த பூமி உழைக்கும் மக்களுடையதே. அதற்கு உழைக்கும் மக்கள் அனைவரும் ஒன்றாய் அணிதிரள்வோம், போராடுவோம். போராடுவோம். ●


# கைத்தடியோடு கைகோருங்கள்...!

கைத்தடி வாசகர்கள் அனைவருக்கும் அன்பு வணக்கங்கள்,

கைத்தடி மாத இதழ் ஓராண்டைக் கடந்து இரண்டாம் ஆண்டின் நான்காம் மாதத்தில் தனது முத்திரையைப் பதிக்கத் துவங்கியுள்ளது. இந்த தொடர் வெற்றிக்கு வாசகர்களாகிய தாங்கள் தான் காரணம் என்பதனை நாங்கள் நன்கு அறிவோம்! அதற்கு எங்களின் மனமார்ந்த வாழ்த்து(நன்றி)களை இந்த தருணத்தில் பதிவு செய்துகொள்கிறோம்! மேலும் எங்களின் தொடர் முயற்சிகள் வெற்றிபெற தங்களின் ஆதரவு அவசியம் என்பதனை நினைவுபடுத்த விரும்புகிறோம்! ஓராண்டு முடிந்த நிலையில் உங்களின் சந்தா நன்கொடையை எதிர்பார்க்கிறோம்! ஓராண்டு சந்தா நன்கொடை ரூ.250 மட்டும். அதனை செலுத்தி தொடர்ந்து எங்களை ஊக்கப்படுத்த கேட்டுக்கொள்கிறோம்!

மேலும் இதழின் வளர்ச்சியைக் கருதி இதழ் வளர்ச்சிக்கான நன்கொடைகள் வழங்க விரும்பினால் கீழே கொடுக்கப்பட்ட வங்கி கணக்கில் செலுத்திவிட்டு கீழே உள்ள எண்ணைத் தொடர்புகொண்டு தகவல் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறோம்! உங்களுடைய நன்கொடை 10 ரூபாயாக இருந்தாலும் அதனை மகிழ்ச்சியாக ஏற்று இதழை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்க விரும்புகிறோம்.

நன்றி!

வாருங்கள் சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்
கைத்தடியோடு பயணிப்போம்!

A/C NO: 34939017347
IFSC CODE : SBIN0000832
NAME : ARIVAZHAGAN.C
PHONE NO : 7373333078
State Bank of India, Dharmapuri

மேலும் விபரங்களுக்கு அழையுங்கள்: **73733 33078, 86673 42047**


 ▪ **ஜூலை 15** – (1955) – இந்தியாவின் மிக உயரிய விருதாகக் கருதப்படும் 'பாரத ரத்னா' விருது முதன்முதலாக பிரதமர் ஜவகர்லால் நேருவுக்கு வழங்கப்பட்டது.

டி.எஸ்.எஸ்.மணி

# பெண் என்றால் மானுடம்

“ஆண்களும், பெண்களும் சமம்தானே. பெண்களின் உரிமைக்காக எத்தனையோ சட்டங்கள் வந்துவிட்டனவே. முன்ன மாதிரியெல்லாம் இல்லீங்க. பெண்கள் இப்போதெல்லாம் பணிகளுக்காக வெளியே வர்றாங்க. எல்லா வேலைகளிலும் பெண்கள் இருக்காங்களே. பொறியியல் படிப்புக்குக்கூட, பெண்கள் நிறைய படிக்க வர்றாங்க. படிச்சு முடிச்சு வேலைக்கு போறாங்க. பாருங்க. பேருந்துகளிலும், மின்சாரத் தொடர் வண்டிகளிலும் கூட்டம், கூட்டமாக பெண்கள் பணிக்குச் சென்றுத் திரும்புவதைப் பார்க்க வில்லையா? பெண்கள் கொஞ்சம் அல்லது அதிகமாகவே, அடங்கிப் போகிறார்கள் என்பதால், தனியார் நிறுவனங்கள் கூட, பெண்களை அதிகம் பணிக்கு எடுக்கிறார்கள். இதனால் ஆண்களுக்குத்தான் வேலை கிடைக்காமல் போகிறதே தவிர, “இப்போதெல்லாம் பெண்களுக்கு எப்படியும் வேலை கிடைத்து விடுகிறது. முன்னப் போல இல்லீங்க இப்போவெல்லாம்." இப்படிப் பல ஆண்கள் பொது வெளிகளில் சிலாகித்து வருவதை நாம் எங்கும் காண்கிறோம். உண்மையில் அப்படி வேலைக்குச் செல்லும் பெண்கள் எப்படிப்பட்ட ‘மன நிலையில்’ இயங்குகிறார்கள்



என்பதை ஒரு கட்டுரை சமீபத்தில், ஒரு அச்சு ஊடகத்தில் எழுதியிருந்தது.

மார்க்கெட்டிங் எக்சிக்யூட்டிவ் ஆகப் பணிபுரியும் ஒரு பெண். பணி நிமித்தமாக நாடு முழுவதும் அலைய வேண்டியவர். தனது கைப்பையில் இரண்டு பொருட்களை கட்டாயம் எடுத்துச் செல்கிறாராம். ஒன்று ‘மின்னதிர்வு துப்பாக்கி’. இரண்டாவது ‘பெப்பர் ஸ்ப்ரே’. ஊடகங்களில் ஒவ்வொரு நாளும் வருகின்ற செய்திகளான, “பணிக்குச் செல்லும் பெண்கள் மீதான பாலியல் வன்முறை” என்ற விவரங்கள், அந்தப் பெண் பணியாளரை, இப்படிச் சிந்திக்க வைத்திருக்கும். அல்லது தயார் நிலையில் இருக்க வைத்திருக்கும். பொதுச் சேவைகளில் ஓடும் பேருந்துகளிலும், தொடர் வண்டிகளிலும், வாகனங்களிலும், ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்சி, போன்ற நவீன புதிய வரவுகளில், “வருவாயை ஒட்டிய சிக்கனத்திற்காக” சென்றே ஆகவேண்டும் என்ற நிலையில், பணிக்குச் செல்லும் பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்ன படித்தார்கள் என்பதோ, எத்தனைப் பட்டங்களை வாங்கினார்கள் என்பதோ, பணியில் எந்த அளவு உயர் நிலையில் இருக்கிறார்கள் என்பதோ, அதிகாரம் கொண்ட பதவியில் இருக்கிறார்களா என்பதோ, காவல்துறையில் பணியாற்றுகிறார்களா என்பதோகூட, அவர்களது பயணங்களில் பாதுகாப்பைத் தீர்மானிப்பதில்லை.



அவர்கள் பெண்கள் என்ற ஒன்று மட்டுமே, அவர்கள் மீது “வக்கிர சிந்தனையாளர்களின்” உரசல்களோ, எதிர்பார்ப்புகளோ, அத்து மீறல்களோ குறிவைத்து நடத்தப்படுகின்றன. இத்தகையப் ‘பாலியல் தொல்லைகளைத்’ தவிர்ப்பதற்காக, தங்களது சம்பளத்தில் கணிசமானப் பகுதியை அவர்கள், ‘தனியாக வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு’ செல்ல வேண்டியிருக்கிறது. இவையெல்லாம் மேலோட்டமாக மேலே கூறியுள்ளபடி பேசித்திரியும் ஆண்களுக்குத் தெரியுமா? இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கிறார்களா?

இவை தவிர, எத்தனை வீடுகளில், குழந்தை பராமரிப்பை, ஆண்கள் மேற்கொள்கிறார்கள்? பணிக்குச் செல்லும் தாய்மார்கள்தானே குழந்தைப் பராமரிப்பைக் கவனிக்கிறார்கள்? குழந்தை வளர்ப்பிற்கு கவனம் செலுத்துவதற்காக, முற்போக்கு கருத்துக்கள் கொண்ட, பெண் உரிமை பேசும் பெண்கள் கூட, ‘பணிக்கு தொடர் விடுப்பு’ போடுவதோ, ‘பணியை விட்டு விடுவதோ’ செய்கிறார்களா இல்லையா? உங்கள் சமூகம், ‘பெண்களுக்கு படிக்க வாய்ப்பு, பணியில் வாய்ப்பு’ என வாய் கிழிய பேசினாலும், ‘பணியில் தொடர வாய்ப்பு இல்லாத’ ஒரு நியதியைத் தானே கொண்டுள்ளது.? அதிலும் சிறு வயதிலேயே தான் பாலியல் வன்முறைக்கு உள்ளாகியிருக்கிறேன் அல்லது பாலியல் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறேன் என்று, எண்ணிப்பார்க்கும் பெண்கள், தனது பெண் குழந்தையையாவது அப்படி உள்ளாகாமல் காப்பதற்காக "பாதுகாப்பு ஏற்பாடுகளை" செய்துகொள்ளும் எண்ணத்திற்குச் செல்கிறார்களா இல்லையா? இதற்காகவே தனது படிப்பிற்கு ஏற்ற உயர்பதவிகளில் இருக்க வேண்டிய பெண்கள் கூட, தனது குழந்தையின் பாதுகாப்பை நேரடியாகக் கவனிக்கும் பொருட்டு, சாதாரண வேலைக்கு செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதையும், அந்த அச்சு ஊடகக் கட்டுரை எடுத்துக்காட்டியது.

2004ஆம் ஆண்டிலிருந்து, இன்று வரை இரண்டு கோடி பெண்கள் தங்களது அலுவலகப் பணிகளிலிருந்து காணாமல் போயிருக்கிறார்கள் என்று ஒரு கணக்கை, உலக வங்கி ஆய்வு கூறுவதாக அந்தக் கட்டுரைத் தெரிவிக்கிறது. உலகில் பெரும் நகரங்களான, நியூயார்க், லண்டன், பாரிஸ் ஆகிய நகரங்களில் வாழும் மக்களது மொத்த மக்கள் தொகை இரண்டு கோடி. அதற்குச் சமமான அளவில், உலகெங்கும் பணிகளிலிருந்து காணாமல் போன பெண்களின் எண்ணிக்கை இருக்கிறது என்றால், இந்த உலகமே வெட்கப்பட வேண்டாமா? அப்படியானால் இத்தகைய அவல நிலை, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகம் பூராவும் இதே நிலைதான் என்பதை உணர வேண்டும். அதாவது, இந்த உலகமே ‘ஆணாதிக்க உலகமாக’, ‘ஆண்களின் நியாயங்களை மட்டுமே சிந்திக்கும் உலகமாக’ இருப்பது உணரப்பட வேண்டும். ஆகவே, பெண்கள் அதிகமாக வேலைக்கு வருவதையும் படிக்க வருவதையும் பற்றி வாய் கிழிய பேசும் ‘பெரு மக்கள்’ இந்த புள்ளி விவரங்களைக் கண்ணுற்றப் பிறகாவது, இனி ‘வாயை மூடிப் பேசுங்கள்’ என்று திரைப்படப் பெயரைத்தான் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

– தொடரும்



▪ ஜூலை 15 – (1876) மறைமலை அடிகள் – (தமிழ் சிந்தனையாளர், எழுத்தாளர்.) பிறந்த தினம்
– (1903) கு.காமராஜர். (கிங்மேக்கர் எனப்பட்ட தமிழக முன்னாள் முதல்வர்.) பிறந்த தினம்

# மாட்டிறைச்சியும் மனிதக்கொலையும்!

பசுவின் புனிதம் பற்றிய ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரத்திற்கு காங்கிரசில் இருந்த பார்ப்பனர்களும் துணையாகவே நின்றார்கள். இந்துமத அடிப்படைவாதிகள் காங்கிரசு கட்சியில் இருந்தும், சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் என்ற பெயரிலும் அரசியல் சாசனக் கொள்கை வரைவுக் குழுவில் இடம் பெற்று, அவர்களால் ஆனமட்டும் போராடிப் பார்த்தார்கள். எதற்கு? பசுவைத் தேசிய அடையாளங்களில் ஒன்றாக வைத்து, பசுவைக் கொல்வது இந்தியாவில் விலக்கப்பட்ட செயல் என்று அறிவிப்பதற்கு. அது நிறைவேறவில்லை. அடுத்து அவர்கள் மேற்கொண்ட முயற்சி, “பசுவைக் கொல்லக்கூடாது” என்கிற ஆணையை அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகள் என்னும் பகுதியில் சேர்ப்பதாகும். ஆனால் அவர்களால் முடிந்ததென்னவோ, அரசியல் சாசனத்தின் நான்காம் பகுதியான அரசுக்கான வழிகாட்டு நெறிமுறைகளின் உறுப்பு 48 (*Article 48*) இல் ஒரு அங்கமாகத்தான் சேர்க்க முடிந்தது. அதுவும் விவசாய வளர்ச்சி, பால் உற்பத்தி, கால்நடை வளம் (*Modern Agriculture, Milk Production, Animal Husbandry*) என்ற காரணங்களுக்காக, பசுவும் மற்ற பால் கொடுக்கும் விலங்குகளும் கொல்லப்படாமல் தடுக்க அரசு முயற்சியெடுக்க வேண்டும் என்று சேர்க்கப்பட்டதை அவர்களால் அதாவது இந்து மத அடிப்படைவாதிகளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று பார்த்தோம். அதற்கு என்ன காரணம் என்பதைப் பார்ப்போம்.

அரசியல் சாசனத்தில் அடிப்படை உரிமைகள் எனும் மூன்றாம் பாகம் மிக வலிமை வாய்ந்தது. அதை நிறைவேற்றுவது அரசின் கடமை. அப்படி நிறைவேற்றத் தவறினால், உயர்நீதிமன்றத்திலோ, உச்சநீதிமன்றத்திலோ வழக்கு தொடுத்து ‘நீதிப்பேராணை’ மூலம் அந்த உரிமையை நிலை நிறுத்த முடியும். தெருவில் நடக்க, குளத்தில் குளிக்க, கோயிலில் நுழைய, பள்ளியில் படிக்க, வேலைவாய்ப்பைப் பெற, என எந்த இடத்திலும், இனத்தால், மொழியால், இடத்தால் ஆண் பெண் வேறுபாட்டால் யாருக்கும் உரிமையை மறுக்க முடியாது. சட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டத்தின் பாதுகாப்பு அனைவருக்கும் சமம் என்னும் கூறுகளும் அடிப்படை உரிமைகளில் உள்ளவை பேச்சுரிமை, கருத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை, சொத்து வாங்கும் உரிமை, வாழ்வுரிமை அமைப்பாகும் உரிமை என இவை அனைத்தும் அடிப்படை உரிமைகளே.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த உரிமைகளை உறுதிப்படுத்தும் மூன்றாம் பாகத்தில் பசுவைக் காப்பதும் கொல்லாமல் இருப்பதும் அடிப்படை உரிமைகளில் ஒன்று என்று சேர்க்க நினைப்பவர்கள் எத்தகைய மதவெறியர்களாக இருக்க வேண்டும். சரி, அரசியல் சாசனத்தின் நான்காம் பாகமான, அரசுக்கான வழிகாட்டு நெறிமுறைகளில் சேர்ப்பதால் என்ன பாதிப்பு? இந்தப் பிரிவுகள் அரசுக்கான வழிகாட்டும் நெறிகள்தான். (*Directive principles of state policy*) அரசு ஒரு கொள்கை முடிவை எடுப்பதற்கான வழிகாட்டி. அவ்வளவுதான். இந்தப் பிரிவில் சொல்லப்பட்டுள்ள எவ்வளவு உயர்ந்த கொள்கை நெறியையும், அரசு உடனே நிறைவேற்ற வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட முடியாது. அனைவருக்கும் கல்வி, சமஊதியம், வீடுகள் கட்டித்தருவது, பெண்கள் முன்னேற்றம் ஆகியவற்றுக்குத் திட்டம் வகுத்துச் செயல்படுவது ஒரு அரசின் கொள்கை முடிவு. அதை இப்படிச் செய்ய வேண்டும். இத்தனை நாட்களில் நிறைவேற்ற வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட முடியாது. இந்து மத அடிப்படைவாதிகளான மேல் ஜாதித் தலைவர்கள் இவ்வளவு முயன்றும் மதரீதியான அடையாளமாக பசுவை முன்னிறுத்த முடியாமல், பொருளாதார முன்னேற்றம், விவசாய வளம், பால், சாணி உரம் என்றெல்லாம் அரசியல் சாசன நிர்ணய சபையில் புலம்பித் தள்ளியிருக்கிறார்கள். அவர்களை தங்கள் விவாதத்தால் எதிர்கொண்ட இஸ்லாமிய சமூகத் தலைவர்கள், நாங்கள் பசுக்கொலைத் தடையை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஏன் கொல்லக்கூடாது என்பதை வெளிப்படையாகக் கூறுங்கள். நீங்கள் கூறும் பொருளாதாரக் காரணங்கள் அனைத்து விலங்குகளுக்கும் பொருந்தும். முற்பகுதியில் விவசாய முன்னேற்றம் என்று கூறிவிட்டு பிற்பகுதியில் விலங்குகளைக் கொல்லக் கூடாது என்று கூறுவது பொருத்தமற்றது. ஏனெனில் விவசாயத்திற்கும், பாலுக்கும் பயனற்ற விலங்குகளே கொல்லப்படுகின்றன என்று வாதிட்டனர். உண்மையில் இந்துமத அடிப்படைவாதிகளின் கோரிக்கையினை பெரும்பான்மையான இந்து சமூகத்தைச் சேர்ந்த தலைவர்கள் ஆதரிக்கவில்லை. மதச்சார்பற்ற அரசியல் சாசனத்தில், ஒரு மதத்தினர், அதிலும் சில பிரிவினர் வணங்கும் ஒரு விலங்கை மட்டும் பாதுகாக்க வேண்டிய தேசியச் சின்னமாக அரசியல் சாசனத்தில் சேர்ப்பது கேலிக்கூத்தாகிவிடும் என்ற கருத்தே ஓங்கி நின்றது. ஆனாலும், இந்துமத அடிப்படைவாதிகளின் விடாமுயற்சி அரசியல் சாசனத்தின் உறுப்பு 48இல் பசுவையும் மற்ற விலங்குகளையும் சேர்த்து அவற்றைப் பாதுகாக்க/ கொல்லப்படுவதைத் தடுக்க அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்ற வடிவத்தில் சேர்க்கப்பட்டது. அதற்கு உடன்பட்டதையே பசு பக்தர்கள் ‘தியாகம்’ என்று குறிப்பிட்டார்கள்.

அதன் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து ஆர்.எஸ்.எஸ் இன் தலைவர் கோல்வாக்கர் ஒரு தீவிர முயற்சியில் இறங்கினார். இப்போது தடை சொல்ல மகாத்மா காந்தி இல்லை. பிரதமர் நேரு ஆர்.எஸ்.எஸ். கோரிக்கையை ஏற்கமாட்டார் இருக்கவே இருக்கிறார் குடியரசுத்தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத். ஏற்கனவே தனக்கு ஆயிரக்கணக்கான கடிதங்கள் (பசுவை கொல்வதற்குத் தடை விதிக்கக் கோரி) வந்து கொண்டே இருக்கின்றன என்று காந்தியிடம் கூறியவர். எனவே அவரை வைத்தே தங்கள் வேலையை முடித்துக் கொள்ளலாம் என்று ஆர்.எஸ்.எஸ் திட்டமிட்டது. மீண்டும் கடிதங்கள், கையெழுத்து இயக்கம் என்று பிரச்சாரம்

மு.சி.அறிவழகன்

# வழக்கறிஞர் அ.அருள்மொழி – நேர்காணல் – தொடர்

செய்து, அந்தத் தாள்களை மாட்டுவண்டிகளில் ஏற்றிக் கொண்டு ஊர்வலமாகச் சென்று, ஜனாதிபதி பாபு ராஜேந்திர பிரசாத்திடம் கொடுத்தார்கள்.

இந்த செய்திகள் நம்முடைய கற்பனையல்ல. ஹெ.வே. சேஷாத்ரி என்பவர் எழுதிய சென்னை கேசவா; பதிப்பகம் 1989இல் வெளியிட்ட ஆர்.எஸ்.எஸ். ஆற்றும் அரும்பணிகள் என்ற நூல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதோ அந்தப்பதிவு.

பசு: போற்றுதலுக்குரிய சின்னம் - ஆர்.எஸ்.எஸ்.

யுகயுகமாக பாரதத்தின் தேசியச் சின்னமாக போற்றப்பட்டு வருவது பசு, சுதந்திரப் போராட்டத்திலும் கூட அது பிரிக்கப்பட முடியாதபடி அங்கம் வகித்தது.

பசு என்றால் இந்த தேசமே தலை வணங்குவது கண்ட ஹுமாயூன், அக்பர் போன்ற மொகலாயப் பேரரசர்கள் கூட பசுவதையைத் தடை செய்திருந்தார்கள். முஸ்லீம் ஆட்சி காலத்திலும் சரி, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலும் சரி, படையெடுத்து வந்தவர்களிடமிருந்து பசுவைக் காப்பதற்காக மக்கள் பெரிய பெரிய தியாகங்கள் செய்து வீர மரணம் எய்திய சம்பவங்கள் வரலாற்றின் பொன்னேடுகளாக மெய்சிலிர்க்கச் செய்கின்றன. அண்மைக் காலத்தில் சுதந்திரப் போராட்டத்தின் தானைத்தலைவர்களாக விளங்கிய லோகமான்ய திலகரும் மஹாத்மா காந்தியும் ஸ்வராஜ்யம் அடைவதில் பசுப்பாதுகாப்பு ஒரு ஆதாரமான அம்சம் என்று கருதினார்கள். சுதந்திர பாரதம் இயற்றுகின்ற முதல் சட்டம், பசுவதைத் தடைச் சட்டமாக இருக்க வேண்டும் என்று திலகர் அறிவித்தார். சுயராஜ்யத்தையும் விட பசுப்பாதுகாப்புக்குத் தலையாய இடமளித்தார் காந்திஜி. பசுவுக்கு ஒரு சிறு தீங்கு நேருவதைக் கூட சற்றும் சகித்துக் கொள்ள முடியாமல் கடுமையாக எதிர்த்தவர் டாக்டர் ஹெட்கேவார்.

நாடு சுதந்திரம் அடைந்த போது நாட்டின் அரசியல் சாஸனத்தில் 'வழிகாட்டிக் கொள்கை'களில் ஒன்றாக பசுப்பாதுகாப்பைச் சட்ட நிபுணர்கள் அமைத்தார்கள். ஆனால் நாள் செல்லச் செல்ல, இது ஏட்டுச் சுரைக்காயாக நின்றுவிட்டது. மிக பயங்கரமான அளவில் மக்கள் வதைக்கப்பட்டு வருகின்றனர்.

'பசுப்பாதுகாப்பு என்பது வெறும் பொருளாதாரப் பிரச்சினையல்ல, அது இந்த நாட்டின் பண்பாட்டிற்கு அளிக்கப்படும் அங்கீகாரம்: நமது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அடையாளம் என்று சங்கத்தின் அகில பாரதீய பிரதிநிதிசபை 1952-ஆம் ஆண்டு தீர்மானமொன்றில் வலியுறுத்தியது. நாடு நெடுகிலும் உள்ள லட்சோப லட்சம் மக்களின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தும் வகையில் ஒரு வெகுஜன இயக்கம் மீது நிர்ப்பந்தம் கொண்டு வருமாறு பிரதிநிதிச் சபை கூறியது.


ஆர்.எஸ்.எஸ்.ஸின் அறைகூவலுக்கு இணங்க நாடு முழுவதிலும் நூற்றுக்கணக்கான பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. 1952 கோபாஷ்டமி அன்று இந்த இயக்கம் துவங்கியது. அனேகமாக எல்லாக் கட்சிகளும் இதில் ஈடுபடுத்தப்பட்டன. இயக்கம் முழு வேகத்தில் நடைபெறலாயிற்று. இந்தக்கூட்டங்களில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்கள். அரசுக்கு சமர்ப்பிக்கும் மகஜர்களில் கையொப்பமிட்டார்கள்; இவ்வாறு, பசுப்பாதுகாப்பு ஹிந்துக்களுடைய விஷயம் என்ற பொய் தகர்க்கப்பட்டது. உதாரணமாக, ஒரிஸ்ஸாவில் உள்ள கட்டக்கில் நடந்த பொதுக்கூட்டத்திற்கு மாநில ஆளுநர் சையத் ஃபசல்அலி தலைமை வகித்தார். அவர் பேசுகையில், பசு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்ல, அதற்கென்று






■ ஜூலை 17 – (1996) – தமிழ்நாட்டின் தலைநகர் மெட்ராஸ் என்பது 'சென்னை' எனப் பெயர் மாற்றம் பெற்றது.

ஒரு புனிதத் தன்மையும் உண்டு என்பதை வலியுறுத்தினார். இந்த இயக்கத்தின் விளைவாக, பூனா, துலியா (துளே), போபால், மொஹம்மதாபாத் போன்ற ஒரு சில நகராட்சி மன்றங்கள், தங்கள் நகராட்சி எல்லைக்குள் பசுவதை செய்வதைத் தடை செய்தன.



டெல்லி ராம்லீலா மைதானத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான டெல்லிவாசிகள் கலந்து கொண்ட பிரம்மாண்டமான கூட்டத்தில் ஸ்ரீகுருஜி சொற்பொழிவாற்றினார், பாரத நாட்டின் அதி உன்னதமான தேசியத் தன்மானச் சின்னமாகிய பசுவை வதை செய்வதை அனுமதித்து வருகிற எந்த ஒரு அரசும் தன்னை சுயராஜ்ய ஆட்சி நடத்துவதாகச் சொல்லிக் கொள்ள முடியாது என்று ஸ்ரீகுருஜி அறிவித்தார். நாமதாரி சீக்கியர்களின் குருவான பிரதாப்சிங் மஹராஜ் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பாரதீய ஜனசங்கத்தின் தலைவரும் நாடாளுமன்றத்தின் தேசிய ஜனநாயகக் கட்சியின் தலைவருமான டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி, அகில பாரதீய ஹிந்து மஹாசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பாரிஸ்டர் என்.ஸி.சட்டர்ஜி, பஞ்சாபின் ஆரியப்பிரதிநிதி சபைத் தலைவர் மஹாசய கிருஷ்ணா, கோ சேகவ சமாஜத்தின் செயலாளர் ஹர்தேவ் ஸஹாய் மற்றும் பலர் அன்றைய தினம் சொற்பொழிவாற்றினார்கள்.





நான்கே வாரங்களில் அத்தனை கையொப்பங்களும் சேகரிக்கப்பட்டன என்றும், அவை நேர்மையான விதத்தில் சேகரிக்கப்பட்டன என்றும் ஸ்ரீகுருஜி அறிவித்த போது கரவொலி விண்ணை எட்டியது. சேகரிக்கப்பட்ட மொத்த கையொப்பங்கள் 1,75,39,813, தொடர்பு கொண்ட கிராமங்கள், 81,524, மறுதினம், லாலா ஹன்ஸ்ராஜ் குப்தா, ஸ்ரீ குருஜி ஆகியோர் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்தைச் சந்தித்து, பாரத அரசு பசுவதையைப் பரிபூரணமாகத் தடை செய்து சட்டம் இயற்ற வேண்டும் என்று கோரும் சின்னஞ்சிறு மகஜர் ஒன்றை அளித்தனர். இதற்காக நடத்தப்பட்ட இயக்கம் பற்றிய விவரங்களையும் எடுத்துக்கூறினார்கள். பசுப்பாதுகாப்புக்காக அரசு மேற்கொள்ளக் கூடிய எந்த ஒரு திட்டத்திலும் பரிபூரண ஒத்துழைப்பு நல்க சித்தமாக இருப்பதாக ஸ்ரீ குருஜி குடியரசுத் தலைவரிடம் உறுதிமொழி அளித்தார்.

இப்படி ஒரு புறம் ஆர்.எஸ்.எஸ்காரர்களின் பசுப்போராட்டம் நடந்து கொண்டிருக்க, காங்கிரசில் இருந்த பசு பக்தர்கள் சும்மா இருப்பார்களா? காங்கிரஸ் ஆட்சியில் இருந்த மாநிலங்களில் எப்படியாவது 'பசுவை மட்டும் கொல்லாதே' என்று சட்டம் இயற்ற முயற்சி செய்தார்கள். அதன்படி சட்டமியற்றப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. 1958ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு 28.4.1958 அன்று ஆளுநரின் ஒப்புதலைப் பெற்று, 7.5.1958 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டு, 1.07.1959 முதல் நடைமுறைக்கு வந்த அந்த சட்டத்தின் பெயர். "தமிழ்நாடு விலங்குகள் பாதுகாப்புச் சட்டம் 1958. The Tamilnadu Animal Preservation Act 1958. இந்த சட்டமாவது பசு பக்தர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்ததா என்றால் இல்லை. இல்லவே இல்லை. ஏனெனில் இந்த சட்டமும் 'விலங்குகள்' அனைத்திற்குமான பாதுகாப்புச் சட்டம் என்பதே நான் உயர்ந்தவன், என் மாடு மட்டுமே புனிதமானது என்பதுதானே இந்து மதத்தின் அடிப்படை அவர்கள் எப்படி மற்ற விலங்குகளையும் சேர்த்த ஒரு சட்டத்தை 'பசுப்பாதுகாப்புச்' சட்டமாக ஏற்றுக் கொள்வார்கள். மேலும் பசுவோ, மற்ற வீட்டு விலங்கோ 10 வயது ஆகிவிட்டாலோ, ஊனமாகிவிட்டாலோ உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தாலோ, அதைக் கொல்வதற்கு உரிய அனுமதி பெற்று அவற்றை வெட்டலாம் என்று இச்சட்டம் அனுமதி அளித்தது. இந்த சட்டத்திலும் பசுவுக்குத் தனி இடம் இல்லை. இந்தச் சட்டத்தை நிறைவேற்றியவர் அப்போது தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த பச்சைத் தமிழர் காமராசர் அவர்கள். பசு பக்திப் பார்ப்பனர்களுக்கு காமராசர் அவர்கள் மீது வெறுப்பும் கோபமும் உண்டானதன் காரணங்களில் இது முதன்மையானது. அச்சட்டத்தை மீறுபவர்களுக்கு 1000 ரூபாய் வரை அபராதமும், மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் வழங்கப்படும் என்றும் தண்டனை வரையறுக்கப்பட்டது.

ஆர்.எஸ்.எஸ் மற்றும் பசுபக்தர்கள் இந்திய அளவில் ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று விடாது முயற்சி செய்த அதே காலகட்டத்தில் இந்தியாவில் விலங்குகள் மீது அக்கறை செலுத்தும் அமைப்புகள் செயல்படத் தொடங்கின. அவர்கள் விலங்கு நலவாரியம் ஒன்று அமைக்க வேண்டும் என்று கோரினர். அவர்களுடைய விடாமுயற்சியால் 1960ஆம் ஆண்டு சட்ட எண் 59 ஆக இந்திய அரசு ஒரு முழுமையான சட்டத்தைக் கொண்டு வந்தது. விலங்குகள் பராமரிப்பு, பாதுகாப்பு, பரிசோதனைக்குப் பயன்படுத்துவது, காட்சி விலங்காகப் பயன்படுத்துவது, விலங்குகளைத் துன்புறுத்துவது, பலிகொடுப்பது ஆகிய அனைத்துவிதமான செயல்பாடுகளையும் அவற்றுக்கான அனுமதி, தடை, விதிவிலக்கு, குற்றம் தண்டனை வழங்கும் முறை என விளக்கமான தனித்தனிப் பிரிவுகளில் வைத்து அதற்கான விதிமுறைகளையும் வெளியிட்டது அந்த சட்டம் 59/1960. ஆனால்...அந்தோ இந்துமத அடிப்படைவாதிகளுக்கு மீண்டும் தோல்வி. இந்திய அரசின் இந்த சட்டம் விலங்குகளை துன்புறுத்துவதைத் தடுக்கும் சட்டம் 1960 (சட்டம் 59/1960) என்று பெயர் பெற்றது. (THE PREVENTION OF CRUELTIES TO ANIMALS ACT 1960. (ACT 59 OF 1960) மீண்டும் "விலங்குகள்" பாதுகாப்புதானா? பசுப்பாதுகாப்பு இல்லையா? என்று ஆர்.எஸ்.எஸ் கேட்டது. இந்த 1960ஆம் ஆண்டு சட்டப்படிதான் 'விலங்கு நல வாரியம்' (Animal welfare Board) அமைக்கப்பட்டது. இந்த சட்டத்தின் அய்ந்தாம் பாகத்தில்தான் விலங்குகளை பயிற்றுவித்து பொதுமக்கள் முன்னிலையில் காட்சிப்படுத்துவது பற்றிய விதிமுறைகள் இடம் பெற்றன. அந்தப் பிரிவுகளுக்குள்தான் ஒரு திருத்தம் செய்யப்பட்டு, மாடுபிடிக்கும் விளையாட்டான ஜல்லிக்கட்டு தடை செய்யப்பட்டது. விலங்குகள் துன்புறுத்தப்பட்டால் அந்த விளையாட்டைத் தடை செய்யும் அதிகாரத்தையும் நீதிமன்றங்களுக்கு இந்த சட்டம் வழங்கியது. ஆயிரம் இருந்தும், "பசுமாடு மட்டும் புனிதமானது எக்காரணத்தினாலும் அதைக் கொல்லக் கூடாது" என்ற இந்துப் பார்ப்பன, உயர் சாதிக்கான கோரிக்கைக்கு அந்த சட்டம் இடம் கொடுக்கவில்லை.

எத்தனையோ விதமான மதரீதியான வேண்டுகோள்களை

ஏற்றுக் கொண்ட இந்திய அரசும் குறிப்பாக நாட்டின் அடிப்படை சட்டங்களை வகுத்த அண்ணல் அம்பேத்கர், இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு, மற்றும் பல அரசியல் தலைவர்கள் இந்த பசுப்புனிதம் பசுவதைத்தடை போன்றவற்றை ஏற்க மறுத்து, அதில் உறுதியாக நின்றார்கள். காரணம் இப்படி ஒரு சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்திவிட்டால் இறைச்சி உணவு உண்ண யாரை வேண்டுமானாலும் பசுப்பாதுகாப்பு என்ற பெயரால் துன்புறுத்த முடியும் பசுவின் பேரால் யாரை வேண்டுமானால் கொல்ல முடியும். அந்த அதிகாரத்தை அளித்து எளிய மக்களின் வன்மத்தைத் தூண்டிவிட்டு தங்கள் சித்தாந்தக் கொலைகளை நிகழ்த்துவதுதான் ஆர்.எஸ்.எஸ். இன் நோக்கம் என்று அந்தத்தலைவர்கள் உறுதியாகக் கருதினார்கள்.

அந்த அச்சம் எவ்வளவு சரியானது என்பதை ஆர்.எஸ். எஸ்.இன் அடுத்தடுத்த வன்முறைத் தாக்குதல்கள் நிரூபித்தன. அதன் உச்சகட்டம் 1966ஆம் ஆண்டில் டெல்லியில் நடத்திய கலவரமாகும். அந்த காலகட்டத்தில் இந்தியாவின் பிரதமர் இந்திராகாந்தி அவர்களும், அகில இந்திய காங்கிரசு கட்சியின் தலைவராக பச்சைத்தமிழர் காமராசர் அவர்களும் இருந்தார்கள். நாடாளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்ட அதிகார வலிமைமிக்க ஆளுங்கட்சியின் தலைவராக காமராசர் இருந்தார். (இப்போது அதே இடத்தில் அமித்ஷா இருக்கிறார்) ‘பசுவதைத் தடுப்பு’க்காக ஒரு தனிச்சட்டம் போட வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். கோரியதை கடுமையான, கண்டனத்துடன் நிராகரித்தார் காமராசர். மாட்டுக்கறிக்கே தடைவிதிக்க வேண்டும் என்று கேட்பது முட்டாள்தனம் என்றும் மற்றவர் என்ன சாப்பிட வேண்டும், எதை சாப்பிடக்கூடாது என்று சொல்ல நீ யார்? என்று கேட்டார். அவரை எதிர்த்து அந்த சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றாது என்பதைப் புரிந்து கொண்ட ஆர்.எஸ்.எஸ் 1966 நவம்பர் மாதத்தில் டெல்லியில் பெரும் கலவரத்தை நடத்தியது. மதத்திற்கான போராட்டம் என்று நிர்வாண சாதுக்களை இறக்கியது. அதன் தொடர்ச்சியாக நவம்பர் 7ஆம் தேதி இரவு காமராசர் டெல்லியில் வசித்து வந்த வீட்டிற்கு சாதுக்கள் கூட்டம் தீ வைத்தது. அந்நேரத்தில் விழித்திருந்த காமராசரின் உதவியாளர் காமராசரை அழைத்துக் கொண்டு பின்வாசல் வழியாக வெளியேறியதால் காமராசர் உயிர்பிழைத்தார் இல்லையேல் மாட்டுக்கறியின் பெயரால் நடந்த படுகொலையில் முகமது அக்லக்கிற்குப் பதிலாக அல்லது முன்பாக காமராசர் அவர்கள் பெயர் சேர்ந்திருக்கும்.

இப்படி ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு முயற்சிகளில் தோல்வியடைந்த ஆர்.எஸ்.எஸ் தனது சித்தாந்தவாதிகளை வைத்து அனைத்து அரசியல் இயக்கங்களிலும் ஊடுருவியது. பல்வேறு அமைப்புகளை வைத்து அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுத்தது. அதே நேரத்தில் தனது அரசியல் அணுகுமுறையால் பிரதமர் இந்திராகாந்தி அறிவித்த அவசர நிலை அடக்குமுறையை எதிர்த்துப் போராடிய காந்தியவாதிகளோடும், இடதுசாரிகளோடும் சேர்ந்து கொண்டு தேர்தலைச் சந்தித்தது. இந்திராகாந்தியின் தேர்தல் தோல்விக்குப் பிறகு அமைந்த ஜனதா ஆட்சியில் முக்கியமான துறைகளின் அமைச்சர்களாக வாஜ்பேயியும் அத்வானியும் சேர்ந்து கொண்டார்கள். தங்கள் திட்டத்தை சாதிக்க தங்களுடன் எவ்வளவோ முரண்பாடுகள் கொண்ட இயக்கங்களுடனும், கட்சிகளுடன் சேர்ந்து கொள்ளும் ஆர். எஸ்.எஸ்.இன் அணுகுமுறைக்கு அடுத்த வாய்ப்பு வி.பி.சிங் அமைச்சரவையில் இணைந்து அமைச்சர் பதவிகளைப் பெற்றதில் மேலும் முன்னேறியது.

தங்கள் சனாதனக் கொள்கையை நிறைவேற்ற என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கும் ஆர்.எஸ். எஸ்.ஒரு புறம், உயர்ந்த ஜனநாயகக் கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் தலைவர்களின் உறுதியற்ற தன்மையாலும், சுயநலத்திற்காக கொள்கையைப் பின்னுக்குத் தள்ளிய காங்கிரசும் அதுபோன்ற மாநிலக் கட்சிகளும் மறுபுறம். இவற்றுக்கிடையில் இந்துமத அடிப்படை வாதத்தை உள்ளத்தில் தாங்கிய பலர் நீதித்துறையில் முன்னேறி உயர்நீதிமன்றங்களிலும் உச்சநீதிமன்றத்திலும் நீதிபதிகளாக அமர்ந்தார்கள். அதன்பின் நீதிமன்றப் போக்கு பெரும்பாலும் இந்து சனாதனவாதிகளுக்கு ஆதரவாகவே அமைந்தது. அந்த நிலை படிப்படியாக உருவானது. பசுவை கொல்லக்கூடாது என சட்டம் இயற்ற இந்திய அரசையோ, மாநில அரசையோ வலியுறுத்தக் கேட்டு நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. இது முற்கால கட்டம். சில மாநிலங்களில் பசுவதைத் தடுப்பும் விலங்குப் பாதுகாப்பும் என்று சட்டங்கள் உருவான போது, பசுவை கொல்லக்கூடாது என்பதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. இது இரண்டாம் கட்டம். மாடுகள் குறிப்பாக பசுக்கள் கடத்திச் செல்லப்படுவதாகவும், துன்புறுத்தப்படுவதாகவும் கூறி தொடரப்படும் வழக்குகளில் அரசுக்கு அறிவுரை கூறுகிறோம்’ என்ற அடிப்படையில் தீர்ப்புகளை வழங்குவது மூன்றாம் கட்டம்.

அந்தத் தீர்ப்புகளை ஆதாரமாகக் கொண்டு அரசு புதிய சட்டங்களை இயற்றுவதும், அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தால், அதில் தலையிட முடியாது என்று நீதிமன்றம் மறுப்பது நான்காம் நிலை.

கடந்த பத்தாண்டுகளாக நமது பல உரிமைகளை இந்த கண்ணாமூச்சி ஆட்டத்தில் பறிகொடுத்துக் கொண்டே இருக்கிறோம்.

அதன் முக்கியமான பகுதிதான் நேபாளத்திற்கு மாடுகள் கடத்திச் செல்லப்பட்டு பலி கொடுக்கப்படுவதைத் தடுப்பதற்காக உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கின் தீர்ப்பில் மாடுகள் விற்பனையை ஒழுங்குபடுத்த உரிய சட்ட விதிகளை ஏற்படுத்துமாறு உச்சநீதிமன்றம் உத்திரவிட்டதும், அந்தத் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவை ஆளும் பி.ஜே.பி. அரசு வெளியிட்ட மாடு விற்பனை ஒழுங்குமுறை விற்பனை விதிகளுமாகும். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் எழுந்த எதிர்ப்பினாலும், மாடுகள் விற்பனை குறைந்ததால் ஏற்பட்ட வருமான இழப்பும் அந்த விதிகளை மாற்றச் செய்துவிட்டன.

ஆனால் பி.ஜே.பி.யின் ஆட்சியில் உள்ள ஹரியானா மகாராஷ்டிரா, ராஜஸ்தான், குஜராத், மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பசுக்கொலை தடைசெய்யப்பட்டு, மாட்டிறைச்சியை வைத்திருப்பதே குற்றம் என்று ஆக்கப்பட்டுவிட்டது. அதற்குத் தண்டனையாக ஏழாண்டுகள், பத்தாண்டுகள் சிறைத்தண்டனை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்திற்கும் மேலாக இதுவரை நூற்றுக்கணக்கான இசுலாமியர் மற்றும் தலித் மக்கள் மாட்டுக் கறி வைத்திருந்ததாகவும், மாட்டைக் கொல்ல எடுத்துச் சென்றதாகவும், படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இந்தியா இன்னொரு விடுதலைப் போரை நோக்கி நகர்கிறது.

**– நேர்காணல் தொடரும்**

காலை விடிந்நதும் அவரவர் காலைக்கடன்களை முடித்து குளித்து வரிசையில் நின்று சோறு வாங்கிச் சாப்பிடத் தயாரானார்கள் சாப்பிட்டு கொண்டு இருக்கும்போது

“அமாவாசை சின்னச்சாமி” என குரல் கேட்டு திரும்பி பார்த்தனர் வார்டன் நின்று கொண்டு இருந்தார்.

“சார் சொல்லுங்க” என்றான் அமாவாசை

“என்னபா மறந்துட்டிங்களா. இன்னைக்கு உங்களுக்கு வாய்தா. கோர்ட்டுக்கு போகணும் ரெடியாகுங்க”

“சரிங்க சார் பல குழப்பத்துல மறந்தே போனேன்”

அவசரமாய்ச் சாப்பிட்டு முடித்து 6 பேரும் தயாரானார் கள். சம்பிரதாயச் சோதனைகள் முடிந்து ஆறு பேரையும் வேனில் ஏற்றினர். உள்ளே வேனுக்குள் உள்ள இரும்பு பைப்பில் ஒவ்வொருத்தருக்கும் தனித் தனியாக கை விலங்கு போடப்பட்டது. கூடவே நான்கு விசாரணைக் கைதிகள் மொத்தம் பத்து பேருடன் வேன் சிறைச்சாலையை விட்டு வெளியே வந்தது. ஆவலாய் அத்தனை பேரும் சாலைகளை வேடிக்கைப் பார்த்தனர். திருவிழாக் கூட்டங்களில் நாம் குழந்தைகளைக் கைப்பிடித்து அழைத்துச் சென்றால் தனக்குப் பிடித்த ஒன்றைக் குழந்தைகள் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போகுமே அதுபோல. அத்தனை பேரும் சிறைபட்டு கிடந்த சிறைகளை விட்டு வெளியே வந்ததும் சாலையில் போய் வரும் வண்டி வாகனங்கள், புதிய சினிமா பட போஸ்டர்கள், டீக்கடை, ஓட்டல்கள் உயர உயரமான கட்டிடங்கள் அனைத்தையும் புதியதாய்ப் பார்ப்பது போல ஆவலோடு வேடிக்கைப் பார்த்தபடி வந்தனர்.

“மாப்ள டேய்” என்றான் கருப்பன்

“ம் சொல்லு மச்சான்”

“கோர்ட்டுக்கு போய்ட்டு வர வழியில எதாச்சும் ஒரு கடையில நல்லா சுருக்குனு புரோட்டாவும் குருமாவும் கோழி கொழம்பும் கெடைச்சா சாப்பிடனும்டா வாயெல்லாம் நம நம னு இருக்குது நாக்கெல்லாம் செத்துபோச்சு. எதாச்சும் ருசியா சாப்புடனும்டா!”

“ம்ம் பாக்கலாம்” என்றான் ஒற்றை வார்த்தையாய்.

அவரவர் பேசிக்கொண்டே சாலைகளை வேடிக்கைப் பார்த்தபடி வந்தனர்.

அமாவாசை மட்டும் கண்களை மூடி யோசனை செய்துகொண்டே வந்தான். உள்ள வந்து மூணு மாசம் ஆகிடுச்சு. பெயில் இன்னும் ஆகவே மாட்டேங்குது. அடுத்த வாரத்துக்குள்ள ஆகிடும் என மனதுக்குள் தெம்பாய் சொல்லிக்கொண்டான்.

உடன் வந்திருந்த விசாரணைக் கைதிகள் அவர்களுக்குள் ஏதோ குசுகுசுத்தபடி வந்தனர். கொஞ்சம் காதுகளை கூர்தீட்டியபடி அவர்கள் பேசுவதைக் கேட்க ஆரம்பித்தான்.

“டேய் உள்ள ஜட்ஜ் கூப்பிடறப்போ போறமில்ல அப்ப உன் செருப்பை கழற்றி தனியா விடு உள்ளே ஆஜர் ஆகிட்டு வெளியே வரப்ப பாத்தீனா நீ செருப்பு விட்ட எடத்துல உன் செருப்ப தூக்கிட்டு வேற செருப்பை வைச்சிருப்பானுக நீ செருப்ப காணம்னு தேடாத. மாத்தி வைச்ச செருப்ப போட்டுக்க சொதப்பிடாத சரியா?”

“சரி ஏன் செருப்ப மாத்தறானுக எதனால” என்றான் குமார்.

“டேய் கேனக்கூ.... செருப்புக்குள்ள தான்டா டோப்பு (கஞ்சா) இருக்குது அத நம்ம பசங்க வைச்சிடுவானுக சத்தம் போடாம போட்டுக்க உள்ள வித்து காசாக்கலாம் சரியா?”

‘ச்சே இவனுக சுயலாபத்துக்காக அடுத்தவனை பலி கடா ஆக்குறானுகளே. ஜெயிலுக்கு உள்ளே வந்தாலும் கூட காசு பணம் பன்றதுலயே குறிக்கோளோடுதானே இருக்கானுக. அப்படிதான் காசு பணத்தை சம்பாரிச்சு இவனுக என்ன கோட்டை கட்டியா வாழுறானுக. அடுத்த ஒரு மாசத்துல



மறுபடியும் ஜெயிலுக்குதான் வரானுக.' என மனதில் புலம்பிக்கொண்டான் அமாவாசை.

சாலையோரச் சுவர்களில் எங்கு பார்த்தாலும் 'வாழும் வள்ளலே...' 'ஏழைகளின் தோழனே...'

'சிறுத்தையே புலியே'

வீர வசனங்கள் நிறைந்த சுவரொட்டிகள்

சேரிகளின் பாதுகாவலனே சேரிகளின் சேகுவேராவே

என சுவரொட்டிகள்.

மாவீரனே என்ற சுவரொட்டிகள்

இதுக்கு ஒண்ணும் கொறைச்ச மயிரு இல்ல வாய் இருக்குதுங்கறதுக்காக வசன மயிரு மட்டும் பேசி எழுதி ஒட்டிக்கறானுக சேரிகளும் குடிசைகளும் குடிசைவாழ் மக்களின் உடமைகளும் கொளுத்தப்பட்டபோது இவனுக எங்க போயி ஒளிஞ்சுகிட்டு கிட்டு இருந்தானுக.

பேருக்குமட்டும் வீரப்பறையன் வீரசக்கிலியன் னு போஸ்டர் ஒட்டிகிட்டா போதுமா?

வெண்மனி குளப்பாடி ஊஞ்சனை மேலவளவு துவங்கி இளவரசன், கோகுல்ராஜ், சங்கர் வரைக்கும் நடந்த அத்தனை சம்பவத்தையும் வேடிக்கை மயிரு மட்டும்தா பாக்க முடிஞ்சது இவனுகளால...

அதையும் விட்டாக்க நீதி வேண்டும் நாயம் வேணுமுன்னு ரோட்டுல கொடி புடிச்சு போராட்டம் பண்ணுவானுக.

எவனாச்சும் ஒருத்தன் தன் சாதிக்காரனை கொன்னதுக்காக திருப்பி வெட்டி இருக்கானா? அல்லது குறைந்த பட்சம் திருப்பி அடிச்சாவது இருப்பானா எல்லாம் அரசியல். சாதிக்கு ஒரு கட்சி அதுக்கு ஒரு தலைவன்.

15

இங்க தனக்கான ஒரு அடையாளத்தைப் பிடிக்க குடிசைகளைக் கொளுத்தியும் மரங்களை வெட்டியும் வன்முறைகளை செஞ்சே தன் சாதிய அடையாளத்தை தக்க வைச்சுகிட்டு அரசியல் பண்றவனெல்லாம் இன்னமும் இருக்கத்தானே செய்யறான்.

தன்னை தன் சாதி சார்ந்த மக்களைப் பாதுகாக்க வன்முறை செஞ்சா அது குற்றம் ஆகிடுமா இங்க எதுவுமே குற்றம் இல்ல.

தன்னை பாதுகாத்துகொள்ள திருப்பி அடிக்கணும் அவன் வெட்டுனா நாமளும் வெட்டணும்.

யாரும் யாருடைய உயிரையும் எடுக்க இங்க எவனுக்கும் அதிகாரம் இல்லை.

ஆனா வேற வழியில்லை பெரியார் அம்பேத்கர் தத்துவங்கள் இந்த மண்ணுக்கு முழுமையாய் சென்று அடைந்திருந்தால் இப்படிப்பட்ட சாதி வன்மங்கள் சாதி கொலைகள் நடந்திருக்க வாய்ப்புகள் இல்லை

ஆனா மக்களிடையே அந்த மகத்தான தலைவர்களின் கொள்கை போய் சேரவில்லை. எங்கோ தப்பு நடந்திருக்கு. இந்த அரசியல் வாதிகளும் சமூக இயக்கவாதிகளும் மூச்சுக்கு முன்னூறு தடவை இது பெரியார் மண் அப்படினு முழங்கறாங்க. அந்த கருத்தியலை ஏதோ ஒரு சக்தி நீர்த்துபோக செய்துகிட்டே இருக்குது. அதை இனம் கண்டு அழிக்காம இங்க சமூக மாற்றத்தை அடைய முடியாது.



"யேய் எல்லாம் ரெடியா இருங்கப்பா கோர்ட் வந்துடுச்சு'' என்ற சத்தம் கேட்டு திடுக்கிட்டு நினைவுக்கு வந்தான் அமாவாசை.

வேன் கோர்ட் வாசலில் பாதுகாப்பாய் நிறுத்தப்பட்டது.

அமாவாசை சின்னச்சாமி கருப்பனின் உறவினர்கள் வேனை நோக்கி அழுத படியே ஓடி வந்தனர்.

"யே மாமா நல்லா இருக்கியா மாமா" என்றபடி ஓவென பெருங்குரலெடுத்து அழுதாள் அமாவாசையின் மனைவி நைந்து போன சேலையும் கிழிந்த ஜாக்கட்டும் வறுமையின் பால் மெலிந்துபோன உடலும் எண்ணை வைக்காத தலை. அம்மாவின் புடவையை இறுக்கமாய் பிடித்தபடி கலவரத்துடன் "யப்பே எப்பப்பே வருவ வாப்பே ஏன் ஒன்னைய இப்படி சங்கிலி போட்டு கட்டி வைச்சிருக்காக. வாப்பே நம்ம வூட்டுக்கு போவலாம்" என பெருங்குரலெடுத்து அழுதான் குழந்தை. அமாவாசை வேனில் இருந்து இறங்கினான் யப்பே என தாவிக்கொண்டு ஓடிவந்தான் அமாவாசையின் மகன்.

கண்களில் நீர் சுரந்தது மகனைக் கட்டி அணைத்தான் "சாமி நல்லாருக்கியா. சாமி வேளா வேளைக்கு சோறு திங்கறியா பக்கத்து வீட்டு தமிழரசி பாப்பா என்ன பன்றா?" என மகனைக் கட்டிப் பிடித்து கடித்தபடி கேட்டான் அமாவாசை

"யப்பே நீ இல்லாம வூடே நல்லா இல்லப்பே. அம்மா தெனம் தெனம் அழுவுது அத பாத்தாக்க எனக்கும் அழுவாச்சா வருது. நீ என்னப்பே செஞ்ச ஏன் உன்னை இப்படி வூட்டுக்கு விடாம கட்டி வைக்கறாங்க?" என அழுதான் அமாவாசையின் மகன்.

''புள்ள வக்கீல பாத்தியா என்னாச்சு எதும் சொன்னாங்களா?"

"இல்லை மாமா அந்த வக்கீலு வரல மாமா. பணம் பணம் னு பணத்தை மட்டும்தா வாங்குனான். வேற எந்த வேலையும் அவன் செய்யல அடிக்கடி வடிவேலு பண்ணையக்காரன் பொண்டாட்டி கவிதா கூட எங்கயோ போரான் வரான். அவன் நம்ம பிரச்சனைய பத்தி பெருசா எதையும் கண்டுக்கல."

"போன வாரம் தா பகத்சிங்குங்கற பேர்ல ஒரு வக்கீல் நம்ம வூட்டுக்கே வந்தாரு"

"யாரோ லெனினு காமராசுனு ரெண்டு பேர் உங்கூட உள்ள இருக்கறாங்களாமே. அவங்க அனுப்புனாங்கனு சொல்லி நம்ம வூட்டுக்கு வந்தாங்க.

எதுக்கும் கவலைப் படவேண்டாம் மா இன்னும் ரெண்டு வாரத்துல உங்க வீட்டுக்கார் உள்பட ஆறு பேரும் வெளிய வந்துடுவாங்க நீங்க எதுக்கும் கவலைப் பட வேண்டாம்னு சொல்லிட்டு போனாங்க"

"மாமா அங்க பாரு" என்றபடி கண்களில் மிரட்சியோடு கை நீட்டிக் காட்டினாள்.

அங்கே வடிவேலு பண்ணையக்காரன் மனைவி அவனது சாதி சங்கத்து ஆட்கள் வெள்ளையும் சொள்ளையுமாய் நின்று மீசையை முறுக்கியபடி ஏதோ பேசிக்கொண்டிருந்தனர்.

– தொடரும்



▪ ஜூலை 20 – (1919) எட்மண்ட் ஹிலாரி. (முதன்முதலாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்தவர்.) பிறந்த தினம்

இரண்டாம் உலகப் போருக்குப் பின் நிகழ்ந்த ‘நாரம் பர்க் விசாரணைகள்’ கற்பழிப்பு மனித குலத்திற்கு எதிரான குற்றமெனக் கண்டனங்களைப் பதிவு செய்துள்ளன. ஆனால் மகளிருக்கு எதிரான வன்முறை குறிப்பாக கற்பழிப்பு அதற்கே உரித்தான அவமான முத்திரையை சமீபத்தில் நிகழ்ந்த போர்களில் முள்ளாய் மனித இதயங்களில் விதைத்துள்ளது.

போஸ்னியா, ஹேர்ஸ கோவினா, பேரு, ருவாண்டா ஆகிய நாடுகளில் மூண்ட போர்களில், பெண்களும் சிறுமிகளும் கற்பழிப்பு, சிறை வைப்பு, சித்திர வதைகளை நாட்டைக் காக்கும் படையினரே செய்துள்ளனர்.

கம்போடியா, சைப்ரஸ், ஹைதியை பீரியா, சோமாலியா, உகாண்டா, வங்க தேசம் ஆகிய நாடுகளில் நடைபெற்ற பல்வேறு ஆயுதப் போராட்டங்களிலும் இக்கோரக் கொடுமைகள் கோலோச்சியுள்ளது.

போர்க்காலங்களில் பெண்களும் சிறுமிகளும் கற்பழித்தலுக்குப் பின் கட்டாய விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். வியட்நாம் போரின் போதும் ஆசியப் பெண்களுக்கு இத்தகைய அவலநிலையை அமெரிக்க இராணுவத்தினர் உருவாக்கினர். போருக்கு அஞ்சி நாட்டை விட்டு பொருள் உடமைகளை இழந்து புலம் பெயர்ந்த ஐந்து கோடியே முப்பது இலட்சம் மக்கள் எண்பது விழுக்காடு பெண்களும் குழந்தைகளும் அடங்குவர்.

*1993*இல் சோமாலிய அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்த பெண்களை கற்பழிப்பு வன்கொடுமைகள் வெகுவாக இருந்ததாகக் கூறப்படுகிறது. உணவு பஞ்சத்திலும் குடிநீர் பற்றாக்குறை தலை விரித்தாடும் எதிரிகள் முகாம்களில் ஒவ்வொரு இரவும் பெண்களைத் துன்புறுத்தி கற்பழிக்கப்பட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பாராளுமன்றம், சட்ட மன்றங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முந்தைய ஆட்சியாளர் நிறைவேற்றாமலேயே நடையைக் கட்டிவிட்டனர். *128* கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் பெண்கள் சரிபாதி அளவில் உள்ளனர். ஆனால் பெண்களுக்கு இழைக்கப்படும் வன் கொடுமைகள் ஏராளமாய் நடந்து கொண்டுதானிருக்கின்றன.

அன்னியர்களை இந்திய நாட்டைவிட்டு வெளியேற்றுகின்ற தீவிர போராட்ட முறைகளை கையிலெடுத்து அண்ணல் காந்தி ஆட்படுகையில் இருந்த சூழலில் நவகாளி கலவரத்தால் வெடித்துக் கிளம்பிய வன் முறையில் ஏராளமான பெண்கள் பாலியல் வன் கொடுமைக்கு ஆளானார்கள். பதறிப் போன காந்தி பெண்களுக்கு மறுவாழ்வு மையங்களை நிறுவி புனர் வாழ்வுக்கு வழிகண்டார். இதெல்லாம் சுதந்திரக் காலவடுக்கள்



# அன்றும் இன்றும் பாலியல் வன்கொடுமைகள்

இரா.கோரா

**அனைத்து நிலையிலும் ஒரு சமுதாயத்தை உயர்த்திக் காட்டுவதற்கு அடிப்படையாக அமைவது பெண் விடுதலையே. விடுதலை என்பது பெண் வீட்டிலிருந்து வெளியேற வேண்டும் என்பதல்ல. உரிமையையும் கடமையையும் இணைந்த வாழ்வைப் போற்றுவதே ஆகும்.**

அல்லவே!

பதினாறு வயது பருவத்தில் போர்க்களத்திற்கு சென்ற வீரத்தின் விளை நிலம், தியாக சீலன் தீரன் திப்பு சுல்தான், போர்க்காலத்திலேயே போரிட்டு 50 அகவை எட்டாத போது உயிர் நீத்த மைசூர் புலி, தனது போர்ப்படையினருக்கு கூறுகிறார். போர் முடிந்த பின்னர் தோற்கடிக்கப்பட்ட நாட்டிலுள்ள பொருட்களையும் உடமைகளையும் யாதொரு காரணத்திற்க்காகவும் சூறையாடக் கூடாது. குறிப்பாகப் பெண்கள் மீது அத்து மீறல்களும் கண்டிப்பாகத் தொடரக் கூடாது. பெண்கள், சிறார்கள், முதியவர்கள், கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார். சமூகத்தில் இயலாத வகை மக்களில் பெண்களை முதன்மைப் படுத்தியதன் விளைவே இவ்வறியச் செயலாகும். மண்ணாளும் வேந்தனுக்குரிய பண்பாகும்.

“குடும்ப வன்முறைக் கொடுமை தடுப்புச் சட்டம் நடை முறையில் இருந்தும் வீடுகளில் கணவன், மாமனார், மாமியார்களால் பெண்களுக்கு ஏற்படும் வன்துன்பம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இருபாலரும் நன்கு கல்வி கற்றவர்களாயிருக்கும் குடும்பங்களிலும் வன் கொடுமைகள் நிகழத்தான் செய்கின்றன” என ஓர் ஆய்வறிக்கை கூறுகிறது.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்

வரதட்சணை கொடுமை தடுப்புச் சட்டம்

பெண்கள் வாழ்வுரிமைப் பாதுகாப்புச் சட்டம்

பெண்கள் பணிப் பாதுகாப்புச் சட்டம்

இந்திய தண்டனைச் சட்டம்.

விண்ணைத் தொடும் எண்ணிலா வண்ண வண்ணச் சட்டங்கள் இயற்றியும் விளைவும் விளைச்சலும் குறைவே!

மேற்காணும் பெண்கள் பாதுகாப்புச் சட்டங்கள் பல இருந்தும் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் தமிழ்நாடு பன்னிரண்டாவது இடத்தில் உள்ளது.

தமிழ்நாடு மக்களின் தொப்புள் கோடி உறவான ஈழத்தில் இறுதி கட்டப் போரில் தமிழர்கள் ஒரு லட்சத்து நாற்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் சொல்லொன்னா துயரத்திற்கு ஆட்படுத்தி கொன்று குவித்தது ஆளும் சிங்கள அரசு. ஒரு நாட்டின் மக்களையே ஒரு அரசே போரால் கொன்று குவித்த கொடுமை வேறு எந்த நாட்டிலும் நடந்திராத அதிசயம். புலிகள் என்ற பெயரில் நாட்டிலுள்ள இளைஞர்களை வேட்டையாடிக் கொன்றும் பெண்களை சித்தரவதை செய்தும் உடலுறுப்புகளை சின்னாபின்னமாக்கி சிதைத்து, வன்புணர்வு கொண்டு கொன்று குவித்தது இராணுவம். பெண்களின் அவலக் குரல் இன்றும் ஒலித்துக் கொண்டு தான் இருக்கின்றது.

தலைநகர் டில்லியில் கடந்த 2012 இல் ஓடும் பேருந்தில் மருத்துவக் கல்விப் பயிலும் மாணவி ஆறு பேர் கொண்ட கும்பலால் கொடூரமாக வன்புணர்வு செய்யப்பட்டு நோயகற்றல்(சிகிச்சை) பயனளிக்காமல் இறந்தது, இந்தியா மட்டுமல்லாமல் அனைத்துலக நிலையிலும் மிகப் பெரிய அதிர்ச்சி பேரலையை ஏற்படுத்தின.

சமகாலத்தில் தூத்துக்குடி பள்ளி மாணவி பள்ளிக்குச் செல்லும் போது வல்லுறவு கொண்டு, கொன்று போட்டனர் ஒரு கோடரிக் கும்பல். பண்பாட்டிலும் நாகரீகத்திலும் தொட்டிலாய் விளங்கும் தமிழ்நாட்டில் அண்மைக் காலமாய் வருகின்ற ஊடகத் தகவல்கள் அனைத்தும் நெஞ்சைப் பதறவும், சமூகத்தை சிதற வைக்கின்றனவாய் அமைந்துள்ளன. சான்றாய் ஒன்று; விளையாடிக் கொண்டிருந்த நான்கு வயது சிறுமி நாற்பத்தைந்து வயது வாலிபனால் சீரழிக்கப்பட்டாள். என்னே காமப் பசி எத்தனை பெரிய காமக் கொடூரம். மனிதம் எங்கே எதை நோக்கிப் பயணிக்கிறது.

மேம்போக்காகப் பார்த்தால் சமூகத்தில் பெண்கள் பழகக் கூடாது என்று சொல்லும் ஆணாதிக்கம் இன்றும் கிராமப் புறங்களில் நிலவிக் கொண்டு தான் இருக்கின்றன. கணவனை இழந்த மனைவியை விதவை கைம் பெண் என்ற பட்டங்கள் உண்டு. மனைவியை இழந்த கணவனுக்கு பட்டங்கள் இல்லையே; இங்கேயே பெண்ணடிமை முளைக்கிறது. பெண்களைப் போற்றுவதை விடப் பெண்ணடிமை என்னும் இழிச் சொல்லி அகற்றி அவர்களும் மானுடப் பிறவி தான் என்று நினைத்தாலே போதும், பெண்ணியம் உயர்வு பெற்றுவிடும்.

மானுடம் போற்றும் பெண்ணியப் போராளி தந்தை பெரியார் “பெண்களுக்கு விடுதலை என்பது பெண்களால் தான் போராடிப் பெற முடியும். எந்த ஓர் ஆணும் பெண்ணும் விடுதலையையும் பெற்றுத் தர மாட்டார்கள்” என்று கூறுவார்.

அனைத்து நிலையிலும் ஒரு சமுதாயத்தை உயர்த்திக் காட்டுவதற்கு அடிப்படையாக அமைவது பெண் விடுதலையே. விடுதலை என்பது பெண் வீட்டிலிருந்து வெளியேற வேண்டும் என்பதல்ல. உரிமையையும் கடமையையும் இணைந்த வாழ்வைப் போற்றுவதே ஆகும்.

பெண்களின் வாழ்க்கை கண்ணீரில் தொடங்கி கண்ணீரிலேயே முடிவதல்ல, விடுதலையும் முழு உரிமையும் பெற்ற பெண் குடும்பத்தினரை மேலாண்மை செய்தால் அந்தக் குடும்பமே ஒரு பல்கலைகழகமாக அமையும். ●



# தள்ளுவண்டி

கீர வாங்கலையோ..! கீர..! அகத்திக்கீரை; பொன்னாங்கன்னிக் கீரை; முருங்கைக் கீரை; கீர வாங்கலையோ கீர..!

விஷம் முறிக்கும் - நஞ்சு முண்டான் கீரை; ரத்தம் சுத்தி செய்யும், அஜீரணம் அகற்றும் - புதினாக் கீரை; சிரங்கும், சீதளமும் விலக்கும் - புண்ணக் கீரை; கை, கால் முடக்கம் நீக்கும். வாயு விலகும் - முடக்கத்தான் கீரை; மூளைக்கு பலம் தரும் - வல்லாரை; நீரிழிவை நீக்கும். கண்கள் உடல் பலம் பெறும் - முருங்கைக் கீரை; ரத்த சோகையை நீக்கும் - வெள்ளை கரிசலைக்கீரை; ரத்த அழுத்தத்தை சீர் செய்யும் ,சிரங்கு மூலத்தை போக்கும் - சுக்கா கீரை; மேனி அழகையும், கண் ஒளியை அதிகரிக்கும் - பொன்னாங்கன்னிக் கீரை...

‘‘கீர வாங்கலையோ..! கீர..! அகத்திக்கீரை; பொன்னாங்கன்னிக் கீரை; முருங்கைக் கீரை; கீர வாங்கலையோ கீர..!”

“இயற்கையா கிடைக்கிற சத்தானக் கீரை; தேடி தேடி வாங்கினாலும் கிடைக்காத கீரை வகைகள் வாங்கம்மா வாங்க... கீர வாங்கலையோ..! கீர...”

‘‘எங்களுக்கு தெரிஞ்சதுலா முருங்க கீர; பொன்னாங்கன்னிக் கீர; அகத்திக்கீர நீ என்னடானா இவ்வளோ கொண்டு வச்சிட்டு அத்தனையும் கீரங்கிர கிராமத்துல இருந்து வந்து பட்டணத்துல இருக்கவங்கல ஏமாத்த பாக்குறியா....”

“இந்தா மா நாங்க ஏமாத்தி பொழைக்க பொறந்தவங்க இல்ல ஒரு ரூபா நாளும் உழச்சி சாப்பிடுறவங்க என்ன கீரைய சாப்பிட்டா என்னா பன்னும்னு சொல்லிட்டே வரேன் கேளு...”

“பித்தம், கபம், நோய்களை விலக்கும் - பரட்டைக் கீரை; வெட்டையை, நீர் கடுப்பை நீக்கும் - பிண்ணாக்கு கீரை ; சோகையை விலக்கும். கண் நோய் சரியாக்கும் - புளியங்கீரை; ஆண்மை பெருக்கும் - அரைக்கீரை; பசியைத் தூண்டும் , வீக்கம் வத்தவைக்கும் - குப்பை கீரை; கல்லீரலை பலமாக்கும். காமாலையை விலக்கும் - மஞ்சள் கரிசலை; வெள்ளை விலக்கும் நீர் கடுப்பை நீக்கும் - கொடி பசலைக் கீரை; தசைகளைப் பலமடையச் செய்யும் - பசலைக் கீரை; சரும நோய்களைத் தீர்க்கும் பால்வினை நோயைக் குறைக்கும் - சிறு பசலைக் கீரை; சிறுநீரகத்தை நன்கு செயல்பட வைக்கும். உடல் வெப்பத்தைத் தணிக்கும் - காசினிக் கீரை; ரத்தத்தைச் சுத்தமாக்கிப் பித்தத்தைத் தெளிய வைக்கும் -அகத்திக் கீரை...”

‘‘கீர வாங்கலையோ..! கீர..! அகத்திக்கீரை; பொன்னாங்கன்னிக் கீரை; முருங்கைக் கீரை; கீர வாங்கலையோ கீர..!”

“என்னமா நீ இப்படி சொல்லிட்டே இருக்க இவ்வளோ கீர இருக்குனு இப்போ தா தெரிது... நீயோ நல்ல கீரையா 2 குடுமா ஒடம்புக்கு சத்தா...”

“இந்தாங்க ம்மா முளைக் கீரையும் மணத்தக்காளி கீரை எடுத்துட்டு போய் சமச்சி சாப்பிடுங்க...”

“யம்மா... கீரக்கார அம்மா... இந்த ரெண்டு கீரையும் உடம்புக்கு என்ன பன்னும்னு சொல்லவே இல்ல...”

‘‘முளைக் கீரை - பசியை ஏற்படுத்தும். நரம்பு பலமடையும்; மணத்தக்காளி கீரை வாய், வயிற்றுப்புண் குணமாக்கும்; சமச்சி சாப்பிட்டு நா அடுத்த முற வரும்போது சொல்லுங்கமா எப்படி இருக்குனு....”

‘‘கீர வாங்கலையோ..! கீர..! அகத்திக்கீரை; பொன்னாங்கன்னிக் கீரை; முருங்கைக் கீரை; கீர வாங்கலையோ கீர..!”

“அண்ணே, அண்ணே இந்த தள்ளுவண்டிய கொஞ்சம் மேலத் தூக்கி வையுங்க அண்ணே மாட்டிகிடுச்சி, வண்டி ரொப்ப கீர இருக்கு வெயிட் ஆ இருக்கு கொஞ்சம் உதவிப் பண்ணுங்க அண்ணே..!”

“சரி, ம்மா.. நா இந்தபக்கம் புடிக்குறேன் நீ ! அந்த பக்கமாபுடி...”

**மு.சி.அறிவழகன்**

“தள்ளு; தள்ளு கொஞ்சமா தூக்கி புடிமா நா தள்ளுரேன் ம் அவ்வளவு தா மா வந்துடுச்சி; எதுக்கு மா இந்த வேகாத வெயில இப்படி கஷ்டப்படுர உங்க வீட்டுக்காரர் என்ன பன்னுறார்”

“அவன பத்தி ஏன்னே கேக்குற என்னையும் என் புள்ளைங்களையும் விட்டுட்டு இன்னொருத்தி கூட வாழ்ந்துனு இருக்கான் அவன வச்சிட்டு நா என்ன காலு மேல கால் போட்டுட்டா சாப்பிட முடியும்..! டெயிலி சம்பாதிக்குறத வச்சி வயித்த கழுவிட்டு புள்ளைங்கள ஆளாக்க தா இப்படி கஷ்டப்படுறேன்...”

“சரிம்மா சரிம்மா கவல படாத மேல இருக்கவ பாத்துட்டுதா இருக்கா எல்லா நல்லதுக்கே நடக்குதுனு அவன் மேலையே பாரத்த போட்டுட்டு பொழப்ப பாரு..!”

“ஓ மேல இருந்து இந்த கொடுமைய வேற பாத்து ரசிச்சிட்டு இருக்கானா அவ, அவ கடவுளா இல்ல என்ன..! கஷ்டப்படுற நேரத்துல உதவுற மனுசன் கடவுளா இல்ல கடவுள்னு கோவிலுக்குள்ள இருக்க கல் கடவுளா..?”

“என்னம்மா நீ இவ்வளவு விரக்தில பேசுற; என்ன இருந்தாலும் கடவுள போய் இப்படி பேச கூடாது மா..!”

“அஞ்சி வட்டிக்கு கடன் வாங்கி தள்ளுவண்டி போட்டு தெனம் தெனம் தூக்கம் இல்லாம மார்க்கெட் போய் புளுக்கத்துல கொசுக்கடில காத்துஇருந்து பேரம்பேசி 40 வக கீர வாங்கி அத பொதிமாடு மாறி; மாறி மாறி சுமந்து எடுத்து வந்து கூவி கூவி விக்கிறதுக்குள்ள பாதி கருகிபோயிடும் இருக்கறத காப்பாத்த தண்ணீய தெளிச்சி தெளிச்சி கீரைய காயவிடாம துணியப் போட்டு போத்தி, புள்ளைய பாத்துக்குற மாதிரி பொத்தி பொத்தி பாத்து விக்கிறதுக்குள்ள பொழுது சாஞ்சிடும்... காஞ்சத தூக்கி குப்பைல போட்டு அடுத்தநாள் மொதலுக்கு அடுத்தவன் கிட்ட கையேந்தி நிக்குறத பாக்க கடவுள் எனக்கு எதுக்கு..!

“சரிம்மா தெரியாம உன்ட்ட பேச்சு குடுத்துட்டேன் , மணலிக்கீரை குடு...”

“இந்தாண்ட இந்தாங்க நா மணலிக்கீரை; நா பேசுனத தப்பா எடுத்துக்காதீங்க நா உண்மையை உணர்ந்த தா சொன்னேன் உங்க நம்பிக்கைய நோகடிக்க சொல்லல...”

“அவங்க அவங்க கஷ்டம் அவங்களுக்கு கீரை எவ்வளவு ஆச்சி 20 ரூ நா சரி இந்தா மா வச்சிக்கோ வரட்டுமா..! ”

சரி நா நன்றி! வண்டியதூக்கிவிட்டதுக்கு...

**அஞ்சி வட்டிக்கு கடன் வாங்கி தள்ளுவண்டி போட்டு தெனம் தெனம் தூக்கம் இல்லாம மார்க்கெட் போய் புளுக்கத்துல கொசுக்கடில காத்துஇருந்து பேரம்பேசி 40 வக கீர வாங்கி அத பொதிமாடு மாறி; மாறி மாறி சுமந்து எடுத்து வந்து கூவி கூவி விக்கிறதுக்குள்ள பாதி கருகிபோயிடும் இருக்கறத காப்பாத்த தண்ணீய தெளிச்சி தெளிச்சி கீரைய காயவிடாம துணியப் போட்டு போத்தி, புள்ளைய பாத்துக்குற மாதிரி பொத்தி பொத்தி பாத்து விக்கிறதுக்குள்ள பொழுது சாஞ்சிடும்...**



கீர வாங்கலையோ..! கீர..! அகத்திக்கீரை; பொன்னாங்கன்னிக் கீரை; முருங்கைக் கீரை; கீர வாங்கலையோ கீர..!

சளி, இருமலை துளைத்தெறியும் - கல்யாண முருங்கைக் கீரை; அசதி, சோம்பல் நீக்கும் - தும்பை; நீரடைப்பு நீக்கும் - முள்ளங்கிக் கீரை; பித்தம் விலக்கும். உடல் சூட்டைத் தணிக்கும் - பருப்புக் கீரை; வாதத்தை விலக்கும். கபத்தைக் கரைக்கும் - மணலிக்கீரை; தாது விருத்தியாகும் - சக்கரவர்த்திக் கீரை; மலச்சிக்கலை நீக்கும். மண்ணீரல், கல்லீரலைப் பலமாக்கும். வாத, காச நோய்களை விலக்கும் வெந்தயக் கீரை; இருமலைப் போக்கும் - தவசிக் கீரை; ஆண்மை தரும் சரும நோய் விலக்கும். சளி நீக்கும் - தூதுவளை; தாய்ப்பாலைப் பெருக்கும் - வெள்ளைக் கீரை...

“கீரக்கார ஆண்டி எங்க அம்மா பொரியல் செய்ய... கீர வாங்கிட்டு வர சொன்னாங்க எந்த கீரை நல்லா இருக்குமோ அத குடுங்க...”

“சரி டா தம்பி இந்தா இந்த மூனு கீரையும் கொண்டு போய் டெயிலி ஒன்னு செஞ்சி தரசொல்லி சாப்பிடு...”

“இந்த கீர பேரு லா என்ன ஆண்டி..?”

“இது விழுதிக் கீரை - பசி எடுக்க வைக்கும்; இது கொடி காசினி - பித்தத்தப் போக்கும்; இது துத்திக் கீரை - வாய், வயிற்றுப்புண்ன போக்கும் மா...”

“நீங்க ரெம்போ ஸ்வீட் ஆண்டி ஐ லவ்வு !” இங்க வா மா... யா ஆண்டி..! உம்மா..! சரி ஆண்டி பாய் அம்மா தேடுவாங்க... டேய் டேய் பாத்து போ...”

‘‘கீர வாங்கலையோ..! கீர..! அகத்திக்கீரை;பொன்னாங்கன்னிக் கீரை; முருங்கைக் கீரை; கீர வாங்கலையோ கீர..!”

ஆண்மையைப் பெருக்கும். வாய்ப்புண் அகற்றும் - நருதாளி கீரை; சளியை அகற்றும் -மூக்கு தட்டைக் கீரை; மூலநோயைப் போக்கும். சீதபேதியை நிறுத்தும் - கார கொட்டிக்கீரை;

வாய், வயிற்றுப்புண் அகற்றும். வெள்ளை மூலம் விலக்கும் - துத்திக் கீரை , கீர வாங்கலையோ கீர..!

“என்னமா பாதி கீர அப்படியே இருக்கு..! அப்படியே மூட்ட கட்டுற; நாளைக்கும் இதையே கொண்டுவந்து விக்க போறியா என்ன..?”

இல்ல மா நாளைக்கு வர தாங்காது காஞ்சதுலா குப்பைல போடனும் கொஞ்சம் நல்லா இருக்கரத ஆட்டுக்கு மாட்டுக்கு போட வேண்டி தா என்னபன்றது எங்க பொழப்பு அப்படி சில நாள் அசலும் போய் மொதலும் போகும் சில நாள் அசல்மட்டும் போகும் ஏதோ ஒருநாள் நாலு காசு கையில நிக்கும்...

சரிம்மா நா வறேன் நாளைக்கு தேவையான கீரைய சந்தைக்குப் போய் வாங்கினு வறேன் நாளைக்கான பொழப்பப் பாக்கணும்.

**(விரைவில் வெளிவர இருக்கும் "தினக்கூலி" புத்தகத்தில் இருந்து)**

# காணாமல் போன காடும் கரையும்!

கவிஞர். நா.காமராசன் மண்டகொளத்தூர்



அப்போதெல்லாம்
ஏரிப்பாசனம்தான்;
ஊருக்கு ஒருத்தர்
ரெண்டுபேருதான்
ஆயில் என்ஜின் பம்புசெட்
வச்சிருப்பாங்க!

அந்த வருச அடைமழைல
ஆறு,ஏரி,குளம்,குட்டைனு
ஒண்ணுவிடாம நெரம்பிருச்சி
எங்க பார்த்தாலும்
வெள்ளக்காடுதான்!

சின்ன கால்வாயும்
பெரிய கால்வாயும்
தூர்வாரி வெச்சிருந்தாங்க
ஓடநகரத்து ஏரிவரைக்கும்
சலசலன்னு தண்ணி
ஆறாட்டம் ஓடுது!

ஆங்காங்கே கழனியிலே
நாத்தங்கால் தெளியவச்சிருந்தாங்க;
சிலபேர் நாத்துவிடவும்
செய்ஞ்சிட்டாங்க!

தூக்கணாங்குருவிகளும்
கொக்குகளும்
ஊர் திரும்பியிருந்தன;
ஆங்காங்கே தென்னைகள்
ஊஞ்சலாடியது!

கடைமடைத்தண்ணீர்
ஆற்றுவெள்ளமாய்
பாய்ந்தோடியது;
அங்கே அணைகள் கட்ட
கைகள் நீளவில்லை!

தண்டேரியாமூட்டு சேட்டும்
மூக்கிவீட்டு ஐயாரெட்டும்
துண்டை கோவணமாக்கி
நாத்து பிடுங்கிக்கொண்டிருந்தார்கள்
முனிக்கண்ணு கழனியில;
தாலுக்கத்த எடுத்துக்கொடுத்து
கொண்டிருந்தான் முனுசாமி
பேரன் வெடக்காலன்!

மலையாமூட்டு காக்காணியில
தெம்மாங்குச் சத்தத்தோடு
நடவுச்சத்தம்;
பூவாயிக்கெழவி பாட்டுச்சத்தம்
ஓடநகரத்து ஏரிக்கரைத்
தாண்டியும் எதிரொலித்தது!

அல்லியாத்தான் காட்டுவாக்கேணில
மருந்தடிக்கிற சத்தம்
ஊருக்குள்ளாற வரைக்கும்
கேட்டது; பால்டாயில் வாசனை
காற்றில் அலையடித்து வந்தது!

கட்டையனும் வேலய்யனும்
வரப்பு மேட்டில்
நண்டு பிடித்துக்கொண்டிருந்தார்கள்;
அவ்வப்போது தண்ணி
பாம்புகளோடும் மல்லுக்கட்டிக்
கொண்டிருந்தார்கள்!

அதோ தூரத்தில்
பாஞ்சாலைப் பாட்டி
பசுமாட்டிற்கு புல்லறுத்துக்
கொண்டிருந்தாள்; போனவாரம்தான்
காராம்பசு கெடேரிக்கண்ணு
போட்டிருந்தது!

புல்லாக்குட்டையில மாடுமேய்க்குற
பசங்க நீச்சலடித்துக்
கொண்டிருந்தார்கள்;
கரையின் புங்கமர நிழலில்
அசைபோட்டுக் கொண்டிருந்தன
கால்நடைகள்!

பச்சைவயல்கள் பாய்விரித்திருந்தது
தென்றல்காற்று காதுமடலை
முத்தமிட்டுச் சென்றது;
நெற்கதிர்வாசம் மண்மணக்கச்
செய்தது!

இதோ மஞ்சள்பூசிய நெற்கதிர்
குலைசாய்ந்திருந்தது;
மேற்கால பூங்கொல்லை
மேட்டிலிருந்து
கெழக்காலே வெள்ளவேரி
வரைக்கும்!

களத்துமேட்டில் சாணம்தெளித்து
இடம்பிடித்தார்கள்
டொங்கமூட்டு பாட்டியும்
கலுகுட்டு கெழவியும்;
வெள்ளாயமூட்டு டிராக்டர்தான்
கட்டடித்துக்கொண்டிருந்தது!
பதரையெல்லாம் சலித்துக்
கொண்டிருந்தார்கள் குடுகுடுப்பைக்
கிழவிகள்!

மலைமலையாய் வைக்கோல்
போர்கள் வீட்டுக்குப்
பின்னால்;
இதுவரை வீடுசேரவில்லை
களத்துமேட்டு பொன்னிநெல்!
வாங்கிய கடனுக்கு
கரையேறிக்கொண்டிருந்தது
தரகன் காசியின் அரிசி ஆலைக்கு!

மிச்சமீதியாய் இன்னும்
அந்த காடுகரைகள்
வானம்பார்த்த பூமியாய்
ஏங்கித் தவிக்கிறது!

உழவு மறந்த பிள்ளைகள்
இனி ஊரைக்கடந்து
கைகட்டி வாய்ப்பொத்தி
நிற்கிறோம்;
வயக்காட்டில் முளைத்த
அடுக்குமாடி மென்பொருள்
மையத்தில்!

சோறுவிளைந்த பூமியில்
கற்கள் முளைத்திருக்கிறது
அங்கிங்கெனாதபடி;
இங்கே நெற்களுக்கு
விலையில்லை!
மனைக் கற்களுக்கே விலை!




# Jora Life Care



**ச.செல்வகுமார்**
நிறுவனர் மற்றும் தலைவர்

Special for

- இருதய நோய்
- புற்றுநோய்
- உடல்பருமன்
- கண்நோய்
- எய்ட்ஸ்
- தோல் நோய்கள்
- இரத்த குறைபாடுகள்
- முடி உதிர்தல்
- இளமையான தோற்றத்திற்கு
- பக்கவாதம்

ஆகிய அனைத்து விதமான நோய்களிலிருந்து விடுதலை பெறலாம்

**எமது தயாரிப்புகள்**




புத்துணர்ச்சி பெறும்
நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்
சிறுவர் முதல் பெரியவர்கள் வரை
அனைவருக்கும் பொருந்தும்

**எங்களது தயாரிப்பு பொருட்களை விற்பனை செய்ய**
**மாவட்ட வாரியாக முகவர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் தேவை!**

**அலுவலகத்தில் பணிபுரிய அலுவலக ஊழியர்கள் தேவை!**

**தகுதியின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்**

**கல்வி தகுதி:** 10 முதல் அனைத்து டிகிரி. **சம்பள அளவு:** 10000 முதல் 30000

மேலும் விபரங்களுக்கு

## JORA LIFECARE LLP MUMBAI

4th Floor of 'Chandreshwar Bhavan' 178, Road: Laxmibai Kelkar Marg,,
Location: Sion Hospital, near videophone gallery Sion, Mumbai - 400022

022 24010280 9321220209 Call:9930720123

சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு



# பெரியார் பால் பண்ணை

aavin

எங்களிடம் நாட்டு மாடுகளின் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும். மற்றும் ஆவின் தயாரிப்புகளான பால், தயிர், மோர், வெண்ணெய், நெய், பால் பவுடர், கூல்டிரிங்ஸ், ஐஸ்கிரீம்கள், சுவீட்ஸ் மற்றும் கார வகைகள் அனைத்தும் ஆர்டரின் பேரில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

**24 மணி நேரமும் நுகர்வோர் சேவை உண்டு. டோர் டெலிவரியும் உண்டு.**

## ஆவின் தயாரிப்புகள்

1. பால்
2. மசாலா மோர்
3. தயிர்
4. வெண்ணை
5. நெய்
6. ஐஸ்கிரீம்
7. பால்கோவா
8. பாதாம் பவுடர்
9. வெணிலா
10. ஆரஞ்சு வெணிலா
11. ஆப்பிள் மில்க்
12. கேரட் மில்க்
13. வாழைப்பழம் மில்க்
14. சாக்லேட் மில்க்
15. பாதாம் மில்க்
16. மாம்பழம் மில்க்
17. நறுமணபால்
18. மாவின்
19. ஸ்ட்ராபெரி
20. அன்னாசி
21. குல்பிபார்
22. சாக்கோபிஸ்தா
23. பட்டர்ஸ்காட்ச்
24. சாக்கோபார்



**தி.க.சண்முகம்**
பெரியார் பால்பண்ணை
8/4 காந்தி சாலை, சின்னதாராபுரம் அஞ்சல்
அரவக்குறிச்சி வட்டம்,
கரூர் மாவட்டம்-639202
9445217819 – 9159318919

**பெரியார் செல் பார்க்**
**வள்ளல் பெரியார் மக்கள் பணியகம்**
பேருந்து நிலையம்
சின்னதாராபுரம், கரூர் மாவட்டம்.

**வாழ்க பெரியார்! வளர்க பகுத்தறிவு!**



FROM
ARIVAZHAGAN CM
Editor & Publisher
kaithadi Monthly
2/343, Kamalapuram Village
Mallikuttai Post,
Karimangalam
Dharmapuri - 635 205
Contact : 7373333078
kaithadimonthly@gmail.com


அச்சிடப்பட்ட செய்திநூல் அஞ்சல் – தனிச்சுற்று

Printed Magazine Book Post - Private Circulation


Owned, published by C. Arivazhagan printed at JAYASRI PRINTPACK, No: 223, P.K.N. Road, Murugan Colony (bye pass), Sivakasi - 626 189. Published from Madhi Publication, Dharmapuri - 635 205. Editor. C. Arivazhagan, email: kaithadimonthly@gmail.com.